நவம்பர் - 2018

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளிஅரசி

மங்கையரின் தோழி

ஒளி 05 இதழ் 09

பக்கங்கள் : 80(68+12)

விலை 100 /=

அனைவருக்கும்
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்.......



## உள்ளே


- அரசியல் வாதிகளிடம் ஒரு வேண்டுகோள்
- அன்பே அரணாக
- சாரதிகளே உசாராகுங்கள்
- சாதிக்கும் சாவகச்சேரி
- தியாகத்தின் சின்னங்கள்
- தீபாவளிகள் பல
- தரம் 5 - விவாதக்களம்
- ஆண் தேவதை...


இலவச இணைப்பு → அறிவுக் களஞ்சியம் (12 பக்கம்) | தரம் - 04 பயிற்சிப் பரீட்சை - திருத்தற் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்
# KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ்

DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 071 4546 960



கல்விச்சேவைக்காக
ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விருது.

★★★ கல்விச்சேவையுடன் ஒன்றிய நிறுவனம் ★★★

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி.
- இரவு நேர வாகனப்பயிற்சி.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப்பயிற்சி.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

**யாழ்ப்பாணம்**
- சுன்னாகம். 021 224 2022.
- பருத்தித்துறை. 021 492 3201
- கச்சேரி. 021 222 6699
- ஆவரங்கால். 021 222 6688
- தெல்லிப்பளை. 021 224 3737
- சாவகச்சேரி. 021 227 0700
- நெல்லியடி. 021 300 6550

**கிளிநொச்சி**
- கிளிநொச்சி. 021 228 5505
- விசுவமடு. 021 320 1515
- பூநகரி. 021 320 1818
- முழங்காவில். 021 300 6544

**மன்னார்**
- மன்னார். 023 225 1656

**வவுனியா**
- வவுனியா. 024 222 7777.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி.
வடமாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# i7c COMPUTERS

## கணினி காட்சியறை

***All Kind of it Solutions***

**Computer sales, Laptop sales, Maintenaence, Repair, CCTV camara, Networing, Antivirus Solutoons**



intel ASUS hp acer TOSHIBA lenovo SAMSUNG SONY LG DELL

*124B* பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(சுகர்னி வைத்தியசாலைக்கு அருகாமையில்)

021 222 4959 0777 683 676

---

# வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள்

## பொதிகள் சேவை




20 வருடகால அசைக்க முடியாத
நம்பிக்கையை வென்ற நாம்

# அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய்வகை, மருந்துப்பொருட்கள், பழவகைகள், பால்மா வகைகள் என்பவற்றையும் அனுப்ப முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். 021 222 6113

கிளை நிறுவனம் : இல 10, புதிய மாநகரசபை
கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம். 021 222 3536

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்




அன்பே அரணாக

6

பயிற்சி திருவினையாக்கும்

8






சாதிக்கும் சாவகச்சேரி

11

நீளிரவில் ஓர் தனிமை

21





அரிதாரம் அழகல்ல

22

தீபங்கள் பல

28





செல்லப்பிராணிகளும் செல்லப்பொழுதுகளும்

42


மேலும் பல சுவாரஷ்யமான விடயங்களுக்கு உள்ளே புரட்டுங்கள்


டிசம்பர் 2017

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளிஅரசி

மங்கையரின் தோழி

அச்சிட்டு வெளியீடுவோர்

மாஸ்மீடியா சேவிஸ்

இல. 70, டேவிட்சன் றோட், கொழும்பு - 04



தொடர்புகளுக்கு

தொலைபேசி : 0114320695

துரித அழைப்பு : 0718628369,0714273035

தொலைநகல் : 0112506610

E-mail : oliarazi33@gmail.com

Viber - 0714273035

கடிதத் தொடர்புகளுக்கு

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.


## ஒளிஅரசியை சந்தா மூலம் பெற்றுக் கொள்ள வேண்டுமா?

அன்பு வாசகர்களே!

ஒளிஅரசியை உங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ள கீழுள்ள வங்கி கணக்கிலக் கத்திற்கு பணத்தை வைப்பிலிட்டு வைப்புத் துண்டு, தொலைபேசி இல, தபால் முகவரி என்பவற்றை தெளிவாக எழுதி ஒளிஅரசியின் கடிததொடர்பு முகவரிக்கோ அல்லது 071 4273035 என்ற வைபர் இலக்கத்திற்கோ அனுப்பவும்.

கட்டணத்தொகை உள்நாடு

ரூ. (85X12=1020) + (30X12=360) =1380

வங்கியின் பெயர் ஹற்றன் நஷனல் வங்கி.

வைப்பிலிடவேண்டிய பெயர்

mass media services

வங்கி கணக்கு இலக்கம்

009010383405

வெளிநாடு 50$

## சந்தா தாரருக்கான விசேட சலுகைகள்

01) அங்கீகரிக்கப்பட்ட அளவில் உங்கள் குடும்ப உறவுகளின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இலவசமாக பிரசுரிக்கலாம்.

02) ஏனைய விளம்பரங்களை 50% கழிவில் பிரசுரிக்கலாம்.

03) உங்கள் குடும்ப உறுப்பினர்களின் தரமான ஆக்கங்களை பிரசுரிக்கலாம்.

04) நட்சத்திர இல்லத்தரசி, இம்மாதமங்கை, இலக்கியமுத்து, கவிஞர் அறிமுகம், சாதனை மாணவர் போன்ற விடயங்களுக்கு தகுதியான ஒருவரை நீங்கள் எமக்கு சிபாரிசு செய்யலாம்.

05) உங்கள் தொழில் அலுவலகம் அல்லது வீட்டு முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ விநியோகிக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் மலர்கள் பேசுகின்ற தருணம்

## அரசியல் தலைமைகளுக்கு ஒரு அவசர வேண்டுகோள்

கார்த்திகை என்பது ஈகையின் மாதம். தீபங்கள் பேசும், ஒளிச்சுடர்கள் பிரகாசிக்கும், வண்ண விளக்குகள் அலங்கரிக்கும், மேகம் மெல்ல இறங்கி பூமியை முத்தமிடும், வானவர்கள் போற்றப்படும், எம் வரலாறுகள் காலகாலமாய் பேசப்படும்... தீமைகளைக் கொழுத்தும் தீபங்களுக்கான மாதம்.

தீபம் என்பது தன்னை கரைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு ஒளி வழங்குகிறது. பிறர் நலம் பேணுவதற்காக, தான் உயிரையே தியாகம் செய்ய வேண்டும் என்பது கார்த்திகை தீபத்தின் தத்துவம். அந்த மகத்துவமான உண்மையை நாம் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். தன் மக்களின், தன் இனத்தின், தன் சமூகத்தின் முன்னேற்றம் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் சிந்திப்பது கூட ஒரு வகையில் பிறர் நலம் பேணுதல் தான்.

உதித்தலும் மறைதலுமாய் நீர்க்குமிழி போன்று நகரும் இந்த வாழ்க்கையில் நிலையான தூண்களாய் எஞ்ஞான்றும் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் கார்த்தி கையின் நாயகர்கள். அவர்களின் தியாகங்களில் தான் நாம் கால்பதித்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எமது இனத்திற்கான பராக்கிரமமாக இருந்தவர்கள் எமது இந்த மகாவீரர்களே. பிறர் வாழவேண்டும் என்னும் உயரிய இலட்சியத்திற்காக தம் உயிர்களை ஈகம் செய்த வர்கள். எமது தேச வரலாற்றில் பின்னிப்பிணைந்தவர்கள். அவர்களின் வாழ்க்கைஎன்பது சாதாரணமானவர்களின் வாழ்வில் இருந்து வேறுபட்டது. அது பூஜிக்கப்படவேண்டியது. தன்னைக்கொடுத்து அடுத்தவரைக் காக்கும் இறையியல் மலர்கள் அவர்கள்.

அவர்களின் தியாகங்கள் எதற்காக ஆனதோ அந்த ஒளியைக்காணும் சின்னதொரு கீற்று கூட இந்த ஒரு தசாப்த காலத்தில் எட்டப்படவில்லை. அவர்களின் உன்னதங்களை மெய்யாக்கும் பணியில் சகல அரசியல் தரப்பினரும் இணைந்துகொள்ளவேண்டியதை உறுதிப்படுத்தும் இறுதிக்காலமே இந்த கார்த்திகைக் காலமாகும். தமிழ் அன்னையின் தாலாட்டில் கண்ணுறங்கும் அந்த மகா வீரர்களை ஒரு கணம் நெஞ்சில் நினைத்து, எப்படியும் வாழ்ந்துவிடலாம் எனும் எண்ணத்தைக் களைந்து எமது வாழ்க்கைப் பாதையைச் செம்மைப்படுத்துவோமாக. இந்த இறையியல் மலரால் அரசியல் அர்ச்சனை செய்து பிழைப்பு நடத்தும் எல்லாக் கட்சிகளும் ஒருவிடயத்தை மறந்துவிட்டன. 10 ஆண்டுகளுக்கு முன்பு பல்லாயிரம் உயிர்களால் உரம் ஊட்டப்பட்ட தமிழினம் எனும் விதை ஏன் இன்னும் முளைக் கவில்லை என்பதை அரசியல் கடந்து ஒருகுடையின் கீழ் யாருமே சிந்திக்கவில்லை போர் ஓய்ந்த பின்பு ,இந்த சிங்கள பேரினவாதம் எமக்கு எதையும் தராது என்பதை சர்வதேசத்திற்கு காட்ட நாம் எடுத்த காத்திரமான பணி என்ன என்பதை ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதியும் சிந்திக்க வேண்டிய கனத்த தருணம் இது . ஒவ்வொரு தமிழ் அரசியல் பிரதிநிதியும் தமது கட்சியை கடந்து ஒருமித்து ஒன்று பட்டு குறிக்கப்படட சில மாதம் விடுமுறை அறிவித்து விட்டு சகல பணிகளில் இருந்தும் விலகி அரச செயற்பாடுகளை முடக்கி அமைதியான முறையில் எமது ஒற்றுமை பலத்தை ஏன் சர்வதேசத்திற்குக் காட்டக்கூடாது? இந்தப் பணியை ஏனைய மாற்றுக் கட்சிகளுடனும் பேசி சம்பந்தன் ஐயா ஏன் முன்னெடுக்க கூடாது ,அப்படி முன்னெடுத்தால் ஒத்துழைக்காத அரசியல் வாதியை மக்களும் அடையாளம் கண்டு அவர்களை அரசியலில் இருந்து ஓரம் கட்ட உதவும் இதைப்பற்றிச் சிந்தித்து முடிவெடுக்கவேண்டிய பிரசவ காலமே கார்த்திகை .முன்னெடுக்க சம்பந்தன் ஐயா முன்வருவாரா ?

– ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நந்தவனப் பூக்கள்

பரிந்துணர்வு
+
விட்டுக்கொடுப்பு
= இனிய இல்லறம்

திருமதி சந்தியா சந்தோஷ்

# அன்பே அரணாக

இல்லறம் என்பது நேசங்களினால் மட்டும் நிறைந்திருக்கும் பூந்தோட்டமோ வலிகள்மட்டும்கொண்ட முட்புதரோ அல்ல, மலர்களும் முட்களும் சேர்ந்திருக்கும் ரோஜாக் கூட்டம்தான். அந்த ரோஜாத்தோட்டத்தில் ரசனை கொண்டுவிட்டால் அதன் முட்கள் குத்தும் வலி கூட இனிமைதான், அந்த இனிமையை உணர்ந்து வாழும் தம்பதிகளே இல்லற பந்தத்தில் வெற்றிக்கனி பறிக்கின்றனர்.

சித்தார்த்தும் சுகிர்தாவும் இனிமையான மணவாழ்வில் அனைவரின் ஆசியுடனும் இணைக்கப்பட்டனர். மணமாகி வந்த சில நாட்கள் மகிழ்ச்சியாகத்தான் நகர்ந்தது சுகிர்தாவின் இல்லறவாழ்க்கையும். எங்கே எப்போது அந்த மகிழ்ச்சியில் விரிசல் தொடங்கியது என்பது அவளுக்கே தெரியவில்லை.

ஒருநாள் கணவனின் பேர்ஸை எடுத்துப் பார்த்த சுகிர்தா அதில் மாமியாரின் புகைப் படம் இருப்பதைக் கண்டதும் ஏதோ ஒரு வித கோபத்திற்கு ஆளானாள். எதுவும் கேட்காமல் அந்தப் படத்தை எடுத்துவிட்டு தனது படத்தை வைத்துவிட்டாள்.

மாலையில் படம் மாற்றப்பட்டிருப்பதைக் கண்ட சுந்தர் கடுங்கோபம் கொண்டான்.

உன்னை யார் படத்தை மாத்தி வைக்கச்சொன்னது? ஏன் எனக்கு அந்த உரிமை இல்லையா? ஏய் , பாசத்தில போய் உரிமை, தனிமை என்று பேசிட்டு, அது அம்மாவோட படம், சின்ன வயசில இருந்து இருக்கிறது, வேணும்னா அதோட சேத்து உன்னோடதையும் வைக்கிறது தானே, அதவிட்டிட்டு அதட்டிய கணவன் மீது கோபம் தான் வந்தது அவளுக்கு.

அதெப்படி கணவன் அப்படிச்சொல்லலாம் என அவளும் அவள் செய்தது மகாதவறென அவனும் போட்டி போட்டு கோபித்துக் கொண்டனர்.

அவ்வேளை இருவரதும் முகங்களில் இருந்தே அவர்களுக்குள் ஏதோ பிரச்சினை என்பதை அறிந்துவிட்ட சித்தார்த்தின் தாயார், மகனை அழைத்து பக்குவமாய் புத்தி சொன்னார்.

தம்பி, உங்களுக்குள்ள எதனால பிரச்சினை என்று அம்மாவுக்குத் தெரியல, ஆனா ஏதோ பிரச்சினைன்னு தெரியுது, அவ சின்னப் பொண்ணு, ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள் அவ மனசில இருக்கும், நீதான் பாத்து நடக்கணும், நீயும் ஏட்டிக்குப் போட்டியா நின்னா பிரச்சினை பெரிசாயிடும், பொண்ணுங்களோட மனசு விசித்தரமானது, உன் அம்மாவும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அப்பிடி இருந்து வந்தவதான், எதைச் சொல்றதுன்னாலும் அன்பா, ஆதரவா சொல்லு, அவ வீடு, உறவுகள் என்று எல்லாத்தையும் விட்டு உன் உறவை மன சில பெரிதா நினைச்சு வந்திருக்கிறா, அந்த எண்ணம் உடையுற மாதிரி ஒருகண மும் நடந்திடக்கூடாது, புரியுதா அவ்வாறே மருமகளிமும் மெல்ல இதமாய் சில புத்திமதிகளைச் சொன்னார். தன் மகன் செய்தது தவறெனவும் இப்போது அவனி டம் சுகிர்தாவிற்கே முதலுரிமை எனவும், சுகிர்தா தனக்கு இன்னொரு மகளாய் வந்தவளெனவும் கூறியதைக் கேட்டதும் மனம் கனிந்துவிட்டது சுகிர்தாவிற்கு.



மாமியார் தன்னை நேசிக்கிறார் என்பதை எண்ணியதுமே அவளது கோபம் எல்லாம் பஞ்சாய் பறந்துவிட்டது.

தேவையற்று தான் கொண்ட கோபத்தை எண்ணியதும் தன் மீதே வெட்கம் கொண் டவள், கணவனிடம் சென்றாள். தான் செய்தது தவறெனக்கூறி மன்னிப்பையும் கேட்டுக்கொண்டாள். சித்தார்த்தும் மனை வியின் படத்தையும் சேர்த்து வைத்துக் கொண்டான். மனைவி சொன்னதைக் கேட்டதும் மனம் இலேசாகிவிட சமாதா னமாகிவிட்டான். அதுதான் அவர்களுக்குள் நடந்த முதலும் கடைசியுமான உரிமைப் பிரச்சினை ஆனது.

மாமியாரும் மருமகளும் சேர்ந்து கொண்டதில் சித்தார்த்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி என்றாலும் சற்று வருத்தமாகவும் இருந்தது. ஏனென்றால் சுகிர்தா எப் போதும் மாமியாரையே சுற்றிச்சுற்றி வந்தாள். கோயிலுக்கோ, கடைக்கோ செல்வதென்றால் கூட மாமியாருடனே சென்று வந்தாள்.

சுகிர்தாம்மா, சித்தார்த் பாவம், அவ னோட போயிட்டு வாம்மா எனக் கூறுமளவிற்கு மாறிப்போனது நிலைமை.

உறவுக்காரப் பெண்கள் எல்லோரும் முகவாயில் தேய்த்துக்கொண்டே, மரு மகள்னா உனக்கு எப்பவும் உசத்திதான் எனும் அளவிற்கும், சித்தார்த்தின் சகோ தரிகள், சுகிர்தா அண்ணின்னா அம் மாவுக்கு எப்பவும் தனிப்பிரியம் என்று செல்லமாய் பொறாமை கொள்ளும் அள விற்கும் மாறிப்போனது மாமியார் மரு மகள் இருவருக்குமிடையிலான உறவு.

கணவனின் அன்னையை மாமியார் என எண்ணாது அம்மாவாக எண்ணி விட்டாலும், மகனின் மனைவியை மரு மகள் என எண்ணாது, மகனின் சரிபாதி என எண்ணிவிட்டாலும் அங்கே உரி மைப்போராட்டம் தோற்று விடுகிறது. அன்பென்ற ஆயுதம் வென்றுவிடுகிறது. காலங்கள் விரைந்தோடிய போதும் ஆர பத்தில் கட்டப்பட்ட அந்த அத்தி வாரமான அன்பு அவர்களுக்குள் உடை யவே இல்லை. அது நீண்டு வளரத் தொடங்கியது.

பல ஆண்டுகள் ஓடிவிட்டன, சுகிர்தாவும் திருமண வயதில் இருந்த ஆண், பெண் ணென இரு குழந்தை களுக்குத் தாயாகி யிருந்தாள். ஆனால் மாமியாரும் மருமகளும் மட்டும் மற்றவர்கள் கேலி செய்யுமளவிற்கு அன்பான மாமியார் மருமகளாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பயிற்சி திருவினையாக்கும்



ஜே.வி.விஜயசங்கர்
ஆசிரியர்
வ/பெரியகோமரசன்குளம் ம.வி

குமரன் தரம் 6 இல் கற்கிறான். கணிதத்தை தவிர ஏனைய எல்லாப்பாடங்களுமே அவனுக்கு அத்துப் படி.

ஏனோ தெரியவில்லை கணிதம் மட்டும் அவனுக்கு மண்டையில் ஏறவே இல்லை. கணித பாடம் என்றாலே ரவி சேர் வருவதற்குள் வகுப்ப றையை விட்டு ஓடி ஒழிந்து விடுவான். மணி அடித்தவுடன் ஆசிரியர் வந்து விட்டால் சேர் தண்ணி குடிக்கப் போறன், பாத் ரூம் போறன் என ஏதோ ஒரு சாட்டுச்சொல்லி வெளியே சென்று விடுவான்.

அவனது கணிதக்கொப்பி மட்டும் எழுதப்படாமல் புதிதா கவே இருக்கும். அவனுக்கு கணிதம் என்றாலே பிடிக்காது. கணிதப் பாடத்த கண்டு புடிச்ச வன கல்லால அடிக்கோணும் என்று கூறுவான்.

மற்றைய பாடங்களுக்கு அவன் முன் வரி சையில் வந்து அமர்ந்து படிப்பான். அப் பாடங்களில் தொன்னூறிற்கு மேல் புள்ளி களைப் பெறுவான்.

அவனைப்பற்றி கவலைப்பட்டு ரவி சேர் கூறுபவற்றை ஏனைய பாட ஆசிரியர்கள் நம் புவதே இல்லை. குமரனா? அவன் கெட்டிக் காரன். என்ட பாடம் நல்லா செய்வான் என அவர்கள்அவனைப்பற்றி கூறுவது அவருக்கு கோபத்தை தரும்.

குமரனுக்கு பெற்றோர் இல்லை. அக்கா வுடன் தான் இருக்கிறான். அதனால் ரவி சேர் அவனுக்கு அடிப்பதே இல்லை. கணிதமும் படித்தால் உன் நிலை வேறு எங்கோ சென்று விடும். கவனமா படியன் குமரா என ரவி சேர் சொன்னாலும் அவனுக்கு அது பிடிப் பதில்லை.

ரவி சேர் வீட்டில் கூட அவனைப்பற்றியே யோசித்துக்கொண்டிருப்பார். ஒருநாள் அவ னின் வகுப்பாசிரியருக்கு அழைப்பை ஏற்படுத்தி அவனின் வீட்டு தொலை பேசி இலக்கத்தை பெற்று குமரனின் அக்காவுடன் அவன் நிலையைப் பற்றி சில விடயங்களை கூறினார்.

மறுநாள் காலை எப்படியாவது குமரனை பிடித்து விடவேண்டும் என எண்ணிய ரவி சேர் மந்திரக்கல்லையும் எடுத்துக்கொண்டு கணித பாடத்திற்கு பெல் அடிப்பதற்கு முன் னரே அவனது வகுப்பிற்கு சென்று அவனைப் பிடித்துவிட்டார். அவனைக் கூட்டிக் கொண்டு வா குமரா உனக்கு ஒரு கிப்(க)ட் வைத்திருக்கிறேன் என்றார்.

அவனுக்கு பரிசுஎன்றால்அலாதிப்பிரியம் என அவனது அக்கா ரவி சேரிடம் கூறியிருந் தாள்.

''இந்தாகுமரா''எனஒருவெள்ளைநிறசிறிய கல்லை அவனிடம் கொடுத்தார். ''என்னசேர் கல்ல தாறிங்க'' என்றான். ''சாதாரண கல் அல்ல இது மந்திரக்கல். இதைத் தேய்த்தால் ஒரு கடற்கன்னி உன்னுடன் கதைக்கும். ஆனால் அது உன் கண்களுக்கு தெரியாது. நீ எதைக்கேட்டாலும் உனக்குத் தரும். உன் வீட்டில் எல்லோரும் உறங்கிய பின்பு இன்று இரவு முயற்சி செய்துபார்'' என்றார்.

''இன்று கடற்கன்னியிடம் ஸ்பின்னர் ஒண்டு கேக்கப்போறன்'' என்று கத்தியபடி கல்லை வாங்கிக்கொண்டு ஓடிவிட்டான்.

நேரம் இரவு ஒன்பது மணி அவனது வீட்டில் எல்லோரும் உறங்கிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன் புத்தகப்பையுடன் சாமி அறைக்குள் சென்று மெதுவாக கல்லை எடுத்தான். சிறிது பயம் இருந்தது. அதனால்தான் சாமி அறைக்குள் சென்று கதவை பூட்டாமல் கல்லை மெதுவாக தேய்த்தான்.

''குமரா குமரா...'' ஒரு குரல் அவனை அழைத்தது. ''யார் நீ'' ''நான்தான் கடற்கன்னி'' ''ஏன் என்னை அழைத்தாய்?'' எனக்கேட்டது. எதைக் கேட்டாலும் நீ தருவாயாம் எண்டு ரவி சேர் சொன்னவர் ''ஆம் உனக்கு என்ன வேண்டும்'' எனக்கு ஒரு ஸ்பின்னர் வேணும் என்ன ஆச்சரியம் உடனே நான்கு ஸ்பின்னர்கள் வந்து விழுந்தன.

எல்லாவற்றையும் ஓடிச்சென்று எடுத்து ''நன்றி கடற்கன்னி, நாளைக்கு பள்ளிக்கூடம் போய் எல்லாருக்கும் காட்டோணும்'' என்றான். ''என்ன குமரா இப்போது சந்தோசமா ம்ம்.... குமரா நான் ஒன்று கேட்பேன் சொல்வாயா. நீ எல்லாப்பாடங்களிலும் நன்றாகப்படிக்கிறாய். ஏன் கணித பாடத்தை மட்டும் படிக்கிறாய் இல்லை'' என்றது.

குமரனுக்குதூக்கிவாரிப் போட்டது. அது எப்படி உனக்குத் தெரியும்? ''எனக்கு எல்லாம் தெரியும் குமரா'' ம்ம்ஹ் கடற்கன்னி ''நான் கேட்கும் இன்னொன்று எனக்கு தருவாயா'' ''என்ன வேண்டும் குமரா?'' கணித பாடத்தில் நான் எண்பது மாக்ஸ் எடுக்க வேணும் ''நான் சொல்வதை நீ செய்தால் எண்பது என்ன நூறு புள்ளிகளை தருவேன்'' என்றது. ''கடவுளே நூறா? ஐயோ வகுப்பு பெடியனுகள் கேட்டாலே சிரிப்பாங்கள்'' கடற்கன்னி சிரித்து விட்டு ''நிச்சயமாகத் தருவேன் சரி சொல்லு நான் என்ன செய்யவேண்டும்?''

''இனிநீகணித பாடத்தைவிரும்பிபடிக்க வேண்டும். கணித பாட மணி அடித்தவுடன் வகுப்பிலேயே இருந்து ஆசிரியர் தரும் வேலைகளை செய்து காட்டவேண்டும்.'' அது மட்டுமன்றி முக்கியமான நிபந்தனை பாடசாலையில்தரும்கணக்குகளைவீட்டில் வந்து செய்து பார்க்கவேண்டும் என்று கூறிவிட்டு கடற்கன்னி சென்றுவிட்டது.

அடுத்த நாள் என்னவொரு மாற்றம். கணித பாட பெல் அடித்ததும் குமரன் வகுப்பிலேயே அமர்ந்திருந்தான். ரவி சேர் வியப்பின் உச்சத்திற்கே சென்று விட்டார். நாளுக்கு நாள் குமரனின் கொப்பியில் கணக்குள் எழுதப்பட்டு அவை திருத்தப்பட்டும் விட்டன.

முதலாம் தவணை பரீட்சை முடிந்தது. குமரனுக்கு ஐம்பது புள்ளிகள் கிடைத்தன. அன்றிரவு குமரன் கல்லை தேய்த்து கடற்கன்னியுடன் உரையாட ஆரம்பித்தான்.

''நூறு மாக்ஸ் தருவன் எண்டு சொன்னாய். ஆனால் அம்பது மாக்ஸ்தான் வந்திருக்கு'' என்றான். ''நான் சொன்ன ஒன்றை நீ செய்ய வில்லை'' ''என்ன செய்யவில்லை'' ''பாடசாலையில் தரும் கணக்குகளை வீட்டில் வந்து செய்து பார்க்க வேண்டும் என்று சொன்னேன். ஆனால் நீ அவ்வாறு செய்யவில்லையே'' என்றது. ''ஆஹ் மறந்திட்டு விளையாடப்போயிட்டன். இனி செய்து பாக்கிறன்'' என்று அவ்வாறே செய்யலானான்.

நாளடைவில் கணித பாடம் அவனுக்கு பிடித்துவிட்டது இரண்டாம்தவணைப் பரீட்சையில் அவனுக்கு நூறு புள்ளிகள். குமரன் பாத்து எழுதிட்டான் போல சேர் என சக மாணவர்கள் முறைப்பாடு செய்தனர். எல்லோருக்கும் எழுபதுக்கு குறைவு. அப்படி இருக்கும் போது அவன் யாரைப்பார்த்து எழுதியிருப்பான்? என அவனைப் பாராட்டி அனுப்பினார்.

சந்தோசத்தில் கடற்கன்னிக்கு நன்றி சொல்ல மறந்துவிட்டேனே. சரி இன்று இரவு எப்படியாவது கடற்கன்னியை நேரில் பார்த்து நன்றி சொல்லிவிடவேண்டும் என எண்ணியபடி வீடு வந்து சேர்ந்தான்.

அன்றிரவு மந்திரக்கல்லை தேய்த்தான். கடற்கன்னி கதைக்கவில்லை. மறுபடியும் மந்திரக்கல்லை தேய்த்தான். அப்போதும் கடற்கன்னி கதைக்கவில்லை. இன்று நீ என் முன் தோன்ற வேண்டும் என்று கூறியபடி மந்திரக்கல்லை தேய்த்தான். ஆஹா அவன் கண்களுக்கு முன் அவள் தோன்றிவிட்டாள். குமரனின் விழிகள் பிதுங்கியது. அக்கா அது வேறு யாரும் அல்ல. அவனது அக்கா. குமரா இவ்வளவு நாளும் உன்னுடன் கதைத்தது கடற்கன்னி அல்ல. நான்தான். கணித பாடம் மட்டும் படிக்கிறாய் இல்லை என்று ரவி சேர் போன் பண்ணி கதைச்சவர். நீ கெட்டிக்காரன், விருப்பம் வைத்தால் எதையும் செய்வாய். அதனால் தான் இப்படி செய்யும் படி என்னிடம் கூறினார்.

''பார்த்தாயாநீவிரும்பிப்படித்தபடியால் தான் முதலில் ஐம்பது பிறகு நூறு மாக்ஸ் எடுத்தாய். அவ்வாறு தொடர்ந்து செய்தால் சிறந்த பெறுபேறுகளைப் பெறலாம். இது சாதாரண கல்லுத்தான். ஆனால் நீ சாதிக்கப் பிறந்தவன்'' என்றாள். அப்போதுதான் குமரனுக்குதன்திறமை புரிந்தது. நான்படிச்சதாலதான் நூறு மாக்ஸ் எடுத்திருக்கிறன். இனி கணிதம் தான் எனக்கு பிடிச்ச பாடம் என கூறிக்கொண்டே அக்காவின் மடியில் உறங்கிவிட்டான்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப்புனல்

# பள்ளிக்கூடம்

பறவைகளின் இசை யோசையில்
துயிலெழுந்து
அண்ணாவின் சைக்கிளில்
சென்ற பள்ளிக்காலங்கள்.

அன்பான ஆசான்கள்
குறும்புக்கார நட்புக்கள்
இருந்தும் பிரம்புடன் சுற்றும்
என் அன்பான ஆசானை

ஏமாற்றி ஓடினினும்
மீண்டும் மீண்டும் அன்போடு
அழைத்தாள் என்
விபுலானந்தா அன்னையவள்

அ சொல்ல முன்
நல் ஒழுக்கமதை சொல்லித்தந்த
தேவி ஆசிரியை
பள்ளியில் தாயான
பவானி ஆசிரியை
நல் தோழமைகளை தந்த
எங்கள் கல்விக்கூடம்.

மயில் இறகெடுத்து
கொப்பித்தாள்களுக்குள்
குட்டி போடுவதற்காய்
சேகரித்த வைத்த காலங்கள்,
இறகுக்காய் சண்டை போட்ட நாட்கள்
காலங்கள் கடந்த பின்பும்
கண்களில் நிகழ்களாய் .

உடலினில் அங்கமாய்
வலம் வரும் வரை
உணந்திடா வெள்ளை
உடையின் அருமை
இன்று தூரத்தில் இருந்து
பள்ளி நினைவினை
நினைக்கையில் புரிகின்றது

அ தொடக்கம் இறுதிவரை
நல்வழி தந்த குருவே
உங்கள் கத்தல்களில் ஏறிடா கல்வி
பிரம்புகளினால் ஏறியமையால்
இன்று மனிதத்துடன்
வாழ்கின்றோம்.

திக்கம் மதி

# வேண்டாம்



விழுதுகள் வேர்களை
வெறுத்திடல் வேண்டாம்.
பொழுதுகள் விடிகையில்
பூக்களே கருகிடவேண்டாம்.
சிலைகளாய் வடித்தவை
செதுக்கா கல்லாகவே
இருந்திடவேண்டாம்.
உறவாக நினைத்த நீ
இல்லையென்றாகவேண்டாம்.
கற்பனையில் வாழ்ந்த வாழ்வு
கானலாகிடவும் வேண்டாம்.
நிஜங்களில் வாழும் மனம்
நிழலாகிடவும் வேண்டாம்.
பிறவாத பிள்ளைக்கு
பெயர் சூட்டிடவும் வேண்டாம்.
கனியாத காய்களை
தடிகொண்டு அடித்திடவேண்டாம்.
புரியாத புதிர்கள் சில
புரிந்திடவும் வேண்டாம்.
அவிழாத முடிச்சுகளை
அவிழ்த்திடவும் வேண்டாம்.
அமாவாசை, நிலவிற்கு
ஆசைப்படவும் வேண்டாம்.
நடக்காத கால்களுக்கு
இறைவா நீ ஏன்
சலங்கை பூட்டவேண்டும்?

திருமதி . தேவா மாதவன்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிக்கும் சாவகச்சேரி

கோபிகை ✍

புலமைப்பரிசில் என்பது இன்றைய காலத்தில் அதிமுக்கியமான ஒன்றாகக் கருதப்படும் பரீட்சையாகும். இவ் ஆண்டின் புலமைப்பரிசில் பரீட்சையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவியான நவாஸ்கர் நதி என்பவர் 198 புள்ளிகள் பெற்று சாதனை படைத்திருந்தார். இந்த மாணவியைச் சந்திப்பதற்காக பாடசாலைக்குச் சென்றிருந்தேன்.




கொழுகொழுவென்ற கன்னமும் தீர்க்கமான பார்வையும் பட்டாம்பூச்சியின் சுறுசுறுப்புமாக ஒரு நதிபோலவே என்னருகில் வந்துநின்றார் இந்த சாதனைக்குரிய மாணவியான நவாஸ்கர் நதி. அவளது குழந்தைத் தனத்திலும் ஒரு ஆளுமை இருப்பதைக் கண்டேன்.

அப்பா நவாஸ்கர், அம்மா செல்வரமா, ஒரே தம்பி, அபிஷேக். சின்னக்குடும்பத்தின் செல்லக்குழந்தை நதி, தேசிய ரீதியில் சாதனை புரிந்து தன்னைப் பெற்றவர்களுக்கும், தன் பாடசாலைக்கும், தான் வாழும் மண்ணிற்கும் இந்த தேசத்திற்கும் பெருமைதேடித் தந்துள்ளார்.

**எப்போதும் படிப்பீர்களா? அல்லது விளையாடி விளையாடி படிப்பீர்களா? என்ற என் கேள்விக்கு,**

விளையாட்டு நேரத்தில் விளையாடுவேன், படிக்கும் நேரத்தில் மட்டுமேபடிப்பேன், அன்றாடம் பாடசாலையில், தனியார் கல்விநிலையத்தில் படிக்கும் விடயங்களை அன்றன்றைக்கே இரவில் படித்துவிடுவேன், தவறினால் அதிகாலையில் படிப்பேன், அத்துடன் தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்துவிடுவதை வழக்கமாகக்கொண்டிருக்கிறேன் என்றார்.

பரீட்சை முடிவு இப்படி இருக்கும் என எதிர்பார்த்தீர்களா, என்றதும் உற்சாகத்தோடு தலையை ஆட்டியபடியே, ஆம், நான் அதிக புள்ளிகள் எடுப்பேன் என்று நான் எதிர்பார்த்தேன்என்றார்.

**யாருக்கெல்லாம் நன்றி சொல்லப்போறீங்கள், உங்களை ஊக்கப்படுத்திய ஆசிரியர்கள் பற்றி சொல்லுங்கள்?**

எனக்கு தரம் 01,02 இல் கற்பித்த ஆசிரியர் பாஸ்கரன், தரம் 03இல் கற்பித்த ஆசிரியர் துளசி, தரம் 04,05 இல் கற்பித்த ஆசிரியர் தவயோகராசா ஆகியோருக்கும் எனது பாடசாலை அதிபர் மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி சொல்கிறேன் என்றார்.

**கடைசியாக அந்த குட்டிப்பெண்ணிடம், உன் எதிர்கால இலட்சியம் என்னடா, என்றதும்** சற்றும் யோசிக்காமல், மக்களுக்குச் சேவைசெய்யும் மருத்துவ தொழிலையே நானும் செய்யவிரும்புகிறேன் என்றதுடன், என்னுடைய இந்த வெற்றிக்கு, என் சாதனைக்கு என் குடும்பத்தினர் அனைவரினதும் பங்களிப்பு அளப்பரியது, எனது உறவில் இருக்கும் சின்னவர்கள் கூட பல நேரங்களில் விளையாடாது எனக்காக என்னோடு சேர்ந்து படிப்பார்கள், எனது அம்மம்மா, அம்மப்பா, மாமா, மாமி அனைவரும் எனக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து என்னை வழிநடத்தியவர்கள், அவர்களுக்கும் எனது நன்றிகள், அத்தோடு நம்பிக்கையோடு படித்தால் வெற்றியடையலாம் என்பதை அனைவருக்கும் சொல்லிக்கொள்கிறேன் என்றாள் புன்னகையோடு.

அவளது வெற்றிப்பாதை இன்னும் சிறக்க வாழ்த்தி விடைபெற்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசய உண்மை

# தேனி இனம் அழிந்தால் மனித இனமும் அழிந்து விடும்

பேராசிரியர் ஜி. முகுந்தன்

**உலகின் மாமேதைகளில் ஒருவரும், மாபெரும் விஞ்ஞானியுமான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஒருமுறை இப்படி கூறினார். உலகில் உள்ள தேனிக்கள் எல்லாம் அழிந்துவிட்டால் அடுத்த 5 ஆண்டுகளில் பூமியில் மனித இனமும் அழிந்து போகும்!**



தேனிக்களின் வாழ்வது மனிதர்களின் வாழ்க்கைக்கு எந்தவகையில் அவசியமானது? மனிதன் ஒன்றும் ஈசலை போல, தேனிக்களை தின்பது இல்லையே. ஈசல் போன்ற பூச்சியினங்கள் உலகின் பிரதான உணவும் இல்லையே என்றும் நமக்கு தோன்றலாம்.

உலகமானது தவிர்க்கவே முடியாத வகையில் பல்வேறு விலங்குகளின், உயிரினங்களின் சங்கிலித் தொடரால் ஆனது. ஒரு கண்ணியில் இருந்து ஒரு உயிரினத்தை நீக்கினாலும் ஒட்டுமொத்த உயிரின சங்கிலியிலும் அது மாபெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த பொருளில் தான் ஐன்ஸ்டீனும் தனது பார்வையை வெளிப்படுத்தியுள்ளார்.

தேனிக்கள் அழிந்துவிட்டால், பூக்களின் இனச்சேர்க்கை தடைபடும் அது பூக்கும் தாவரங்களின் எண்ணிக்கையை முற்றாக அழித்துவிடும் என்பதால் அது மனிதர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும்.

காட்டை பொறுத்தவரை நாம் ஆபத்தானதாக பார்க்கும் சிங்கம், புலி போன்ற விலங்குகள் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும் அவையே இடைநிலையில் இருக்கும் மான் உள்ளிட்ட உயிரினங்களின் எண்ணிக்கையை கட்டுக்குள் வைக்க உதவுகின்றன. ஒருவேளை சிங்கம், புலி போன்றவை அவற்றின் பற்களுக்காகவும், தோலுக்காகவும் முற்றாக கொல்லப்படுமேயானால் மான் உள்ளிட்ட விலங்குகளின் எண்ணிக்கை அதிகமாகி புல்வெளி மற்றும் செடிகள் முற்றாக அவைகளில் உண்ணப்பட்டு அழிக்கப்பட்டுவிடும்.

இந்த சமநிலையை பேணுவது மேலே இருக்கக்கூடிய விலங்குகள் தான்.

ஓநாய் குலச்சின்னம் உலகில் அதிகம் விற்பனை செய்யப்பட்ட சீன நாவல். மாவோ தலைமையில் நடைபெற்ற புரட்சிக்கு பின்னான காலத்தில், வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு பழங்குடிகளின், மேய்ச்சல் சமூகத்தின் பல்லுயிர் பெருக்க வாழ்வியல் எப்படி சிதைக்கப்பட்டது என்பதையும், வளமாக செழிப்பாக இருந்த நிலங்கள் எப்படி பாலையானது என்பதையும் அழகாக விவரிக்கும் நூல்.

மனித உயிர்களையும், மேய்ச்சல் விலங்குகளையும் இரக்கமற்ற முறையில் கூர் மதியுடன் வேட்டையாடும் ஓநாய்களை அம்மக்கள் தெய்வமாக வழிபடுவதன் காரணம் என்ன? தாங்கள் இறந்தபிறகு தங்களது உடலை ஓநாய்கள் திண்ண கொடுத்து, ஓநாய் தின்பதாலேயே தங்கள் ஆத்மாக்கள் சொர்க்கம் செல்வதாக மேய்ச்சல் நில மக்கள் கற்பித்துக் கொண்டதன் உளவியல் பின்னணி என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே பல்லுயிர் பெருக்கம் தான் என்பது ஓநாய் குலச்சின்னத்தின் சாரம்.

வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமே மனிதனை முழுமையானவனாகவும், ஒரு நாட்டையும், உலகையும் செழிப்பான தாகவும் மாற்றிவிடாது.

கண்மூடித்தனமான தொழிற்துறை வளர்ச்சி சுற்றுச்சூழல் மீது ஏற்படுத்தும் தாக்கமும், அது பல்லுயிர் பெருக்கம் மீது ஏற்படுத்தும் பாதிப்புகளையும் கணக்கில் கொண்டு வளர்ச்சி திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

நம்மூர் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் ஆதர்சனமாக குறிப்பிடும் ஜப்பானின் மசானபு ஃபுகோகா தனது வயலில் உள்ள சிலந்திகளை அழியாமல் காப்பது எந்த வகையில் பல்லுயிர் பெருக் கத்தை பாதுகாத்து சீரான ஒரு சமச்சீர் மண்டலத்தை உருவாக்குகிறது என்பதை இயற்கை விவசாயம் தொடர்பான தனது நூலில் விளக்கியிருப்பார். இங்கு எது வொன்றும் ஒன்றில் இருந்து மற்றொன்று தனித்ததல்ல.

பொருளாதார வளர்ச்சியை மட்டுமே பிரதானநோக்கமாக கொண்டு திட்டங்களை தீவிரமாக செயல்படுத்திவரும் உலக நாடுகளை தனது நெறிகாட்டுதல்களால் வழிப்படுத்த முயலும் ஐ.நா, மே 22ம் தேதியை உலக பல்லுயிர் பெருக்க நாளாக அறிவித்து, அதை கடைபிடித்து வருகிறது. அதன்படி இந்த ஆண்டின் பல்லுயிர் பெருக்க நாளின் நோக்கமாக பல்லுயிர் பெருக்கம் மற்றும் பேண வேண்டிய சுற்றுலா! என்பதை அறிவித்துள்ளது.

சுற்றுலா என்பது பல்வேறு நாடு களுக்கும் பெருத்த வருமானத்தை வாரி வழங்கும் ஒரு துறையாக விளங்குகிறது ஒருபுறம் என்றாலும், சுற்றுலா ஒருநாட்டின் கொண்டுவர வேண்டும்.

இவ்விவகாரத்தில் குறிப்பிடவேண்டிய முக்கிய விடயம் ஒன்றுள்ளது. பல்லுயிர் பெருக்கத்தில் மனிதனுக்கும் இடமுண்டு. மனிதர்களை சூழலில் இருந்தும், சூழல் மண்டலத்தில் இருந்தும் பிரித்து அடையாளம் காண்பதும் பிழையாகிப் போகும். வனங்களில் அதன் ஒரு பகுதியாக, அதன் குழந்தைகளாக பல்லாயிரம் ஆண்டு களாக வாழும் பழங்குடி மக்களை வனங் களை விட்டு வெளியேற்றும் நடவடிக் கையாக பல்லுயிர் பெருக்க திட்டமும், சுற்றுச்சூழல் மற்றும் வன பாதுகாப்பும் அமையக் கூடாது.

உலகிலேயே அதிக பல்லுயிர் பெருக்க



முள்ள இடமாக அடையாளம் காணப் பட்டுள்ளது மேற்கு தொடர்ச்சி மலைகள். எழில் மிகுந்த இந்த மலைத்தொடரை அதன் இயல்பு நிலையிலையே பாதுகாப் பதும், வனவிலங்குகளை காப்பதும், அதன் பழங்குடிகளை காப்பதும் உலகில் காணப் படும் பல்வேறு வகையிலான உயிரினங் களை காப்பது. மனிதனே உலகின் பிர தானம் என்ற மனித மைய வாதத்தை தகர்த்து உலகில் வாழ எல்லா உயிர் களுக்கும் உரிமை உள்ளது என்ற அடிப் படையை உணர்வது. இதையே உலக பொதுமறையாம் திருக்குறள் சொல்கிறது,

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரை மிரட்டும் அல்சைமர்

## விரட்ட வழி காண்போம்

**தற்போதைய காலத்தில் பெருகும் நோய்களில் ஒன்றாக அல்சைமர் நோயும் உள்ளது. இது ஏன் வருகிறது? அதனைத் தவிர்க்கமுடியுமா?**

### அல்சைமர் என்றால் என்ன?


நம்முடைய நினைவாற்றல் மற்றும் மூளை செயல்படுதிறன், கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவது டிமென்சியா என்ற நிலை.

அதற்கு முக்கிய காரணம் அல்சைமர் நோய். சிக்கலான விசயங்களைப் பார்க்கும் போதோ பேசும் போதோ குழம்புவது, வார்த்தைகளை மறந்து விடுவது போன்றவை டிமென்சியா என்ற நிலையின் அறிகுறி. வயது அதிகரிக்கும்போது மூளையில் சுரக்கும் ரசாயனங்களில் ஏற்படும் மாற்றங்கள், மூளையில் உள்ள சில நியூரான்களின் செயல், இழப்பு போன்றவையே அல்சைமருக்கு காரணம். அல்சைமரில் பல நிலைகள் இருக்கின்றன.

ஆரம்ப நிலையில் அன்றாட வாழ்வில் சின்னச்சின்ன விசயங்கள் மறந்துவிடும்.

உதாரணமாக, காலையில் சாப்பிட்ட உணவு, காலையில் சந்தித்த மனிதர், சென்ற நிகழ்ச்சி போன்றவை மறந்து விடும்.

அடிக்கடி கோபம் வரும். குணங்கள் மாற ஆரம்பிக்கும். ஒரு கட்டத்தில், தன் துணையை, மகன், மகள், உறவினர்கள், நண்பர்களைக் கூட மறந்துவிடுவார்கள்.



### யாருக்கு இந்த பாதிப்பு வருவதற்கான வாய்ப்பு உள்ளது?

வயது அதிகமாக அதிகமாக அல்சைமர் வருவதற்கான வாய்ப்புகளும் அதிகமாகின்றது.

தற்போது 75 வயதானவர்களில் நான்கில் ஒருவருக்கு இந்த நோய் வருகின்றது. பெரும்பாலும் மரபியல் ரீதியாகத்தான் அல்சைமர் வருகின்றது.

மேலும் இரத்தக் குழாயில் கொழுப்புகள்படியக்கூடிய நோயான அத்ரோஸ்க்லீரோஸிஸ் (athwrosclerosis) நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகம் கொலஸ்ரோல் இருப்பவர்களுக்கு, நரம்பு மண்டலத்தில் கோளாறு இருப்பவர்களுக்கு அல்சைமர் வரலாம்.

### அல்சைமர் நோயால் ஏற்படும் பாதிப்புகள் எவை?

நினைவாற்றல் குறைவது மட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றி தொடர்ச்சியாக அன்றாட செயல்களில் மாறுதல்கள் இருக்கும். காலையில் எழுந்ததும் பல்தேய்க்க, குளிக்க, உடை உடுத்த என அன்றாட செயல்களைக்கூடவீட்டில்இருப்பவர்கள் அடிக்கடி நினைவுபடுத்த வேண்டிய நிலை ஏற்படும். அல்சைமர் முற்றிய நிலையில் மகன், மகள், நெருங்கிய நண்பர்களைக்கூட மறந்துவிடுவார்கள். என்ன உடை உடுத்தியிருக்கிறோம், எங்கேஇருக்கிறோம்என்பதுகூடதெரியாமல் போகும். ஒருசிலர் குழந்தையைப் போன்ற மனநிலைக்கு வந்துவிடுவார்கள். வீடு, அலுவலகம் செல்வதற்கான வழிகள் திடீரென மறந்துவிடும். மலம், சிறுநீர்கழித்தல் போன்ற அன்றாட நடவடிக்கைகள் கூட மறந்து போகும். கட்டுப்பாடற்றுப்போகும்.

## அல்சைமர் பிரச்சினையை இனங்காண்பது எப்படி?

60 வயதைக்கடந்தவர்களுக்கு நினைவாற்றல் மற்றும் மூளை செயல் திறனில் மாறுதல் இருந்தால் கவனிக்க வேண்டும். உதாரணமாக வங்கி பரிமாற்றங்களில் தடுமாற்றங்கள், கடையில் கணக்கு பார்க்கும் போது தடுமாறுதல், அன்றாட சமையல் வேலையில் தடுமாற்றம், வாகனங்களில் பயணிக்கும் போது சாலை விதிகளில் தவறுதல், சாதாரண பிரச்சினையை அணுகக்கூட மிகவும் கஸ்ரப்படுதல், போன்ற பிரச்சினைகள் இருந்தால் அவர்களை உடனடியாக மருத்துவரிடம் காண்பிக்கவேண்டும்.

மூளையின் செயல்திறனை அறிய தனிப்பரிசோதனை செய்யப்படும். இதன் முடிவுகளை வைத்தே டிமென்ஸியா இருக்கிறதா, இல்லையா, பாதிக்கப்பட்டவர் எந்த நிலையில் இருக்கிறார் என்பதை அறிய சில பரிசோதனைகள் செய்யப்படும். இந்தப் பரிசோதனையில் நினைவு மற்றும் புதிர் பரிசோதனை, சொன்னதைச் சரியாக உள்வாங்க முடிகிறதா, எப்படி எதிர்வினையாற்றுகிறார் என்பவை போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டு நோய் உறுதி செய்யப்படும். டிமென்ஸியா உறுதியானால் அவர், இரத்தம், சிறுநீர் பரிசோதனைகள் மூலம் வேறு நோய்கள் உள்ளதா எனக் கண்டறியப்படும்? முடிவைப்பொறுத்து டிமென்சியாவுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

மூளையில் கட்டி, மூளையில் நீர் கோர்த்தல், மூளையில் இரத்தக்கட்டி போன்ற பிரச்சினைகள் இருக்கிறதா என அறிய எம். ஆர். ஐ, சி. டி. ஸ்கேன் போன்ற சோதனைகள் செய்யப்படும். ஏதேனும் பிரச்சினை இருந்தால் நரம்பியல் அறுவைச்சிகிச்சை மூலம் சரிசெய்யப்படும். டிமென்ஸியாநிலையைக்குணப்படுத்தசிகிச்சைஉள்ளது. ஆனால் அல்சைமர் நோயை முழுமையாக குணப்படுத்த சிகிச்சை கிடையாது.

அல்சைமரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூளையில் சுரக்கும் அசிட்டைல்கோலின் அளவு குறைவாக இருந்தால் மருந்துகள் மூலம் சிகிச்சை கொடுக்கப்படும். இதன் மூலம் இந்நோயை தாமதப்படுத்தமுடியும்.


இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்காணிக்க ஒருவர் கூடவே இருப்பது அவசியம். ஆரம்ப நிலையில் இருப்பதையும்தங்களதுநடத்தையில்மாற்றம் ஏற்படுவதையும்முதியவர்கள்அறிந்து கொண்டு அல்சைமர் நோய் வராமல் தடுப்பதே சிறந்தது.

நன்றி டொக்ரர் விகடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளி சிறப்புக் கட்டுரை



ஆக்கம்: நிரஞ்சனா.

# தீபஒளி

தீபாவளி அன்று என்னத்த சாஸ்திரம் கடைபிடிக்கவேண்டியிருக்கு? காலையில் குளித்து புத்ததாடை அணிந்து, பட்டாசு கொழுத்தி வாய்க்கு ருசியா சமைச்சு சாப்பிட்டோமா, அப்படியே டி.வி-ல போடும் நிகழ்ச்சியை பார்த்தோமா, நண்பர்களுடன் குதூகலமாக பொழுதைக் கழித்தோமா அவ்வளவுதான் தீபாவளி என்று பலர் நினைக்கலாம். அதையும் தாண்டி தற்காலத்தில் பண்டிகைகள் என்றாலே விபத்துக்களும் வன்முறைகளும் அதிகமாக இடம்பெறும் ஒருநாளாகவும் எதிர்பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

இதனை நடைமுறை என நாம் நினைத்தாலும் நம் வாழ்க்கை வளர்ச்சிக்கு இது போதுமா? நிச்சயம் தவறுதான். பண்டிகை என்றால் என்ன? நம் வாழ்வை வசந்தமாக மாற்ற வருவதுதான் பண்டிகை. சாஸ்திர பரிகாரம் என்பது நம் முன்னோர்கள் கடைபிடித்து அவர்கள் நல்ல நிலையில் இருந்ததால் அவர்களின் அடுத்த தலைமுறையினரையும் கடைபிடிக்கச் சொல்லிய ஒரு விதியாக, எழுதாத சட்டமாக சொல்லி வைத்துச் சென்றார்கள்.

ஒரு சமயம் சிவாலயத்தில் எரிந்துக்கொண்டு இருந்த தீபத்தின் எண்ணையை குடிக்க சென்றது ஒரு எலி. அப்போது தன்னை அறியாமல் அந்த தீபத்தின் திரியை தூண்டியதால்இ அந்த தீபம் பிரகாசமாக எரிந்தது. இதனால் அந்த எலியின் வாழ்க்கை மறுபிறவில் மகாபலிசக்கரவர்த்தியாக பிரகாசமான வாழ்க்கை அமைந்தது. சாஸ்திரம் நமக்கு நன்மைதான் சொல்லுமே தவிர பாதகம் சொல்லாது. சரி, எது எப்படியோ நமக்கு நன்மை நடக்க வேண்டும் என்றால் நம் முன்னோர்கள் கடைப்பிடித்த சாஸ்திர பரிகாரங்களை கடைபிடிப்பது தவறில்லை. அதுவும் தீபாவளி அன்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்த சாஸ்திர பரிகாரங்களை கடைபிடித்தால் நம்மை வாட்டி வதைக்கும் தரித்திரங்கள் விலகி வாழ்க்கையே ஏறுமுகமாக இருக்கும் என்பது நிச்சயம். தரிதிரத்தை நீக்கும் குளியல் நம்மை வாட்டி வதைக்கும் தரித்திரங்கள் தீர தீபாவளி அன்று முதலில் சூரிய உதயத்திற்கு முன்னர் எண்ணெய் தேய்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிக்க வேண்டும். குளிக்க வென்னீர்தான் பயன்படுத்த வேண்டும். இத்துடன் அந்த குளிக்கும் வாளியில் மஞ்சள், சந்தனம், குங்குமம் வைக்கவேண்டும். எதனால் என்றால் தீபாவளி தினத்தில் கங்கை அம்மன் தூய்மையான தீர்த்தங்களில் தோன்றுகிறாள். இதனால் கங்கையை நாம் நம் இல்லத்தில் இருந்தபடியே பூஜிப்பதாகாவும் ஐதீகம். இதன் பயனாக தூய்மையான தண்ணீருக்கு தெய்வீக சக்தி கிடைக்கிறது. உடலில் இருக்கும் தோஷங்கள் நீங்குகிறது. விடிவதற்குள் குளித்து விட வேண்டும் என்பதற்கு காரணம் என்னவென்றால் சூரிய உதயத்திற்கு பின்னர் அமாவாசையின் சக்தி அதிகரிக்கும். அந்த நேரத்தில் எண்ணெய் தேய்த்து குளித்தால் பித்ருக்களின் சாபத்திற்கு ஆளாவோம். இதனால் ஸ்ரீமகாலஷ்மியும் திருமாலும் நம் மேல் கருணை காட்ட மாட்டார்கள் என்பதை நாம் தெரிந்துக்கொள்ள வேண்டும். அதுபோல, நண்லெண்ணையை கண்டிப்பாக தலையில் தேய்த்து குளிக்க வேண்டும். இதனால் சனிஸ்வர பகவானின் பிடியில் இருந்தும் தப்பிப்போம். தரிதிரமும் நீங்கும். துஷ்ட சக்தியை விரட்டும் பட்டாசு பட்டாசு வெடிப்பதால் துஷ்டசக்திகள் விலகும். அதனால்தான் கேரள நாட்டில் சில ஆலயங்களில் வெடி வெடிப்பார்கள். இதனால் துஷ்ட சக்திகள் விலகும். வெடி சத்தத்தை கேட்டு மிருகங்கள் பயந்து ஓடுவதுபோல துஷ்ட சக்திகளும் ஓடி விடும். தோஷத்தை நீக்கும் மஞ்சள் புது உடை உடுத்தும்போது கண்டிப்பாக மிகச் சி றிய அளவில் மஞ்சள் வைத்த பிறகே அந்த புத்தாடையை உடுத்த வேண்டும். இதனால் தோஷங்கள் நீங்கும். வாழ்வை வெளிச்சமாக்கும் தீப ஒளி. தீப திருநாள் அன்று இல்லத்தில் விளக்கு ஏற்ற வேண்டும். நம் வீட்டு பூஜை அறையில் 5, 9 என்ற எண்ணிக்கையில் விளக்கு ஏற்ற வேண்டும். இதனால் தெய்வங்கள் மகிழ்ச்சியடையும்.

வெற்றியின் சின்னம் ஜொலிக்கும் தீப ஒளி'. அந்த தீப ஒளி நம் இல்லத்திலும் ஜொலித்தால் காரிய தடை என்கிற இருள் நீங்கி நம் வாழ்க்கையில் முன்னேற்றம் என்கிறவெளிச்சத்தைதந்திடும்..அதேபோல,மாலையில்வாசலில்இரண்டுதீபம் ஏற்ற வேண்டும். தீபாவளி அன்று யமதர்மராஜன்தன் சகோதரியான யமுனைக்கு சீர் கொண்டு வருவார். அதனால் அன்று மாலை நம் இல்லத்தில் நிறைய தீபம் ஏற்றினால் தமது பூலோக வருகையை மக்கள் மகிழ்சியோடு வரவேற்கிறார்கள், அதனால் அந்த இல்லத்தில் இருக்கும் பெண்களையும் தனது சகோதரிகள் போலவே எண்ணி அந்த குடும்பத்திற்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொள்வார். அந்த ஆண்டு முழுவதும் துஷ்ட சம்பவங்கள் அந்த இல்லத்தில் ஏற்படாது. அதேபோல இனிப்பை நம் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வழங்க வேண்டும். இதனால் ஸ்ரீமகாலஷ்மியின் ஆசி நமக்கு பரிபூரணமாக கிடைக்கும். மாலையில் வடதிசையை நோக்கி குபேரனையும் ஸ்ரீமகாலஷ்மியையும் பூஜிக்க வேண்டும். குபேரனின் ஆசியும் - அருளும் கிடைக்கும்.. தீபாவளியை நம் முன்னோர்கள் சொன்னது போல சாஸ்திரபடி கடைபிடியுங்கள். உங்கள் வாழ்க்கையே ஜொலிக்கும் என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை.எப்போதும் வெற்றிதான். அனைவருக்கு இனிய தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# உயிரைச் சிதைத்த உறவு 02

கயூரி புவிராசா



அன்றுகாதலைச் சொன்னவன், அதீத அன்பினாலே, நிமிடத்திற்கொரு முறை மரணத்தைத் தொடும் வலியுணர்த்திச் செல்லப் போகிறான் என,பாவம்அவள் அறிந்திருக்க வில்லை.வயதிற்குரிய ஆசைகளிருந்தாலும் அவள் குடும்பநிலை அறிந்தவள். காதல் எல்லாம் சரிவராத ஒன்று என மனதில் உறுதி கொண்டவள். அதை நிமிடத்தில் தகர்த்தவன் ஜீவன். அவள் ஜீவனாயும் போனான். இறுதியில்அவள்ஜீவனையும் பறித்துப் போனான்.

கீதாமிஸ், பிரின்சிப்பல் வரட்டாம்.சக ஆசிரியரும் நண்பனுமான கிருபா தான் சொன்னான். நினைவடுக்கிலிருந்து மெல்ல வெளி வந்தவள், சரிசேர்!என்றபடி விரைந் தாள்,அலுவலகம்நோக்கி. புன்னகைக்கோலத்தை வரைந்தபடி வரவேற்றார் அதிபர், அருட் சகோதரிமார்கிரட்.

அவர்முகத்தைப் பார்த்தாலே, உள்ள சோகம்காற்றிலே கரைந்து விடும். சொல் லுங்கோ மெடம்!என்றாள், அமர்ந்தபடி.

வலயத்தில, கல்விச் சுற்றுலாவிற்கு அனு மதி குடுத்திட்டார்கள்மா. ஐந்து நாட்கள். எல்லாம் ரெடிதானே? கண்டி,நுவரெலியா, அப்பிடியே சிவனொளிபாதமலை...

ஓம் மெடம். சனி கிளம்பினால் புதன் இரவு திரும்பலாம். கிருபா சேர்தானே ஒழுங் கமைப்பு? நான் பிள்ளையளிட்டச் சொல்லு றன். என்றபடி கிளம்பினாள், இவள்.இதயத் தில் மெல்லிய அதிர்வு!அங்க அவ னைக் கண்டால் என்னசெய்யிறது? மாணவர்களின் ஆட்டம், சத்தங்களுடன் கண்டியை நோக்கி விரைந்துகொண்டிருந்தது, பஸ்.பேருந்தில் ஒலித்த பாடல்கள் ஏனோ அவளுக்கு அவ்வளவு உவப்பைத் தர வில்லை.

அவனோடு சேர்ந்து கேட்டவையல்லவா? இது நீயிருக்கும் நெஞ்சமடி கண்மணி... அவளவனின் குரலில் செவிகளில் ரீங் காரமாய்... நினைவே கூடாதென்ற அந்த நாளும் விழி முன்நிழலாடியது.

வழமைக்கு விரோதமாய்ப் பல அழைப் புகள். கவனிக்கத் தவறியது அவள் குற்றமா? விதியின் சதியா? இன்று வரை விடை தெரியாது?

என்னாச்சு இவருக்கு? இத்தனை அழைப்பு எடுத்திருக்கிறார்? கோயிலுக்குப் போகேக்க சைலன்டில போட்டது. போட்டபடி கிடக்கே! ஐயோ!

இறுதியில் அழைப்பேற்கப்பட்டதும், எங் கயடிஇவ்வளவு நேரமாப்போயிருந்தாய்? எவ னோட போனனீ? அமிலமாகத் தாக்கின வார்த்தைகள்.

என் ஜீவனா இது? குட்டிமா! தங்கம்! கோபமாய்க்கூடப் பேசமாட்டாரே! அவளது நம்பிக்கை பொடிப்பொடியாய் தகர்ந்தது.

அவளைக் காயப்படுத்துகிறோம் எனத் தெரிந்தும் வார்த்தைகளால் சமாதி கட்டினான் அவளுயிரானவன்.

நாகூசும் அளவிற்குகாதலிக்கப்படுபவனால் கேட்கக்கூடாத வார்த்தைகள் எல்லாம் கேட் டாள் அவள். மாறாக, ஒரு துளி கண்ணீர் வரவில்லை அவளுக்கு.அன்றே மனமும் மரத்துப்போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும், நண்பனும் சகஆசிரியனுமான கிருபாவோடு இணைத்து…சீ!

இப்பொழுது நினைத்தாலும் மேனி நடுங்கியது. சந்தேகச்சாத்தான் புகுந்தால் மூளை வேலைநிறுத்தம் செய்துவிடுமே! மெல்ல விரவும் விஷமாயிற்றே அது!

என்ன கனவு மிஸ்?எழும்புங்க! என்ற கிருபாவின் கேலியில் நிகழ்காலம் திரும்பியவள், ஒண்ணுமில்லை கிருபா…இறங்குங்க!என்றபடி நகர்ந்தாள்.

பஸ்ஸை விட்டு இறங்கியவளால் விழிகளைத் திருப்பவியலவில்லை. வஞ்சகமில்லாமல் வனப்பை வாரிவழங்கியிருந்தாள் மலைமகள். எங்கு திரும்பினும் செல்லமாய் தழுவிக்கொள்ளும் முகிலினமும், முகவரிதேடி ஓடும் அருவிகளும், மலர்ந்தும் மலராப் புஸ்பங்களும், தேயிலைத் தோட்டங்களும், சில்லிட்ட காலைக்குளிரும் அவளை வேற்றுலகிற்கு கூட்டிச்சென்றன.

உள்ளங்கைகளைத் தேய்த்துக் கன்னத்தில் பொருத்தியவள் இயற்கையின் கொடையை எண்ணிச் சிலிர்த்துப்போனாள்.

காலையுணவை முடித்துவிட்டு, இளஞ்சூடாய் தொண்டைக் குழிதீண்டிய தேநீர் அமிர்தமாயிருந்தது, குளிருக்கு! மாணவர்கள் ஆர்வமாய் நகரத்தொடங்கினார்கள். மதியம் ஹக்கலபூங்காவிற்குச் செல்லவிருப்பதால், இப்போதே தேயிலை இறப்பர்த் தோட்டங்களுக்குச் செல்வதாய் முடிவுசெய்து நகர்ந்னர். பிற்பகல் மூன்று மணியளவில் அனைவரும் ஹக்கல மலர்க்குவியலுக்குச் சென்றனர். ஏதோ அதை, காதலர்கள் குத்தகைக்கு எடுத்த மாதிரியே கூட்டம்.

ஹூம்… மாணவர்கள் ஆர்வத்தோடு நகர, தலைவலி எனக்கூறிவிட்டு அங்கிருந்த கல்லிருக்கையில் சாய்ந்து,கண்ணை மூடினாள் கீதாஞ்சலி.

எத்தனை நேரம் இருந்தாளோ.. குட்டிம்மா! என்ற குரல் நடப்பிற்குக் கொண்டுவந்தது. அவனேதான். நினைத்தது பொய்க்கவில்லை.

கையை மார்புக்குக் குறுக்காய்க் கட்டியபடி, இன்னும் கம்பீரமாய்,அதே ,உயிர்வரை தீண்டும் பார்வையுடன் நின்றிருந்தான், அவளை உயிரோடு கொள்ளியிட்டவன்.

இன்னதென்றில்லாத இறுக்கத்தை பூசியது அவள்முகம். அவனை எதிர்பார்த்தாளே ஒழிய, இங்கே எதிர்பார்க்கவில்லை.

அவளையே பார்த்தபடி வந்து அருகில் அமர்ந்தான் ஜீவன். மறுகணம் சற்றுத் தள்ளி அமர்ந்தாள் அவள். அந்த ஒதுக்கம் சம்மட்டியால் அடித்தது போலிருந்தது அவனுக்கு.

என்னால் தானே?என, மனச்சாட்சி இடித்துரைக்கவும் தவறவில்லை.

இந்த இரண்டு வருடங்களில் அவளில் பலமாற்றங்கள். முகத்திலிருந்த குழந்தைத்தனம் விடைபெற்றிருந்தது. விழிகளில் வெறுமை. அவனுக்கு அவள் விழிகளென்றால் அவ்வளவுபிடித்தம். வாய்பேசாத வற்றைக் கண்களே பேசிவிடும். அவனை வீழ்த்தியதும் அதுவே.மூக்கைப் பார்த்ததும் ஒரு சிலிர்ப்பு அவனுக்கு. அவனுக்கு மூக்குத்தி பிடிக்காதென்ற காரணுத்துக்காய் தாய் எவ்வளவோ சொல்லியும் குத்தவில்லை அவள்.நீண்ட கூந்தல், சிறிய மரூண் பொட்டு, கழுத்தில்ஒருசெயின், கையில் வாச், மெல்லியரோஸ் சேலை… இவ்வளவே அவனவளின் அலங்காரம்.

பார்க்கத் தெவிட்டவில்லை அவனுக்கு. இரு வருடங்களின் பின் பார்க்கிறானே?

அவளிடமோ எந்த உணர்வுமில்லை. விட்டேற்றியாக வானத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

குட்டிம்மா! கரகரப்போடு ஆரம்பித்தான். மன்னிப்புக் கேட்கும் தகுதியில்லாதவன் நான். ஆனால்,மன்னிக்கும் தகுதி உனக்கு இருப்பதால்கேட்கிறேன், என்னை மன்னித்துவிடு! அந்த நாளை நினைத்து வருந்தாத நாளில்லையடி நான்!உன்னை உயிரோட கொன்றுட்டன்டி. என்றவனை, சலனமில்லாது யார்நீ?எனப்பார்த்தாள், அவன் குட்டிம்மா!

என்னை நல்லாத்திட்டுடி! பேசடி!என்றபடி, அவள் கரத்தைப் பற்றினான் ஜீவன்.

பிளீஸ்சேர்…ஆரும்பாத்தால் என்ன நினைப்பினம்? கையைவிடுங்க! அறிமுகமில்லாதவரோடு இருப்பது போன்ற உணர்வோடு சொல்லிவிட்டாள்.

இப்ப வந்து மன்னிப்புக்கேட்டுட்டால் நடந்தது மறந்திடுமா? உங்களைப் பாத்தால் அன்றைக்கு கதைத்தவை தானே ஞாபகம் வருது?பிறகெப்பிடிச் சகஜமாக் கதைக்கிறது? வேணாம் ஜீவன்,இப்பிடியே இருந்திடுங்க. திரும்பவும்பழைய மாதிரிவேணாம். சந்தேகம் வந்தது வந்ததுதான். அதுபோகாது. அத்தனை திடம் அவள் குரலில்.

அதிர்வோடு பார்த்தான் அவன். நீங்க யாரையாவது கல்யாணம் செய்து சந்தோஷமா இருக்கோணும். என்னை விட்டு ஒரேயடியா விலகுறது தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குநல்லது. தொடர்ந் தவளை, பட்டென்றுதன்பக்கம் திருப்பி, நீ என்னை மறந்துடு வியாடி? சொல்லுடி? என உலுக்கினான் அவன். நிச்சயமா இல்லைஜீவன். ஆனாலும், உங்களோட வாழவும்நான்விரும்ப இல்ல. இதுதான் உங்களைக்கடைசியா பாக்கிறது. என்றவள், அவன் முகத்தை ஏந்தி, விழிகளுக்குள் ஊடு ருவி நெற்றியில் அழுந்த முத்தமிட்டாள்.

அவனோ சிலையாகிப் போனான். உச்ச பட்ச அதிர்ச்சியிலிருந்து மீள முன்னரே அவ் விடம் விட்டுநகர்ந்தாள், அவன் குட்டிமா.

துளிர்த்த நீரை அவள் துடைக்க மறக் கவில்லை. அதையும் பார்த்தபடி கசிந்து நின் றன அவன் விழிகள்.

அதிர்ந்த மனமோ மெல்ல மெல்ல முக்கி முனகியது.

நான் தேடிய பொக்கிஷத்தை நானே எட்டி உதைத்துவிட்டேன். என்னை மறக்கமாட்டாய்.

ஆனால், சேர்ந்து வாழவும் முடியாதாடி? அதையும் தான் பார்ப்போமே! தவறு செய்து விட்டேன் மன்னித்துக்கொள் என்று வந்து நின்றால் ! மன்னிக்கமாட்டாயோ? எத்தனை நாட்களுக்கென்று பார்ப்பமடி அவளின் மறுப்புத் தந்த வேதனையில் கோபம் கலந்து குழறிய உள்ளம் குட்டிம்மாவின் அருகாமைக் காக, விரிசலாகிய இதயங்கள் பின்னிப் பிணையும் அக்கணத்துக்காக எதையும் செய் வேன் என்றது. காத்துக் கிடக்கத் தயாரானது.

உன்னுயிரைச் சிதைத்த உறவென்று ஒதுக்கித் தள்ளினாலும், உன்னையே சுற்றி சுற்றிவரத் துடிக்குதடி எந்தன் உள்ளம்!

தூரச் சென்று விட்டவள் செவிகளுக்கு எட்டிவிடாதா என்ற ஏக்கத்தோடு கத்தினான் ஜீவன்.

குட்டிமா என்று சற்று உரத்து அழைத் தான் ஹம் அவள் சென்று மறைந்து விட்டாள். ஆனாலும் சொல்ல நினைத்ததை பிடிவாதத் தோடு முணுமுணுத்தன அவன் உதடுகள்.

உன்னால என்னைத்தவிர வேறயாரையும் காதலிக்க ஏலாதடி ஏன் என்னைத்தவிர உன்ர மனக்கதவின்ர பூட்டுக்களை யாராலும் திறக்கேலாது. எனக்காய்நீகொடுத்தஇடத்தை இனி உன்னால கொடுக்கேலாது கண்ணம்மா ஒரு தடவை தப்புப்பண்ணிட்டன். நீ என் ஆயுளானவளடி. உன்னை எப்பிடி என்ன வளாக்கோணும் எண்டு தெரியும்டி எனக்கு, வெய்ட் பண்ணு தங்கம் மாமா ஒன் த வே.

★★★★★★

## உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்வோம் ! !!! !!!

நாம் நல்ல பழக்கங்களை விரும்பி கடைப்பிடிக்கும் போது நம்மிடம் உள்ள தீயவைகள் விலகி அறநெறி மேலோங்கும். எனவே நாம் நம் எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் நல்லவைகளை மட்டுமே கடைப் பிடித்தால் தேவையற்ற தீய குணங்கள் நம்மிடம் குறைந்து ஒழுக்கம், கடமை, ஈகை எனும் அறஉணர்வு நம்மிடம் மேலோங்கும்!

நேற்று என்பது முடிந்து விட்டது!
நாளை என்பது நிச்சயம் இல்லை!
இன்று மட்டுமே நமது சொத்து!
இதை வீணடிக்காமல் நல்லதை
மட்டுமே நினைப்போம், பேசுவோம்,
செய்வோம்! பிறருக்கு உதவுவோம். உள்ளதை உணர்வோம்!
அல்லதை விடுவோம்! நல்லதைச் செய்வோம்!

சோ.வினோஜ் குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீளிரவின் ஓர் தனிமை





இரா .வீரமணிகண்டன்

அறுபதாண்டு அனுபவங்களைபொழியும் மழையில் நனையும் நிலவோடு அசை போட்டுக்கொண்டிருந்த இரவு வேளை. அது நான்கு பிள்ளைகள் சிறகுகள் முளைத்ததால் நாற்திசையில் பயணிக்கவே, வீட்டின் ஒத்த பிள்ளையானார் அறுபது வயதான இராமமூர்த்தி ஆசிரியர் .

பிள்ளைகள் தூரமாய் ஓரிடத்தில், மனைவியோ துயரமான பிரிவாய் வெகுதொலைவில் மங்கிய இருளில் மலையோடு இடியும், மின்னலும் கொட்டி தீர்க்கிறது .ஒளியும் ,ஒலியும் அவர் மேனி தீண்டி செல்கிறது .

அந்த தனிமையான மெத்தை படுக்கை இராமமூர்த்திக்கு அத்தனை எளிதாக இல்லை புரண்டு புரண்டு படுத்து கொண்டார், உறக்கமோ வருவதாக இல்லை .யன்னல் வழியே சாரல்கள் அலை அலையாய் பாய்ந்தொழுகின . இயற்கை கழிப்பிற்காக எழுந்த அவர் கண்களில் எதேச்சையாக பட்டது, அவரின் புத்தக அலமாரி. அதில் ஒரு புத்தகத்தை எடுத்து தூசி தட்டிட்யவாறே படுக்கைக்கு சென்றார். அழகான படைப்பு அது காடு மலைகளுக்குள் வாழும் மக்களின் வாழ்வியலைத் தழுவிய நாவலது. நாவலோடு சேர்ந்து இவரும் சிந்தையில் நடைபயணமானார் .

இயற்கையின் அமைதியற்ற பேரிறைச்சல் இப்போது இவருக்கு பெரும் பொருட்டாக தெரியவில்லை.அறுபது வயதானாலும் அவர் கற்றுக்கொள்ள அந்நூலில் சில இருந்தது.

எந்த வசதியுமற்ற அந்த மக்களின் வாழ்வியலை உணர்ந்த அவர் தன் வாழ்வின் தனிமை அத்தனை கனமானதல்ல என்று தன் னம்பிக்கையோடு , தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

பாதி நாவல் படிக்கும்போதே படுக்கையில் உறங்கிவிட்டார்.விடியலை அழைக்கும் பறவையின் ஒலியில் எழுந்து கொண்ட அவர்கண்கள் அந்நாவலையே தேடியது.

மறுபடி ஒருமுறை தூசித் தட்டியவாறு அந் நாவலை மாலை வேளையில் படிப்பதென்று தனக்குள் முடிவு செய்து கொண்டார்.

புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டு அலமாரியை நோக்கிச் சென்றார்.

புத்தகத்தை அலமாரியில் வைத்துவிட்டு சில அடி நகர்ந்து மெல்லமாய் திரும்பி பார்த்தார். அங்கே அவரைப் போலவே பல புத்தகங்கள் அனாதையாக தூசியை அணைத்தபடி கிடந்தது.



நாகரீக அறிவியல் வளர்ச்சியால்தான் பெரும் கூட்டுக் குடும்பம் சிதையுண்டு தான் அனாதையாக்கப் பட்டதைப் போல் கைபேசி, கணினி, தொடுதிரை என உலகம் முழுவதும் அதில் மூழ்க, புத்தகங்கள் பல அனாதையாக கிடப்பதை உணர்ந்தார்.

அதனருகே சென்ற அவர் மேலும் சில புத்தகங்களை தூசி தட்டி விட்டு அனுபவங்களை சுமந்த நீ என்னைப் போலவே நீயும் தனிமையில் என தனக்குள்ளே சொல்லிய வாறே புன்னகைத்தபடி அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்....

**படைப்புகளையும் படைப்பாளிகளையும்**
**வளர்ப்போம்**
**மதிப்போம்..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதமங்கை

# அரிதாரம் அழகல்ல



க்றியசக்தி நடனப்பள்ளி மாணவிகள்

நேர்கண்டவர்:
தேவா மாதவன், கொழும்பு

பரதம் என்பது அழகிய கலை. அதன் தனித்துவங்கள் வசீகரமானவை. அது பண்பட்ட வரலாற்றின் கலைத்துவம். மேனியால் கவி எழுதும் மெல்லிசை என்றெல்லாம் பரதத்தின் புகழினைப் பாடிக்கொண்டே செல்லலாம். அந்த பரதக்கலையைப் பாங்குடன் பயின்று பல மாணவர்களை அந்தக் கலைக்குள் வளர்த்துக்கொண்டிருக்கும் மேனகா கமலநாதன் அவர்களுடனான ஒரு பகிர்வு இம்மாத ஒளிஅரசியில்.

அது ஒரு முன்மதியப் பொழுது. எங்களை வரவேற்பதற்காக வீதியிலேயே காத்திருந்து புன்னகையோடு அழைத்துச்சென்ற சின்னப் பெண்தான் நடன ஆசிரியை மேனகா என எண்ணமுடியவில்லை. அழகான பேச்சும் எழிலான நடத்தையும் கனிவும் சிறுபெண் போன்ற துள்ளலும் ஒருங்கே கொண்ட அவரை பார்த்ததும் சட்டென்று மனதில் பதிந்து போனது அவரது உருவம்.

சொக்கலிங்கம் கல்யாணி தம்பதியினரின் மகளான இவர் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையில் கல்வி கற்றவர். படிக்கும் போதே நடனத்தை விருப்போடு பயின்றவர், திருச்சியிலுள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் முதல் தரத்தில் தங்கப் பதக்கம் பெற்றார்.

அக்காலப்பகுதியிலேயே குச்சிப்பிடி, மோகினி ஆட்டம் போன்றவற்றைக் கற்கும் வாய்ப்பு கிடைக்கவே அதனையும் கற்றுள்ளார்.

இவர் பள்ளிக் காலத்திலேயே நாடகப் போட்டியில் பங்கு பற்றியவர்,



திரு.திருமதி
மேனகா கமலநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அசிரியர் வைஜெயந்திமாலா செல்வரட்ணம்) பின்னர் கிராமிய நடனங்கள், பேச்சுபோட்டி போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கு பற்றியவர். பரதம் ஒரு நடனவகை என்பதைத் தாண்டி எமது கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஒன்றாகவே தான் கருதுவதாகவும் கூறு கின்றார்.

தனது தாயாருக்கு பரதக்கலையில் ஈடு பாடு இருந்தமையோ என்னவோ தான் தான் சிறுவயதிலேயே இக்கலையை விரும்ப கார ணமாக இருக்கலாம் என்கிறார். பரதம் என்ற கலையின் மூலம் எமது கலாசாரத்தை வெளி நாடுகளுக்கு எடுத்துச்செல்லமுடியும் எனவும் 'நடனம் கற்பிக்கும் ஆசிரியர்கள், நடனத்தை விட ஒழுக்கம், நேர்மை போன்றவற்றையே முதலில் கற்பிக்கின்றனர் எனவும் நற்குணங்கள் கொண்டவர்களுக்கே நடனக்கலை சிறப்பாக வருகின்றது, என்கின்றார்.

தற்காலத்தில் பல ஆண்களும் பரதத்தினை விரும்பி கற்கின்றனர். பெண்களுக்க உள்ள குடும்ப தடைகள் ஆண்களுக்கு இல்லை யாதலால் அவர்கள் சிறப்பாகச் செயற்படு கின்றனர் என்கிறார்.

ஒரு சர்வதேச பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றும் இவர் தனது தனிப்பட்ட இலக் கினைநோக்கியும் நகர்கின்றார். சுயமாக, **க்றிய சக்தி** என்னும் நடனப்பயிற்சி நிலையத்தை மூன்று ஆண்டுகளாக நடாத்திவரும் இவர், பல கலைநிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நடாத்தி வருகின்றார். இக்கலை மீதான ஆர்வம் காரண மாக வேலைக்குச் செல்லும் பெண்களும் தன் னிடம் கற்கின்றனர் என்கின்றார்.

தனது கல்லூரியில் தற்போது நடனக்கலை மட்டுமே கற்பிக்கின்றேன் எனவும் ஏனைய சாஸ்திரிய நடனங்களையும் கற்பிக்க வேண்டும் என்பதே தனது அவா எனவும் பகுதி நேரமாக கற்கவிரும்புபவர்களையும் வளர்ப் பதுடன், ஏனைய நாடுகளிலும் கலை நிகழ் வுகளை நடாத்துவதன் மூலம், எமது கலாசாரத்தை கொண்டுசெல்லவேண்டும் எனவும் கூறுகின்றார்.

இவரிடத்தில் பெண்களின் புற அழகு பற்றிய உங்கள் கருத்து பற்றி கூறுங்கள் எனக் கேட்டதும், பெண்களின் அழகும் தனித் துவமும் புறஅழகில் கிடையாது, அது அக அழகிலேயே உள்ளது, நடனம் கற்கும் ஒவ்வொருவரும் உடை ஒப்பனை களைத் தாண்டி தமது திறனை வளர்க்கவே அதிகம் பாடுபட வேண்டும்.

எந்தக்கலையாக இருப்பினும் எவ்வளவு கற்றாலும் அது தீர்ந்துபோவதில்லை, ஆசிரி யராக உள்ளவர்கள் கூட தம்மை மாண வராகவே உணரவேண்டும். தன்னடக்கத்து டன் கற்கும் போதே கலைகள் முழுமை பெறும், இல்லையேல் அதில் ஆத்மார்த்தம் இருக்காது என்கின்றார் ஆசிரியர் மேனகா.

ஆசிரியர் அருந்ததி சிறி இரங்கநாதன் மற்றும் எனது முழுக்குடும்பமும் எனது வளர்ச்சியில் பங்குள்ளவர்களே, (எனது கணவர் கமலநாதன், மாமனார் மாமியார், அம்மா அப்பா, சகோதரி சங்கீதா வரதராஜா, சகோதரன் மைத்துனி றஜீவ் உஷா,)



இவர்களினதுதட்டிக் கொடுப்பும் பாராட்டும் தான் என்னை உயர்த்தியிருக்கிறது என்கின்றார்.

இவர் நடனத்துறையில் மட்டுமன்றி இலக் கியத்துறையிலும் ஈடுபாடு உள்ளவர். தமிழ் நாட்டில் படிக்கும் காலத்தில் லயோலா கல்லூரியில் சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி பரிசு பெற்றிருந்தார்.

இவரது இக்கலைப்பணி மேலும் தொடர வேண்டும் என வாழ்த்தி விடை பெற்றோம்.

★★★★★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுவது போல எழு!



தமிழ் இலக்கிய உலகில் என்றும் கிழக்குத் தான்...

எம் இனம் பல வலிகளை சுமந்தாலும் மொழியை வளமுடன் கையாள தவறவில்லை..

சில சிக்குதல்கள் செருகுதல்கள் எங்கள் மொழிக்குள் வந்தாலும் இவை கடந்தும் உலக வலம் வரும் எம் மொழியை பயன் படுத்தி பயன்பெறுவோர் அதிகம் என்பதை நாம் அறிவோம்.

அறிவார் அறிவார் என்று அன்று தொட்டு இன்றுவரை படைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் சமூகம் .

எம்.டிவனியா

சில எழுத்தாளர்களின் தனிப்பட்ட வாழ்வையும் எழுத்துக்களையும் விமர்சிக்க தவறவும் இல்லை.

சமூகத்தின் பார்வையில் நல் சிந்தனைகளை விதைக்கும் எழுத்தாளர்கள் இன்றும் எம் மத்தியில் என்பது எம் மொழிக்கு இருக்கும் பலம்.

எம் இனத்தை எம் தேசியத்தை பொறுத்தவரை அதன் அடையாளம் சுமந்து தம்மை வெகு இலகுவில் மக்கள் மத்தியில் நன்மதிப்பு பெறும் பெருந்தகைகளும் இங்கு அதிகம்.

யார் வேண்டுமென்றாலும் தேசிய முக மூடி அணிந்தால் அவர்களை நம்பும் எம்மவரும் அதிகம்.

இன்று எம் மத்தியில் எழுத்தாளர்களுக்கான நன்மதிப்பு குறைந்துள்ளது என்பதையும் நாங்கள் மறுக்க முடியாது.

இந்நிலை ஒருவர் தனிப்பட்ட வாழ்வில் சீர் இல்லை என்றால் அவர் சொல்லும் கருத்தையும் படைப்பையும் ஏற்க மறுக்க இந்த சமூகம் தயாராகிவிட்டது.

இது ஆரோக்கியம் என்றாலும் இந்த சமூகத்தில் உள்ளவர்கள் அத்தனை உள்ளங்களும் உத்தமமானவர்களா என்றால் கேள்விக்குறியே!

**இருப்பினும் எழுத்தாளர்களே .**
**நீங்கள் சொல்வது போல வாழுங்கள்..**
**உங்கள் படைப்புக்கள் நெல்மணிகளாகட்டும்.**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளம் தம்பதி புதிதாக ஒரு இடத்திற்குக் குடி போனார்கள். அதிகாலை தேநீர் குடித்தபடி ஜன்னல் வழியே இருவரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைத்து விட்டு துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள். பார்த்துக் கொண்டே இருந்த மனைவி சொன்னாள்,

அந்தம்மாவிற்குத் துவைக்கவே தெரியவில்லை போல் இருக்கிறது. துணியில் அழுக்கே போகவில்லை பாருங்கள் கணவனும் பார்த்தான்.



# உன்னைத் திருத்திக்கொள்

ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை.

தினமும் அவர்கள் எழுந்து தேநீர் குடிக்கும் நேரமும், பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைக்கும் நேரமும் ஒன்றாகவே இருந்ததால் மனைவி தினமும் அடுத்த வீட்டு சலவை சரியில்லாதது பற்றி தினமும் சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

திடீர் என்று ஒரு நாள் பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைத்து உலர வைத்த போது பளிச் சென்று சுத்தமாக உலர்வதைப் பார்த்த மனைவி சொன்னாள்,

அப்பாடா, இப்போது அந்தம்மாள் துவைக்கக் கற்றுக் கொண்டு விட்டாளா..?? இல்லை நல்ல சோப்பை பயன்படுத்த ஆரம்பித்து விட்டாளா என்று தெரியவில்லை...???

இன்று தான் துணிகள் பளிச்சென்று சுத்தமாக இருக்கின்றன..!!! என்றாள் கணவன் அமைதியாகச் சொன்னான்,

★இன்றைக்கு அதிகாலையில் தான் நான் நம் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளைச் சுத்தம் செய்தேன்

★ இப்படித்தான் நாட்டில் நடக்கின்றன.


★நம் வீட்டுக் கண்ணாடி சுத்தமில்லாத போது அடுத்தவர் வீட்டுத் துணிகள் அழுக்குப் படிந்தே காட்சி அளிக்கின்றன.★

★ஆனால் நாம் நம் வீட்டுக் கண்ணாடியை சந்தேகிப்பதே இல்லை.★

★ஒருவேளை அடுத்தவரிடம் உண்மையாகவே குறைகள் இருந்தாலும் அதற்கு ஏதாவது நியாயமான காரணம் இருக்கலாம் என்று கூட நம்மால் யோசிக்க முடிவதில்லை...??....!!!★

பெரும்பாலும் இன்றைய சூழ்நிலையில்......???


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓஷோ எனும் சக்தி 02

பாலாஜினி பளை.

வணக்கம் வாசகர்களே !

ஓஷோவினுடைய சக்தி என்கின்ற தலைப் பினூடாக இன்றைய பகுதியில் மிகவும் சுவா ரசியமான விடயம் ஒன்றினை பதிவு செய்ய விரும்புகிறேன் ஒருமுறை ஓஷோ உரையாற் றுகின்ற போது சிற்றின்பம், காமத்தின் சக்தி ஆன்மக்கலப்பு தொடர்பான விடையங்கள் பற்றி மிக விலாவாரியாக சொல்லியிருந்தார். அந்த வேளையில் அவர் கண்ணனுக்கும் ராதைக்குமான தெரடர்பினை பின்வருமாறு கூறியிருக்கிறார்.

புல்லாங்குழல் கண்ணனுக்குச் சொந்த மானது ஆனால் அதிலிருந்து எழும் நாதம் ராதைக்கு சொந்தமானது. கண்ணன் ஒரு பாடலை பாடினால் அதன் அழகு ராதையிடம் தான் வெளிப்படுகிறது.

கண்ணன் ஆடும் போது ராதை அவன் அதிர்வுகளுக்கு ஏற்றாற்போல தாளம் போடுகிறாள். இதனால் தான் எங்கள் வழிபாடுகளில் கண்ணன் ராதை என்ற வழக்காடு இடம்பெற்று வருகிறது. யாருமே ருக்மணி கிருஷ்ணா என்று சொல்வதில்லை. ருக்மணியானவள் கண்ணனுடைய மனைவியாக இருக்கலாம். ஆனால் கண்ணனுடைய வாழ்விலிருந்து ராதையை நீக்கிவிட்டோமேயானால் கண்ணன் ஒளியிழந்து காணப்படுவான்.

இருப்பினும் இதிலொரு வேடிக்கையான விடயம் யாதெனில் கண்ணனைப்பற்றி குறிப்பிடுகின்ற பாகவதத்தின் நூல்கள் எல்லாம் ராதையை பற்றி குறிப்பிடவே இல்லை. அதிலும் குறிப்பாக கண்ணனின் லீலைகள் பற்றி பேசப்படுகின்ற இடங்களில் கூட ராதையைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை. இந்தச் சந்தேகமானது ஓஷோவை நோக்கி வினவப்பட்டது. இதற்கு கூட ஓஷோ மிகத்தெளிவானதொரு விளக்கத்தை நமக்குத் தந்திருக்கிறார்.

உண்மையிலேயே பழைய நூல்களை ஆய்வு செய்தவர்கள் எல்லோரும் அவற்றில் ராதையைப் பற்றிய குறிப்புக்களைக்காணாது அதிசயித்துப்போனார்கள். ஒருவேளை ராதை என்பவள் இவை எல்லா வற்றிற்கும் பின்னால் வந்த கவிஞர்களின் கற்பனைக் கதாபாத்திரமாக இருக்கக்கூடும் என்றும் ராதை என்ற ஒருத்தி உண்மையிலேயே இருக்க முடியாது என்றும் முடிவு செய்துவிட்டார்கள். ஆனால் ஓஷோவைப் பொறுத்தவரையில் இவ்விடயத்தில் அவரின் கருத்தானது வேறு பட்டதாக அமைந்திருக்கிறது. அவ்வாறு ராதை குறிப்பிடப் பட்டிருக்காமைக்கு வேறொரு காரணத்தை அவர் கூறியிருக்கிறார். ராதையானவள் கண்ணனுக்குள் ஊடுருவி பரிபூரணமாக அவனுடன் கலந்துவிட்டவள். எனவே கண்ணனிலிருந்து அவளைப்பிரித்து வேறாக்கி குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்று கூறிவிடு கிறார்.

ராதையென்பவள் அப்படியிருக்க ருக்மணி என்பவள் இங்கு வேறுவிதமாகத் தென்படுகிறாள். ஓஷோவின் பார்வையில், ஆணாக இருக்கலாம் பெண்ணாக இருக்கலாம், ஒரு தனித்தன்மையிருந்தால் தான் அவர்கள் தனியாக பிரித்து குறிப்பிடப்படுவார்கள். இங்கு ருக்ம ணியானவள் தனித்தன்மையுடையவள் அவள் தனது அடையாளத்தை இழந்துவிடவில்லை. இதன் காரணமாகத்தான் சமய நூல்களில் அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து தெளிவாக குறிப்பிடப்படுகிறாள். ருக்மணி கண்ணனை காதலித்தாள் ஆனால் அவனோடு ஒன்றிவிடவில்லை ருக்மணி கண்ணனுக்கு உறவானவள். ஆனால் அவ னோடு கரைந்து விட்டவளில்லை . உங் களுக்கு யாருடனும் உறவிருந்தால் நீங்கள் அவரை விட வேறுபட்டவர் என்பது தான் பொருள்.

எனவே இந்த விடயம் மிக மிக முக்கியமா னது. ராதையானவள் தனித்து அடையாளப் படுத்திட முடியாதவள். அவருக்கு அவளை குறிப்பிட பெயரோ உருவமோ இல்லை. அவள் கண்ணனின் நிழலாகி விட்டவள், அவனது பரிபூரணமாகிவிட்டவள், அவளுக் கென்று அடையாளங்கள் எதுவும் இல்லை. அவள் கண்ணனே ஆகிவிட்டவள்.

ராதையைப் போலத்தான் கண்ணனும். ராதையில்லாது முழுமையடைய மாட்டான் அதாவது கண்ணன் ஒரு பரிபூரணமான முழு மையான ஆண்மகன். இதனுடைய அர்த்தத் தினை நாம் தெளிவாக விளங்கிக்கொள் ளுதல் அவசியமாகிவிடுகிறது. ஆணாக இருக்கட்டும் பெண்ணாக இருக்கட்டும் உலகில் பொதுவாக பெரும்பான்மையான மனிதர்கள் முழுமையடையாதவர்களாகவே காணப்படுகின்றனர். அதாவது ஆண் என்றால் அதில் பாதி ஆணாகவும் பாதி பெண் ணாகவும் இருக்கும். பெண்களிலும் அப்படித் தான் ஆண்தன்மைக்குரிய ஒரு பகுதி காணப் படும். எனவே ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலுலும் சரி நாம் முழுமை யடையாதவர்களாகவே இருக்கின்றோம். குறிப்பாக நான் பெண்ணெனில் பெண் அறுபது வீதமும் ஆண் நாற்பது வீதமும் காணப்படும். ஆனால் கண்ணன் இதி லிருந்து முற்றிலுமாக வேறுபட்டவன். அவன் முழுமையாக ஆண் தன்மை கொண் டவன். அவனிடம் பெண்ணியல்பே இல்லை, அதே போலத்தான் ராதையும், அவள் முழுமையான பெண்ணியல்பு கொண்டவள், அவளிடம் ஆணியல்பு அறவே இல்லை. ஆனாலும் இவ்வாறு முழு மையான ஆண் பெண் என்று சொல்கின் றோமே இவர்களிடம் இன்னொரு தேவை யிருக்கின்றது. அது என்ன தெரியுமா? இதற் கான விளக்கத்தில் தான் உள்ளடங் கியிருக்கிறது. கண்ணனுக்கும் ராதைக்கு முரிய பரிபூரண உலக பந்தம்.

நம்மைப் போன்ற சாதாரண ஆணாலோ பெண்ணாலோ இன்னொரு ஆண்துணையின்றியோ அல்லது பெண் துணையின்றியோ வாழ்ந்து விட முடியும். ஏனென்றால், நமக் குள்ளே ஆண் பெண் இருவருக்குமான பகுதிகள் உண்டு என்று முன்னமே நான் கூறிவிட்டேன். எனவே நாம் இவ்வாறு தனித்தும் வாழ்ந்திட முடியும்.

ஆனால் கண்ணனும் ராதையும் அவ்வா றானவர்கள் அல்ல, கண்ணனால் தனித்து வாழவோ தனித்து முழுமையடையவோ முடி யாது. அவன் முழுமையான இயல்பு கொண்ட ஒரு ஆண்மகன். ஆதலால் அவனுக்கு முழு மையான இயல்பு கொண்ட ஒரு பெண் தேவைப்படுகிறாள். அதே போலத்தான் ராதையும். எனவே கண்ணனுக்கு ராதை அவசியமாகிவிடுகிறாள்.

ராதையை விடுத்து வேறு எந்தப்பெண் கண்ணனுடன் உறவு கொள்ள விரும்பி னாலும் கண்ணனால் அவளுடன் பூரணமாக உறவு கொள்ள முடியாது. ஏனெனில் அவன் உறவு கொள்வதற்கு பூரணமான பெண் இயல்பு கொண்டவளே தேவை. கண்ணன் ராதையிடம் தன்னை முழுமையாக கொடுத்து அவளை தன்னுடன் முழுமையாக எடுத்துக்கொண்டுவிடுகிறான். இதன் காரணமாகத்தான் கண்ணனின் சட்டபூர் வமான உரிமை உள்ளவளான ருக்மணி அகற்றப்பட்டு அடையாளமற்ற சட்டபூர் வமற்ற ராதை கண்ணனின் நாயகியாக குறிப்பிடப்படுகிறாள்.

உலகைப் பொறுத் தவரையிலும் நேர் நிலை எதிர்நிலை இல்லாமல் எதுவுமே முழுமையடைந்துவிடாது.

மனிதவாழ்விலும் அப்படித்தான். ஆண் பெண் இருவருமே ஒருவர் இல்லாது மற்றவர் முழுமையடைந்திட முடியாது, ஓஷோவைப் பொறுத்தவரையிலும் ஆணும் பெண்ணும் ஆண்மையும் பெண்மையும், ஆக்கிரமிப்பும் சரணாகதியும், போரும் அமைதியும், ஒன் றிணையும் பூரண ஒருமைப்பாட்டில் தான் வாழ்வு முழுமையடையும் என்கிறார். கண்ணன் ராதையினுடைய இந்த உறவுக்கு சீன மொழியில் தான் பூரண விளக்கத் தினைப்பெற முடியும். சீன மொழியில் ஒவ்வொரு சொல்லுக்கும் எழுத்துக்கும் பொருள் உண்டு அது சித்திர மொழியென அழைக்கப்படுகிறது .

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளிகள் பல

தீபாவளி என்றால் பட்டாசும் பட்சணங்களும் வெடியோசையும் தான் எம் நினைவில் வந்துபோகும். மத்ததாப்பிலிருந்து கிளம்பும் பொறிகளைப்போலவே தீபாவளியின் சிறப்பையும் சொல்லிவிளக்கமுடியாது. நமது பள்ளிக்காலத்தில் சொல்லிக்கொடுக்கப்பட்ட நரகாசுரன் சம்காரத்தின் மூலம் தான், தீபாவளியின் தார்ப்பரியம் நமக்குத் தெரியவந்தது. ஆனால் உலக நாடுகள் பலவற்றிலும் வெவ்வேறு விதங்களில் கொண்டாடப்படும் இப்பண்டிகையின் விதவிதமான வழக்கங்களைப் பார்க்கும் போது இத்தனை வகைவகையாக தீபாவளிகளா, இத்தனை நம்பிக்கைகளா என்று நம்மை வியக்கவைக்கிறது.

சுவாமி வாமனராக வந்து மகாவலியை ஆட்கொண்டது, ஐப்பசி மாதத்தில் கிருஷ்ணபட்ச (தேய்பிறை)

**மகாலட்சுமி தீபாவளி :** தீபாவளியன்று அதிகாலையில் குளித்து, மகாலட்சுமியை வழிபட்டு வீட்டின் பல பாகங்களிலும் விளக்கேற்றி வைப்பதால், விளக்கொளி படுகின்ற இடமெல்லாம் லட்சுமிதேவி வாசம் செய்வாள், எனவும் மகாலட்சுமியை மகாவிஷ்ணு திருமணம் செய்துகொண்ட நாளே தீபாவளி என்னும் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது.



**சிவாஜி தீபாவளி :** தீபாவளியன்றுதான் சத்ரபதி சிவாஜி பகைவர்களின் கோட்டையைக் கைப்பற்றினார். இதை ஞாபகப்படுத்தும் விதமாக தீபாவளியன்று வீட்டு வாசலில் மண்ணாலான ஒரு சிறிய கோட்டையைக் கட்டி இந்நிகழ்ச்சியில் சிறுவர்கள் அனைவரும் பங்கெடுத் தக்கொள்ளச் செய்வது இதன் சிறப்பாகும். மும்பையின் பல பகுதிகளிலும் நடைபெறும் திபாவளி இதுவாகும்.

**ஜப்பானில் தீபாவளி :** இந்நாட்டில் தீபாவளி, டோனோராகாஷி என்ற பெயரில் கொண்டாடப்படுகின்றது. ஆசி வழங்கவரும் முன்னோர் களை வரவேற்பதற்காக விளக்குகளை வரிசையாக ஏற்றிவைப்பார்கள். இவ்வழிபாடு முந்நூறு வருடங் களாக நடைபெற்று வருகின்றது.

**திருமகள் தீபாவளி :** நரகாசுரனை வதம் செய்வதற்காக கிருஷ்ணபரமாத்மா புறப்பட்டார். இதே சமயம், பாணாசுரன் லட்சுமி தேவியை தூக்கிவரப் புறப்பட்டான். இதனை அறிந்த லட்சுமிதேவி, அரக்கர்கள் வருவதற்குள் அங்கு எரிந்துகொண்டிருந்த தீபச்சுடரில் ஐக்கியமானதால் அன்று விளக்குகளை வரிசையாக ஏற்றி திருமகளை வழிபடு வதாகவும் சொல்லப்படுகின்றது.

**ராமாயணத் தீபாவளி :** இராவண வதம் முடிந்து, இராமர், சீதை,லட்சு மணன் ஆகியோர் அயோத்தியை அடையும் போது அதிகாலை மூன்று மணி. அயோத்தி நகரவாசி கள் அந்த இரவில் ஏராளமான விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து சீதாராமரைத்தரிசித்து மகிழ்ந்தார்கள். அரண்மனைக்குள் நுழைந்ததும் கோசலாதேவி கேட்டுக்கொண்டதையடுத்து சீதை தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபாடு செய்தார். இந்த நாளே தீபாவளியாகும்.

**சீனத்தில் தீபாவளி :** விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து வழிபடுவார்கள். அவரவர் வீட்டுக் கதவுகளில் 'நன்றாக வாழ் வளம் பெருகட்டும் ஆதாயம்' போன்ற சுபமான வாசகங்களை எழுதிவைத்து கொண்டாடி வியாபாரிகள் புதுக்க ணக்கு தொடங்குவார்கள்.

**விக்ரமாதித்த தீபாவளி :** உஜ்ஜையின் மன்னரான விக்ரமாதித்தன், ஷாகாஸ் என்பவனை வென்று முடிசூடிக் கொண் நாள் தீபாவளியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ரீதியான திருத்தல் சேவையுடன் தரம் -04 மாணவர்களின் (2019) பரீட்சைப் பெறுபேற்று அடைவை அறிந்துகொள்வதற்கு ஒளிஅரசி நடத்தும் தனித்துவப் பரீட்சை செயற்றிட்டம்

# சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள் - 2018

கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல சிங்கள பத்திரிகையில் வெளிவந்த வினாத்தாள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு எமது ஆசிரியர் குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டு இங்கு வெளியிடப்படுகின்றது.

இவ்வினாத்தாளை நேரம் கணித்து சுயமாக எழுதச்செய்து இல 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி என்ற முகவரிக்கு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ்வினாத் தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உங்கள் முகவரிக்கு 10 நாட்களுக்குள் தபாலிடப்படும். (முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட மேலதிக கடித உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

நல்லதொரு குடும்பம்

## ஒளிஅரசி பரீட்சைத் தொடர் - 03(நவம்பர்)

தரம் 4

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2018

## தபால் மூல பரீட்சை செயற்றிட்டம்

முழுப்பெயர்: - ............................................................

பாடசாலை: - ............................................................

வீட்டின் சரியான தபால் முகவரி - ............................................................

............................................................

தொ.பே. இல. ...................................... பிறந்த திகதி. ......................................

வினாத்தாள் -I
புள்ளிப் பதிவு

வினாத்தாள் -II
புள்ளிப் பதிவு

மொத்தப்புள்ளிகள்

### பாராட்டுப் பெறுவோர்

கடந்த பரீட்சையில் 100 புள்ளிக்குமேல் பெற்று பாராட்டுப்பெறும் மாணவர் விபரங்கள் அறிவுக்களஞ்சியம் என்ற இணைப்புக் கையேட்டில் 09ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

..........................
மேற்பார்வையாளர்

..........................
பொறுப்பாசிரியர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தரம் 4

# படிமுறை மாதிரி வினாத்தாள் - 2018



**வினாத்தாள் I** நேரம் : 45 நிமிடங்கள்


★ **முதல் உருவிற்குப் பொருத்தமான உருவினைத் தெரிவு செய்க.**

01)  1.  2.  3. 

02)  1.  2.  3. 

★ **தம்மிடையே தொடர்பற்ற உருச்சோடியை தெரிவு செய்க.**

03) 1.  2.  3. 

04) 1.  2.  3. 

★ **பின்வரும் கட்டத்தினை அவதானித்து வினாக்களுக்குரிய விடையை தெரிவு செய்வோம்.**

| | | | |
|---|---|---|---|
| K | C | B | B |
| △ | | | |
| A | B | K | * |
| K | * | | K |
| * | * | K | |
| △ | B | | △ |
| K | B | C | B |

05) சமமாக உள்ள எழுத்துக்கள்,
1. AC 2. BK 3. CB

06) மிகக் குறைவாக உள்ள எழுத்து,
1. A 2. B 3. K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**★ இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

07) சமீராவும், முகமதுவும் ...................................... நண்பர்களாக விளங்கினர்.
1. நகமும் சதையும் போல
2. ஓடும் புளியம்பழமும் போல
3. தாமரை இலைமேல் தண்ணீர் போல

08) தாய்தன் குழந்தையை .................................. வளர்த்து வந்தாள்.
1. உள்ளீடற்ற பதர்போல
2. கண்ணை இமை காப்பது போல
3. கல்லில் நார் உரிப்பது போல


09) கீழ்வரும் வாக்கியங்களில் ஆசிரியர் ஒருவரின் கூற்றாக அமைவது,
1. எழுத்துப்பிழைகளின்றி உறுப்பமைய எழுதுங்கள்.
2. உங்களிற்கான ஆசனங்களைப் பதிவு செய்யுங்கள்
3. மாத்திரைகளை நேரம் தவறாமல் உட்கொள்ளுங்கள்.

10) ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா,
1. பவளவிழா
2. வெள்ளிவிழா
3. பொன்விழா

11) அந்தப்புரம் என அழைக்கப்படும் இடம்,
1. முனிவர்கள் வாழுமிடம்
2. அரண்மனையில் பெண்கள் வசிக்குமிடம்
3. ஆலயத்தில் பூங்கா அமைந்துள்ள இடம்


**★ எண்கோலத்தில் விடுபட்ட எண்ணை தெரிவு செய்க.**

12)





1. 16
2. 36
3. 29

13)




1. 20
2. 18
3. 25

14)



இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1. 10
2. 12
3. 13

15) இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?
1. 5
2. 6
3. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ **பின்வரும் பாடலை பாடியவர்களைத் தெரிவு செய்க.**

16) அருமை மிக்க நண்பனுக்கு
கடிதம் எழுதவே
ஆசையாக வெள்ளைத் தாளை
எடுத்துக்கொள்ளுவேன்...
1. சுப்பிரமணிய பாரதியார் 2. அழ.வள்ளியப்பா
3. தேசிகவிநாயகம்பிள்ளை


17) மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு
1. திருவள்ளுவர் 2. ஔவையார் 3. சுந்தரர்


18) அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும் என்ற கருத்தை புலப்படுத்தும் பழமொழி
1. சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது
2. அறையில் ஆடியபின் அம்பலத்தில் ஆடு
3. அடாது செய்தவன் படாது படுவான்

19) யாவருக்கும் இல்லை என்று கூறாது கொடுப்பவன்
1. விவேகி 2. வள்ளல் 3. ஆத்திகன்


20) நீர், நிலம், காற்று, ஆகாயம், தீ என்பவற்றைக் குறிக்கும் தொகைப்பெயர்,
1. பஞ்சபூதம் 2. பஞ்சலோகம் 3. பஞ்சாயுதம்

✱ **கீழ்வரும் தொடர்புகளை கண்டறிந்து அதற்கேற்ப வினாக்களிற்கு விடை எழுதுக.**




21)  இன் பெறுமானம் யாது?



1. 12 2. 13 3. 14

22)  இன் பெறுமானம் யாது?


1. 36 2. 28 3. 32

23) கண்ணன், குமார் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 28 வருடங்கள் எனின், 4 வருடங்களின் பின் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை என்ன?
1. 32 வருடங்கள் 2. 36 வருடங்கள் 3. 38 வருடங்கள்

24) நான்கு முகங்கள் உண்டு, ஆறு விளிம்புகள் உண்டு, நான்கு உச்சிகள் உண்டு பின்வருவனவற்றுள் எது?

1.  2.  3. 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25) 

அடுத்த உருவங்களில் வரும் புள்ளிகளின் எண்ணிக்கை முறையே,



1. 20, 16 2. 16, 25 3. 25, 36

✱ **கீழே தரப்பட்ட சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

26) தகவல் - கேட்டல்

1. 
2. 
3. 

27) ஒளி - இயற்கை

1. 
2. 
3. 


✱ **சரியானத் தொடர்பைத் தெரிவு செய்க.**

28) பாடசாலை - கல்வி - எனின், நீதிமன்றம் ..........................................

1. குற்றம் 2. தண்டனை 3. நீதி


29) கோடை - வெப்பம் எனின், மாரி ..........................................

1. மழை 2. குளிர் 3. பனி

30) 

உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது ?


1. 8 2. 9 3. 10

31) 


இரண்டு உருக்களின் சுற்றளவுகளின் கூட்டுத்தொகை,

1. 80cm 2. 65cm 3. 45cm


32) படத்திற்கு பொருத்தமான விடையாக அமைவது,




1. நிறை அளத்தல்
2. நீளம் அளத்தல்
3. காலம் அளத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33) படத்திற்கு பொருத்தமான விடையாக அமைவது,



1. சதுரமுகி
2. கனவுரு
3. நான்முகி

**✱ ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத சொற்கள் இடம்பெறும் சொற்கூட்டத்தை தெரிவு செய்க.**

34)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | குழந்தை<br>சிசு<br>சேய் | 2. | ஒலி<br>ஓசை<br>சத்தம் | 3. | அறிவு<br>விவேகம்<br>புன்னகை |

35)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நங்கை<br>மங்கை<br>வனிதை | 2. | உண்மை<br>சத்தியம்<br>வாய்மை | 3. | பதி<br>தலைவன்<br>புதல்வன் |

36) பறவைகள் மழைநின்று சிறிது நேரத்தில் தலைகாட்டத் தொடங்கின. என்பதில் வரும் தலை காட்டுதல் எனும் மரபுத்தொடர் குறிப்பது,


1. வெளிவருதல் 2. கீச்சிடுதல் 3. ஒதுங்குதல்

37) பெரியவர்களுடன் கதைக்கும்போது சிறியவர்கள் நாக்கு நீளுதல் தவறு இதில் நாக்கு நீளுதல் எனும் மரபுத்தொடர் குறிப்பது,

1. பேச முடியாதிருத்தல் 2. அடக்கமின்றிப் பேசுதல்
3. பிடிவாதம் பிடித்தல்


**✱ அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.**

38)



1. 2. 3. 4.

39)



1. 2. 3. 4.

**✱ தரப்பட்ட சொற்கள் எதனுடன் நெருங்கிய தொடர்புபட்டது.**

40)

| |
|---|
| புத்தகம்<br>சஞ்சிகை<br>பத்திரிகை |

1. கடை 2. நூலகம் 3. அலுவலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 4

# படிமுறை மாதிரி வினாத்தாள் - 2018

பகுதி - II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பெரியவரே! இங்கிருந்து பக்கத்தில் இருக்கும் கிராமத்திற்கு போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்? என்று கேட்டான். அமைதியாக இருந்த பெரியவர் அவனை நிமிர்ந்து பார்த்தார். அவனுடைய கேள்விகளுக்குப் பெரியவர் பதில் சொல்லவில்லை. சீடன் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டான். அப்பொழுதும் அவர் பதில் சொல்லவில்லை. சீடன் ஒரு முடிவுக்கு வந்தான். அவன் புத்தி சுவாதீனம் அற்றவர் என்று நினைத்துக் கொண்டு வந்த வழியே திரும்பி நடந்தான்.

01) இப்பந்தியில் வந்துள்ள நிறுத்தற்குறிகள் எவை?

......................................................................................................

02) ''அவனுடைய கேள்விக்கு பெரியவர் பதில் சொல்லவில்லை'' என்பதை பன்மை வாக்கியமாக எழுதுக.

......................................................................................................

03) இப்பந்தியில் வரும் எதிர்க்கருத்தைத் தரும் சோடி ஒன்று எழுதுக.

......................................................................................................

04) அமைதி என்பதன் எதிர்ச்சொல் யாது? ..................................................

05) இங்கிருந்து என்பதை பிரித்தெழுதுக. ......................... + .........................

06) உயர்திணை வினைமுற்றுச் சொல் ஒன்று எழுதுக.

......................................................................................................

**02) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) நீ நீடூழி காலம் ............................................ (வாள், வாழ்)

02) ஆழம் ........................................ (அறியாமல், அரியாமல்) காலை விடாதே.

**03) தொடக்கத்தில் தரப்பட்ட சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) அரசன் : முதியவன், மன்னன், புலவன்

2) சினம் : சாந்தம், இன்னல், கோபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) பாம்பு : வீடு, சர்ப்பம், அசுவம்

**04) சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

01) பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்தது. ..................................

02) ஓடினான் என்பது பன்மை வினைச்சொல் ஆகும். ..................................

**05) பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

01) ஐயோ பாம்பு என்று கத்தினான்

02) கடற்கரையில் சிறிய சிப்பிகள் ஊரிகள் ஆகியவற்றைச் சேர்த்தேன்

**06) ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியமாக எழுதுக.**

01) முயல் / துள்ளி / ஒன்று / துள்ளித் / வந்நது

........................................................................................................................

02) விழித்தெழுந்து / பறவைகள் / தேடப் / இரை / சென்றன / பறந்து

........................................................................................................................

**07) பின்வரும் மரபுத் தொடர்கள் உணர்த்தும் கருத்தினை எழுதுக.**

01) உச்சிகுளிருதல் : ..............................................................................................

02) தோள்கொடுத்தல் : ..............................................................................................

**08) பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக.**

01) பலாவிலை : ....................... + ..........................

02) கரும்பலகை : ....................... + ..........................

**09) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) ஒலிம்பிக் போட்டியின் குறிக்கோள் என்ன?

........................................................................................................................

........................................................................................................................

02) கடிதத்தில் எழுத்துக்களை எவ்வாறு எழுத வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

........................................................................................................................

10) ''நான் கண்ட விபத்து'' என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வசனத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.


1. ................................................................................................

2. ................................................................................................

3. ................................................................................................

11) பின்வரும் படங்கள் குறிக்கும் சிங்களச் சொற்களை தமிழில் எழுதுக.

01. 

02) 

.................................... ....................................


12) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.

01. தே பொன்ன - ................................................................

02. தும்ரியஸ்தானய - ................................................................

13) பின்வரும் படங்கள் குறிக்கும் ஆங்கிலச் சொற்களை எழுதுக.

01. 

02) 

.................................... ....................................

14) பின்வரும் ஆங்கிலச் சொல்லின் தமிழ்க் கருத்தை எழுதுக.

01. blakck board - ................................................................

02. please sit down - ................................................................

03. happy new year - ................................................................

15) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01) அதிகளவு பயன் தரக் கூடியது,
1. தேக்கு 2. கமுகு 3. தென்னை

02) மனதை ஒருநிலைப்படுத்தும் தியானப் பயிற்சியில் நான்காவதாக அமைவது,
1. மனவுறுதி 2. பிரார்த்தனை 3. உதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) சூரிய ஒளியிலிருந்து எமக்குக் கிடைக்கும் விற்றமின்,
1. A 2. D 3. C

04) உடல் வளர்ச்சிக்குரிய போசணைக்கூறு,
1. புரதம் 2. மாப்பொருள் 3. விற்றமின்


05) தாவரங்களின் இலைகள் உண்ணும் பிராணி,
1. கறையான் 2. நத்தை 3. வௌவால்

06) நீரில் மாத்திரம் வாழும் விலங்கு,
1. தவளை 2. ஆமை 3. இறால்

07) நீரில் இடும்போது மிதக்கும் பொருள்,
1. கல் 2. பனிக்கட்டி 3. கண்ணாடித்துண்டு

08) அதிகளவு வியர்வை வெளியேற்றப்படும் விளையாட்டு,
1. எல்லே 2. தாயம் 3. சதுரங்கம்

09) நாட்டில் நடைபெறும் இயற்கை அழிவு அல்லாதது,
1. சுனாமி 2. வறட்சி 3. குண்டுவெடிப்பு

10) 

இவ் விளையாட்டில் ஓர் அணியில் பங்கு பற்றும் வீரர்களின் எண்ணிக்கை,
1. ஆறு
2. பதினொன்று
3. பத்து

11) அத்தாங்கை பயன்படுத்தி வேலை செய்பவர்,
1. மீனவர் 2. தச்சர் 3. மேசன்

12) பௌத்தர்களின் வழிபாட்டுப் பிரதான நூல்,
1. திருக்குறள் 2. திரிபீடகம் 3. உபநிடதம்

13) அரச இலச்சினையில் நெற்கதிர் குறித்து நிற்பது,
1. சௌபாக்கியம் 2. தன்னிறைவு 3. தார்மீகம்

14) இலங்கயில் உள்ள மிக உயரமான செயற்கை நீர் வீழ்ச்சி எது?
1. பம்பரகந்த 2. துன்கிந்த 3. விக்டோரியா

15) நீல நிறத்துடன் மஞ்சள் நிறத்தைக் கலந்தால் வரும் நிறம்,
1. பச்சை 2. ஊதா 3. சிவப்பு

16) வீட்டுத்தோட்டத்தில் நடும்போது முளைக்க நீண்ட நாள் தேவைப்படும் வித்து,
1. பயறு 2. உழுந்து 3. பாகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) சமுதாய வாழிகள் எனப்படும் பிராணி,
1. கறையான் 2. நாய் 3. மாடு

18) தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் சந்தர்ப்பம்,
1. ஜனாதிபதியின் பிறந்தநாள் 2. நாட்டின் சுதந்திர தினவிழா
3. நாட்டின் தலைவரின் இறப்பு

19) வீதியில் பாதசாரிகள் கடைப்பிடிக்கக் கூடாதது,
1. வலது புறமாக செல்லல் 2. கூட்டமாகச் செல்லுதல்
3. மஞ்சட் கோட்டுப் பகுதியால் கடத்தல்

20) குமணன் வடக்கு நோக்கி 10m தூரம் சென்று வலது பக்கம் திரும்பி 10m மேலும் சென்றான். குமணனின் ஆரம்ப இடம் இப்போது குமணனுக்கு எத்திசையில் உள்ளது?
1. ஈசான மூலை 2. அக்கினி மூலை 3. நிருதி மூலை

**16) விடை எழுதுக.**

01) ஒரு தொட்டியில் நிரப்பியிருந்த 931 லீற்றர் நீரில் 397 லீற்றர் நீர் பாவிக் கப்பட்டதெனின் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?

..........................................................

02) சம எண்ணிக்கையிலான வாழைப்பழங்களைக் கொண்ட ஒரு வாழைப்பழச் சீப்பில் 17வாழைப்பழங்கள் இருந்தன எனின், 6 வாழைப்பழச் சீப்புக்களில் உள்ள மொத்த வாழைப்பழங்கள் எத்தனை?

..........................................................

03) நான்கு பாடசாலைகளுக்கு சமமாக பகிர்ந்து வழங்குவதற்கு கொண்டு வரப்பட்ட தளபாடங்களின்எண்ணிக்கை 216 எனின் ஒரு பாடசாலைக்குக்கிடைக்கும் தளபாடங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................

04) 2mநீளமானகம்பித்துண்டில்5cmநீளமானஇரண்டுதுண்டுகள்வெட்டப்பட்டபின் 10cm நீளமான எத்தனை துண்டுகள் வெட்டலாம்?

..........................................................

05) என்னிடம் ரூபா 650.00 உண்டு. அதனை மூன்று தாள் காசு மூலம் ஒருவருக்கு கொடுக்க வேண்டும் எனின், கொடுக்கக் கூடிய தாள்காசுகள் எவை?

..........................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06) பி.ப 1.15 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த ஒருவன் பி.ப 2.10 இற்குபயணத்தை நிறைவுசெய்தான் எனின், அவன் பயணத்துக்கு செலவு செய்த நேரம் யாது?

..............................................

07) 300ml பாலை 15ml குவளைகொள்ளக்கூடிய எத்தனை பாத்திரங்களினுள் ஊற்ற முடியும்?

..............................................

08) 5cm நீளம், அகலம் கொண்ட இரண்டு சதுரங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிய பின்னர் அதன் சுற்றளவு யாது?

..............................................

09) ஒரு பிள்ளைக்குத் தினமும் காலையிலும், மாலையிலும் உணவாக மூன்று விசுக்கோத்துகள் வீதம் வழங்கப்படுகின்றன. இதற்காக 72 விசுக்கோத்து அடங்கிய பைக்கற்று எத்தனை நாட்களுக்கு போதும்?

..............................................

10) 1kg வாழைப்பழத்தின் விலை 40.00 ஆகும். 1kg 250g நிறையுள்ள வாழைப்பழத்திற்கு எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்?

..............................................

11) 321 பயிற்சிப் புத்தகங்கள் மூன்று வகுப்புகளுக்குச் சமனாகப் பங்கிடப்பட்டன. ஒரு வகுப்பிற்கு எத்தனை புத்தகங்கள் கிடைத்தன?

..............................................

12) ஒரு சதுரப் பூம்பாத்தியைச் சுற்றி இரண்டு தடவைகள் முட்கம்பி அடிக்க 220m கம்பி தேவைப்பட்டது எனின், அம்பூம்பாத்தியின் ஒரு பக்க நீளம் யாது?

..............................................

13) ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பங்குனி மாதம் 6850 ஆடைகளும், சித்திரை மாதத்தில் பங்குனி மாதத்தை விட 885 குறைவாகவும் உற்பத்தி செய்யப்பட்டன. இரண்டு மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................

14) திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மு.ப 9.15 இற்கு சென்றடைய வேண்டிய பேருந்து 35 நிமிடங்கள் தாமதமாக சென்றது எனின், பேருந்து சென்றடைந்த நேரம் யாது?

..............................................

15) ஐங்கோணி ஒன்றின் மூலை விட்டங்கள் எத்தனை?

..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

திரியோதசியில். மூவுலகங்களையும் மூன்றே நாட்களில் அளந்து எடுத்துக்கொண்ட சுவாமியிடம், மகாவலி, சுவாமி, சுவாமி, இந்நிகழ்ச்சி நடந்த மூன்று நாட்களில் இடையில் உள்ள நாளான சதுர்தசி அன்று, இருள் விலகும் நேரத்தில் மக்கள் எண்ணெய் தேய்த்துக் குளித்து, புனிதமாகக் கொண்டாடவேண்டும். இந்த மூன்று நாட்களிலும் மக்கள் தங்கள் வீடுகளில் விளக்கேற்றி, அறியாமையாகிய இருள் ஞானமாகிய ஒளியால் விலகட்டும் என்று மகாவிஷ்ணுவாகிய தங்களை வேண்டிக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு நீங்கள் அருள்புரிய வேண்டும் என் வேண்டிக்கொண்டான். ஆவளி என்றால் வரிசை, தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து நாம் வழிபடும் நாளே தீபாவளி. இதுபோன்ற பல விதமான தீபாவளிகளைப் பற்றி இனிப்பார்க்கலாம் வாருங்கள்.

**மார்வாடித் தீபாவளி :** மார்வாடிகள் மாலை நேரத்தில் பூஜையைத் தொடங்கி நள்ளிரவு வரை நடத்துவார்கள். அனைத்து வாடிக்கை யாளர்களையும் அழைத்து அவர் களுக்கு புதுப்பட்சணங்களை பிரசாதமாக வழங்கி புதுக்கணக்கு தொடங்குவார்கள்.

**தாய்லாந்தில் தீபாவளி :** இங்கே லாய் க்ரடாங் என்ற பெயரில் தீபாவளி கொண் டாடப்படுகின்றது. தீபாவளியன்று வாழையிலையால் செய்யப்பட்ட தொன்னையில் மெழுகுவர்த்தியையும் ஊதுவத்தியையும் எற்றிவைத்து அதில் காசைப்போட்டு நீரில் மிதக்கவிடுவார்கள்.

**வடக்கத்திய தீபாவளி :** தீபாவளி, நவராத்திரி, கார்த்திகை தீபம் இம்மூன்றையும் தீபாவளி நாளையொட்டி ஒரே பண்டிகையாக வடஇந்தியாவில் கொண்டாடுவார்கள். தீபாவளியன்று வண்ணப்பொடிகளால் வாசலில் (ரங்கோலி) கோலம் போட்டு மண்பொம்மைகளை அலங்காரமாக வைப்பார்கள். மறுநாள் லட்சுமி பூஜை செய்வார்கள். புதிய பொருட்கள் வாங்குவதும் புத்தாடை அணிந்து மகிழ்வதும் நடைபெறும். மூன்றாவதுநாள் பகல் வேளையில் சகோதர சகோதரிகள் வீடுகளிற்குச் சென்று பரிசளித்து விருந்து சாப்பிட்டு அன்றைய இரவு நேரத்தில் வீடுகளில் விளக்கேற்றி வழிபாடு செய்வார்கள்.

**குரு கோவிந்சிங் தீபாவளி :** சீக்கியர்களின் ஆறாவது குருவான குருகோவிந் சிங்கையும் இராஜபுத்திர அரசர்கள் 52பேரையும் சிறையில் அடைத்தான் ஜகாங்கீர். குருகோவிந்சிங், தானும்தன்னுடன் அடைபட்டு இருந்தவர்களையும் தப்பவைத்தார். இவர்களுக்கு வர வேற்பளிக்க பொற்கோயில் விளக்குகளை எற்றி, தத்தமது வீடுகளிலும் விளக்கேற்றி வழிபாடு செய்தனர். இந்நாளே தீபாவளியாகும்.

இவ்விதமாக பல நாடுகளிலும் பல ஊர்களிலும் பலரால் பல விதமாக கொண்டாடப்படும் தீபாவளியானது, நரகாசுரன் முக்தியடைந்த அந்நாள் தான் என்கின்றனர். நரகாசுரனை சம்காரம் செய்த நரக சதுர்த்தசி என்றும் என்னும் தீபத்திருநாள், அழைக்கப்படுகின்றது. இவ்வரலாற்றில் கிரிதுர்க்கம், அக்கினி துர்க்கம், ஜலதுர்க்கம், வாயு துர்க்கம் என்னும் கோட்டை களைத் தாண்டி கண்ணன் உட்புகுந்தார் என்பது, பஞ்ச பூதங்களான நம் உடலினுள் புகுந்து நமக்கு அருள்புரிகிறார் கண்ணன் என்பதைக் குறிப்பதாகவும் சொல்லப்படுகின்றது. பஞ்ச பூதங்களாலான நம் உடலில் பகவானைக் குடியேற்றி நம் மனதில் இடம் கொடு த்தால் எமது அறியாமையைப் போக்குவான். இதுவே தீபாவளியின் உட்பொருள். இதனை நன்குணர்ந்து தீபங்கள் ஏற்றுங்கள், பாவங்கள் போகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆக்கம் : வேதநாயகம் தபேந்திரன்,
கைதடி

# செல்லப் பிராணிகளும் செல்லப் பொழுதுகளும்

''பெற்றம்மா, பெற்றம்மா'' ''ஓம். என்ன வேணும் சொல்லுங்க.''

அந்தச் செல்லக் கிளி தன் எஜமானனது பழக்கத்தால் பதில் சொல்லியது.

சொன்னதையே திருப்பிச் சொல்பவர் களை கிளிப்பிள்ளை பேச்சு என்று அழைக்கும் ஓர் வழக்கம் பன்னெடுங்காலமாகத் தொடர்கிறது. இன்னும் சில காலத்திற்குப் பின்பாக கிளிப்பிள்ளை தொடர்பான சொல் வழக்கம் காணாமல் போகும் மரபுகளில் ஒன்றாகியும் விடலாம்.

கிளி வளர்ப்பது எமது கிராமியப் பண்பாடாக இருந்தது ஒரு காலம். பலரது வீடுகளுக்கு மின்சாரம் கூட இல்லாத காலம். வீடுகளில் பலவித பொழுது போக்கு அம்சங்கள் இருக்கும்.

சிறுவர்கள் கிளி வளர்ப்பார்கள், புறா,மைனா, மயில் குஞ்சு, அணில் குஞ்சு,வளர்ப்பது கூட சாதாரணமான காலம்.மழைக்காலம் வந்தால் தும்பி பிடிப்பதும் ஓர் பொழுதுபோக்குத் தான். ஏன் சிறுவர்களைக் கூறுவான் பெரியோர்கள் கூட இவற்றை விரும்பி வளர்த்தார்கள். வீடுகளில் மீன்தொட்டி வைத்திருந்து கலர் மீன்களை வளர்ப்பது இன்று கூட நாகரீகமாகத் தொடர்கிறது. சில பெற்றோர்கள் பறவைகளைக் கூடுகளில் அடைத்து சித்திரவதை செய்வது கூடாது என்று பிள்ளைகளைத் தடுப்பார்கள்.

தென்னைமரங்களில் மரங்கொத்திப் பறவை கொத்தி உண்டாக்கிய துளைகளில் கிளி தனது இருப் பிடமாக்கிக் கொள்ளும்.கிளி இட்ட முட்டைகளை பொத்தி பொத்தி அடைகாக்கும். கிளிக்குஞ்சுகள் பொரித்த பின் கீ.. கீ என சத்தமிடும். தாய்க் கிளி பறந்து சென்று உணவு தேடி தனது வாயில் கொண்டு வரும். மரப் பொந்தின் வாசலருகே நின்று தனது செல்லக் குஞ்சுகளுக்கு உணவூட்டும். அது பார்ப்பதற்கு கண் கொள்ளாக் காட்சி. சிலவேளை கிளி இட்ட முட்டைகளை தாய்க் கிளி இரை தேடிச் சென்ற நேரம் பாம்பு ஏறி குடிக்கும் நிகழ்வுகளும் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எப்படியோ கிளிக் குஞ்சுகள் பறந்து செல்ல முந்தி தாய்க்கிளி இல்லாத நேரம் அதைப் பிடிப்பதற்கு சிறுவர்கள் பெரியோர்களது உதவி களை நாடுவார்கள். கிளிக்குஞ்சு பிடிக்க ஆசைப்பட்டு மரமேறி வழுக்கி விழுந்து முள்ளந்தண்டு முறிந்து வாழ்நாளை அவலமாகக் கழித்தவர்களும் உண்டு. கிளிக் குஞ்சைப் பிடித்து வந்த போது சிறார்கள் ஆனந்தத்தில் துள்ளிக் குதிப்பார்கள்.

அதற்கெனக் கூடு அடித்து கொவ்வைப் பழம், வாழைப்பழம் போன்றவற்றை கிளிக்குக்கொடுத்து வளர்ப்பார்கள். கவனக் குறைவாக இருந்தால் இரவோடு இரவாக பூனை கிளிக் குஞ்சைப் பிடித்து உணவாக்கிய சோகங்களும் நிகழ்ந்தது.

தென்னை, பனை மரப் பொந்துகளில் கிளிக்குஞ்சுகளைப் பிடித்து விற்கும் வியாபாரம் கூட நடந்தது. புறா வளர்ப்பது கூட பொழுதுபோக்காக இருந்த காலம் அது. புறாக்களை வாங்கிவந்து வீடுகளில் மரப்பலகைப் பெட்டி அடித்து அதனுள் விட்டு வளர்ப்பார்கள். புறா வீட்டுச் சூழலில் பழகியதும் அதனை கைகளால் பிடித்துப் பறக்க விட்டார்கள்.

பறந்து போன புறா கெட்டிக்காரப் புறாவாயின் அயல் அட்டப் புறாக்களையும் அழைத்துக் கொண்டு தனது கூடு திரும்பும்.

தனது புறாவை உனது புற அழைத்துக் கொண்டு வந்து விட்தெனச் சண்டை பிடித்தோர்களும் இருந்தார்கள். வேறு புறாவை அழைத்துக் கொண்டு வந்தால் உரியவர் அறிய முன்பாக விற்றுக் காசாக்கிய விண்ணர்களும் இருந்தார்கள். புறாக்களுக்கு பெயர் சூட்டி அழைத்தபோது அவை பெயர் கேட்டுப் பறந்து வரும். வன்னிப் பிரதேசத்திலிருந்து மயில் முட்டை களைக் கொண்டு வந்து அவற்றைக் கோழி முட்டைகளுடன் கலந்து வைத்து அடைகாத்து குஞ்சு பொரிக்க வைப்பார்கள்.

மயில் குஞ்சு சற்று வளர கோழி கொத்திக் கலைக்கும். பின்பு மயில் குஞ்சுகளைத் தனியே வளர்ப்பார்கள். பெரிய காணிகள் சர்வசாதாரணமாக இருந்த அக் காலங்களில் மயில் வளர்ப்பது இலகுவானதாகவே இருந்தது. தென்னை மரப் பொந்து களில் மைனாக் குஞ்சுகளைப் பிடிப் பதும் அவற்றை வளர்த்ததும் கூட சிறுவர் பொழுது போக்காக இருந்தது. இவ்வதமான பொழுதுபோக்குகள் மனித வாழ்வில் உளத் திருப்தியை ஏற்படுத்தியது. உடல் உள உற்சாகம் இருந்தது. ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கைக்கு இத்தகைய பொழுது போக்குகள் வழிவகுத்தன.

மனித வாழ்வில் வசதிகள் பல கூடி தொலைக்காட்சி பார்த்தல், சமூக வலைத் தளங்கள், இணையம் பார்த்தல் என்பவை பல ஆரோக்கியமான பொழுது போக்குகளை எம்மிடமிருந்து பறித்து விட்டது. இருந்த இருப்பிலேயே பொழுதைக் கழிக்கும் பழக்க வழக்கங்கள் உடல் பருமனைக் கூட்டி ஆரோக்கியம் குறைந்த மனித சமூகத்தை உருவாக்கி விட்டது. கிராமியம் தழுவியதான எமது வாழ்க்கை முறைகள் உன்னதமானவை. உயர்வான மகிழ்வைத் தந்தன. உலகமய மாக்கமும் அதன் வழி வந்த பல்தேசியக் கம்பனிகளது காப்பிரேட் உலகமும் எமது பண வருவாய்களை மட்டுமல்ல மகிழ்வையும் சுரண்டிச் சென்று விட்டமை காலக்கொடுமை தான். கொடுத்து வைத்த வாழ்க்கை வாழந்த தலைமுறை ஒன்றின் பிரதிநிதியாகிய நான் அவ்வப் போது எனது சிறுபராயவ சந்தங் களை நினைத்துக் கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசம் என்னும் போதை

**கோபிகை**



பாசம், அன்பு, நேசம், காதல் இவை எல்லாம் ஒரே பொருள்கொண்டதே. இது உறவுகளுக்கிடையிலான பிணைப்பை அதிகப்படுத்தும் ஒன்றாகும். அதிலும் பெரும்பாலும் பெண்களே பாசத்தை அதிகமாகக் கொட்டுபவர்களாக உள்ளனர்.

அந்த பாசமே அவர்களுக்கு பாரிய சிக்கல்களை உண்டுபண்ணிவிடுகிறது. அன்பை அள்ளிக் கொடுப்பதில் பெண்ணுக்கு நிகர் பெண்ணே தான். பாகுபாடற்ற பாசத்தின் வெளிப்பாடே பெண்மை. பெண்மை அன்பில் நிறைகிறது.

மாமியார் மருமகள் பிரச்சினைக்கு மூலகாரணமாக அமைவதும் இந்த போதை தான். காதலித்த ஆணோ, காதலித்த பெண்ணோ விலகும் போது தற்கொலைக்கு முயற்சிப்பதும் தன்னிலை தெரியாது நடந்துகொள்வதும் கூட இந்த போதையினாலேயே ஆகும்.

சாதாரணமாக பெண்கள் அன்பிற்கும் அன்பினால் வரும் ஆளுகைக்கும் கட்டுப்பட்டவர்கள். அதே போன்று அன்பினால் ஆளுவதையும் விரும்புபவர்கள். அந்த ஆளுகையில் நேசம் நிறைந்திருக்கும், பாசம் கொட்டிக்கிடக்கும். அதனைச் சிலர் தவறாகக் கருதுவதும் உண்டு.

மாமியார் மருமகள் பிரச்சினையில் மாமியாரும் மருமகளும் முரண்பட்டு நிற்பதற்கும் இதுவே, இந்த அன்பெனும் போதையே காரணமாகிறது. காரணமாகிறது. அதாவது தன் மகன், தன் மகன் என பார்த்துப் பார்த்து வளர்த்த மகன், திடீரென்று இன்னொருத்தருக்கு சொந்தம் என்பதை சட்டென்று மனம் எற்க மறுப்பதால் ஏற்படும் ஆற்றாமையே மருமகள் மீதான மோதலாக வருகிறது. இதில் மருமகள் பாடும் அதே தான், தான், தன் குடும்பம் என வாழ்ந்தவள், அவர்கள் எல்லோரையும் விட மேலான ஒருவராக கணவனை எண்ணி அவனே தனக்கு அனைத்தும் என நம்பி வருகிகிறாள். வந்த இடத்தில் மாமியார் சின்னதாக முகம் திருப்பினாலும் மிகப்பெரிய வலியாக உணர்கிறாள். ஓரிரு முறை சமாளித்தாலும் பின்னர் அதனை கோபமாக மாற்றிவிடுவதால் தான் மாமியார் மருமகள் பிரச்சினை என்ற வார்த்தையே வருகிறது. உண்மையில் அதீத அன்பின் வெளிப்பாடே அதுவும். இது கூட ஒருவகை உரிமைப்போராட்டம் தான்.

ஆனால் இதனைத் தடுப்பதற்கு இலகுவான வழியொன்று உள்ளது. மாமியாரும் மருமகளும் தாயும் மகளுமாக மாறிவிட்டால், அல்லது இருவரும் நடைமுறை யதார்த்தத்தை புரிந்துகொண்டுவிட்டால் எந்த பிரச்சினையும் இல்லை.

இதுவே பலருடைய வாழ்விலும் இடம்பெறுகின்றது. அதாவது அன்பு என்ற ஒன்றுக்காய் அலைவதும் அதனை ஒரு போதை போல யாசிப்பதும் இயல்பாகிவிட்டது. அதனால் தற்கொலைகளும் மலிந்துவிட்டன. அன்பு அற்புதமானதே, அதற்காக பெண்களாகிய நாம் யாசிக்காதிருப்போம். இயல்பை புரிவோம். அன்பு காட்டுவோம், எம்மை நாம் அதிகமாக நேசிப்போம்.

★★★★★★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாகன சாரதிகளே உசாராகுங்கள்!

நாட்டு மக்களின் நலன் கருதி உருவாக்கப்படும் சட்டங்கள் என்பது பல உண்டு. அவற்றில் மக்களுக்குத் தெரியாதவையும் உள்ளன. சட்டம் பற்றிய பூரண தெளிவின்மையால் நிகழ்ந்த ஒரு சம்பவமே இம்மாத கழுகுப்பார்வையில் ....

அவர் ஒரு ஆசிரியர். ஒருநாள், பயணத்தின் போது வீதி விதிமுறையை மீறியமைக்காக போக்குவரத்து பொலிஸாரினால் மறிக்கப்பட்டு குற்றப்பத்திரம் எழுதப்பட்டது. அதில் நீதிமன்ற திகதி ஒரு மாதகாத்திற்கு பின்னரென எழுதப்பட்டிருந்தது. வேலைப்பழுவின் காரணமாக சரி ஒரு மாதத்திற்குள் சாரதி அனுமதி பத்திரத்தை பொலீஸ் நிலையத்தில் எடுக்கலாம்தானே என எண்ணிய அவர் பதினான்காம் நாள் பொலீஸ் நிலையம் சென்று 2000 ரூபாய் குற்றப்பணத்திற்கான நீளத்துண்டை பெற்றுக்கொண்டு பதினாறாம் நாள் பணம் கட்டுவதற்காக தபால் அலுவலகத்திற்குச் சென்றுள்ளார்.

அங்கே கூறப்பட்டிருந்த தகவல் அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதாவது நீதிமன்ற திகதி ஒரு மாதகாலம் எனினும் பதின்நான்கு நாட்களுக்குள் பணம் செலுத்தப்படாவிடின், அத்தொகையின் அதாவது 2000 ரூபாவின் இரண்டு மடங்கு பணத்தினைச் செலுத்தவேண்டும் எனவும்; நீதிமன்றத்தின் வேலைச் சுமையினைக் குறைக்கும் பொருட்டு இவ்வாறானதொரு சட்டம் நடைமுறையில் உள்ளது எனவும் தபால் அலுவலரால் கூறப்பட்டது.

இது வரை அப்படி ஒரு விடயத்தையே அறிந்திராத அவருக்கு அத்தகவல் அதிர்ச்சியாய் இருந்தது. அவர், மீண்டும் பொலிஸ் அலுவலகம் சென்று விசாரித்தபோது தற்போது இச் சட்டம் நடைமுறையில் உள்ளது எனவும் அவ்வாறுதான் பணம் செலுத்தவேண்டும் எனவும் கூறியுள்ளனர். ஆசிரியர் உரிய பொலீஸ் அதிகாரியுடன் முரண்பட்டார். இதே வேளை அங்கிருந்த இரு முதியவர்களும் இவ்விடயம் பற்றி பொலீஸ் அதிகாரியுடன் வாதாடியபடியே அங்கு நிற்பதைக்கண்டதும் ஆசிரியர், தலைமைப் பொலிஸ் அதிகாரியைச் (OIC) சந்தித்து விபரம் கேட்டபோது அவரும் அதனையே கூறியுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக குற்றப்பத்திரம் எழுதப்பட்டுள்ள சிட்டையின் பின்பக்கத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது என பொலீஸ் கூறியதும் அந்த தாளில் பின்புறத்தில் பழைய சட்டத்தின்போது அச்சடிக்கப்பட்டிருந்தபடி 14 நாட்களுக்கு முன் குற்றப்பணம் செலுத்தப்பட வேண்டும். என எழுதப்பட்டிருந்ததைக் கண்ணுற்ற ஆசிரியர், இது தொடர்பாக உயர் பொலிஸ் அதிகாரியிடம் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார்.

அதாவது, பணம் என்பது யாருக்கென்றாலும் வீண்விரயமே, இது தமிழ் மக்கள் வாழும் பிரதேசம், இங்கு தமிழ் மொழியில் தெரிவிப்பதே மக்களிடம் சென்றுசேரும், அப்படி இல்லா விட்டாலும் சம்பவ இடத்தில் நிற்கும் பொலிஸார், இவ்விடயம் தொடர்பாகவெனினும் மக்களிடம் கூறவேண்டும், அதைவிட சட்டதிட்டங்கள் மாறும்போது பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழியில் பெரிய எழுத்தில் எழுதிப்போடுவதே மிகச்சரியாகும், அத்துடன் பொலிஸ் அலுவலகம், தபால் அலுவலகம் போன்ற இடங்களிலும் இவ்விடயத்தினை காட்சிப்படுத்தி யிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதுவிட்டால் தமிழ் மக்கள் எப்படி இவ்விடயத்தினை அறிந்து கொள்வார்கள், எனக்கூறியதும் அவ்விடயத்தில் உள்ள உண்மையை விளங்கிக் கொண்ட பொலிஸ் உயரதிகாரி உடனேயே விளம்பரப்பலகையில் அவ்விடயத்தைக் காட்சிப் படுத்த ஏற்பாடு செய்தார்.

வாகனச் சாரதிகளே உத்தியோகத்தர்களே. இது தொடர்பில் விழிப்பாக இருந்து உங்கள் பணம் வீண் விரயமாவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். பொலீஸ் நிலைய அதிகாரிகளும் இவ்விடயத்தில் சட்ட திட்ட மாற்றங்களை அப் பிரதேச மக்களுக்கு தெரியப்படுத்தி குற்றங்களையும் குற்றப்பண வீண் விரயத்தையும் குறைப்பதற்கு உதவ வேண்டும்.

ஜனநாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் போடும் கணக்கு

**வீதியில் நடந்து வந்த பாமா, பக்கத்து வீதியால் வந்த அனுவைக் கண்டதும் நடையின் வேகத்தைக் குறைத்தாள். புன்னகை ஒன்றுடன் அனுவோடு உரையாடத்தொடங்கினாள். அவர்களின் உரையாடல் எம் வாசகர்களுக்காகவும்.**

பாமாத் : என்ன அனு முகமெல்லாம் ஒரு மாதிரிக்கிடக்கு, ஏதேனும் பிரச்சனையே ?

அனு : பிரச்சனை இல்லாம கிடக்கே, எங்க பாத்தாலும் பிரச்சனையாத்தானே கிடக்கு.

பாமா : அது சரி, அதை ஆர் இல்லையெண்டு சொன்னது, இப்ப உனக்கு என்ன பிரச்சனை, அதைச்சொல்லு.

அனு : எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை, போன இடத்தில கண்ட காட்சி மனசைக் குழப்பிப்போட்டுது.

பாமா ; அப்பிடி என்னத்தைக் கண்டனியப்பா?

அனு : எங்கட ராசம்மா ஆச்சிவீட்ட மகனும் மருமகளும் பிள்ளையளும் வந்திருக்கினம் எல்லே,

பாமா: ஓமோம், அதுக்கென்ன ?

அனு : பாவம் ராசம்மாவும், ஐயாவும்.

பாமா : ஏனடி, என்ன நடந்தது ?

அனு : ரெண்டும் ஏலாம கிடக்குதுகள், பேரப்பிள்ளையள பாக்க எண்டு கேட்டுத் தான், வீடெல்லாம் உடைச்சுக்கட்டி அவையள வரவைச்சினம், அந்தப் பிள்ளையள் ரெண்டுக்கும் தமிழில ஒரு வார்த்தை கூட தெரியேல்ல,

பாமா : என்னடி சொல்லுறாய், அப்பிடியெண்டா என்னண்டுதான் தாத்தா பாட்டியோட கதைக்குதுகள் ?

அனு : அதுதான் பெரிய பிரச்சனை, பாவம் அப்புவும் ஆச்சியும், பாசத்தை கூட பகிரத்தெரியாம நிக்குதுகள். அழுகையைத் தவிர வேற ஒண்டும் கதைக்காமல் இருக்குதுகள். வந்த பெடி ரெண்டும் கஸ்புஸ் எண்டதில மௌனமாவே இருக்கினம்.

பாமா : வெளிநாட்டால வாற சில பேரின்ர பிள்ளையள் நல்லா தமிழ் கதைக்கிதுகள், சில பேர்தான் இப்பிடி.

அனு : தாங்கள் வாழுற நாடுதான் தங்கட சொந்த நாடெண்டும், அதுதான் தங்கட மொழியெண்டும் சிலபேர் நினைக்கினம் போல, எனக்கு சரியான கவலையா கிடக்கிது.

பாமா : அதுசரிதான், மனசுக்குள் கொப்பளிக்கிற பாசத்தை கூட வெளிய காட்டமுடியாம வார்த்தைகள் புரியாத தருணங்களில் வேற என்னதான் செய்யுறது ?

அனு : யாரைச்சொல்லி என்ன, எங்கட சில சனங்கள் ஏன் தான் இப்பிடி இருக்குதுகளோ, எங்கட மொழியை சொல்லிக் குடுக்கிறதில பின்னிற்கலாமோ, எங்களுக்குப் பிறகுஇருக்க போறது எங்கட சந்ததிதானே, அதுகள் தானே நிலைமையைப் புரியவேணும்.

பாமா : நீ சொன்னது சரிதான், உதுகளைப்பாத்து மனம் வலிக்கிறதைவிட வேற என்ன செய்யமுடியும், காலம் பதில் சொல்லட்டும், வா போவம்.

பெருமுச்சொன்றை வெளிவிட்டபடி இணைந்து நடந்தாள் அனு.

ஜனநாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத்தின் சின்னங்கள்



மா வீரர்கள் நீங்கள்
மகா தீரர்கள்.
நிலம் காக்க வேரான எம்
நெஞ்சத்து நாயகர்கள்.

உன்னத இலட்சியத்திற்காய்
உதிர்ந்துபோன பூமலர்கள்
ஆகுதியாய் உயிர் வார்த்த
ஆணிவேர்கள் நீங்கள்.

நட்சத்திர பூக்களாகி
சிரிக்கின்றீர் வானமதில்.
நினைவுகளில் வெந்தே நாம்
தவிக்கின்றோம் பூமியதில்.

கனலான கனவுகள்
கானலாகிப் போய்விடுமோ?
கார்த்திகையின் தீபங்கள்
ஒளியிழத்தல் சரிதானோ?

பார்போற்றும் உம் வீரம்
ஊர்போற்ற நிலைத்திடுமே.
தேர்கொண்டு தொழுவோமே
தேவர்களாய் உங்களையே.

கனவுகள் ஒரு நாளில்
நனவாகும் அறிந்திடுவீர்.
கதைபேசும் வரலாறும்
கரிகாலன் பிள்ளைகளை.



தமிழ்ச்செல்வி
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் பேசுகிறது

கிரிட்டிசம் என்ற ஆங்கில பெயர்ச் சொல்லுக்கு தமிழில் பெரும்பாலும் வழக்கில் உள்ள பதம் விமர்சனம் ஆகும் அது சுட்டும் பொருள் கண்டனம், குணா குணங்களை ஆராய்தல் என்பதாக அமைகின்றது. விமர்சனம் என்ற சொல் சுட்டாத நபர்களோ செயல்களோ பொருள்களோ இல்லை எனலாம். எந்த ஆபத்துக்களிலிருந்தும் தப்பலாம். விமர்சனம் என்ற சொற்கணையிலிருந்து தப்புவது அரிதிலும் அரிது. பல அரசியல்வாதிகள் முதல் நடிகர்கள் வரை விமர்சனத்தால் உயர்ந்தும் இருக்கின்றார்கள். வீழ்ந்தும் இருக்கின்றார்கள். பல பாவலர்கள் இயற்கை அழகையும் பாவைகள் எழிலையும் வர்ணித்து விமர்சனத்திற்குட்பட்டுள்ளார்கள். கம்பரின் கற்பனையை விமர்க்காத இலக்கியவாதிகள் எவராவது இருக்ககூடுமா? அந்த கறுப்பு புள்ளிதான். அரசியல் விமர்சகர்களை எடுத்துக்கொள்வோம். பலருக்கு சரிதான் போலும் என்று தோன்றும் அரசியல் நடவடிக்கைகள் அவர்களுக்கு தவறு என்று தெட்டத்தெளிவாக தோன்றும். அவர்கள் தமது நிலைப்பாடு பற்றி மிகத்துல்லியமான விவாதங்களை முன்வைப்பர். கடந்தகால நிகழ்வுகளை சாட்சியாக சமர்ப்பிப்பர். எதிர்காலத்தில் நடக்கபோவன பற்றி துல்லியமாக கணிப்பிட்டு சொல்லுவர். அவர்கள் அறிந்ததெல்லாம் நாளாந்த அரசியல் நடப்புக்கள் தான். ஏந்த அரசியல் கட்சி என்ன கொள்கை அடிப்படையில் இயங்குகின்றது. மக்களுக்காக உழைக்கும் அரசியல் வாதிகள் யார்? சுய இலாபத்திற்காக சம்பாதிக்கும் அரசியல் வாதிகள் யார்? என்ற விபரங்களெல்லாம் அவர்களுக்கு தண்ணிபட்ட பாடமாக இருக்கும். அவற்றுக்கெல்லாம் மேலாக

# விமர்சனங்களும் விமோசனங்களும்

பாரதியாரின்பாடல்களில் சொக்கி பாராட்டுக்களையும் விமர்சனங்களையும் குவிக்காத புலவர்களும் மக்களும் உண்டா? கம்பரையும் பாரதியையும் நோக்குகையில் அவர்களது படைப்புக்கள்விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுவது சரியா என்ற சிந்தனை பலரிடம் தோன்றியுள்ளது. இன்னும் சொல்லப்போனால் இலக்கியமும் கலையும் திறமைகளால் மெருகூட்டப்பட்டவை. அவற்றை விமர்சனநோக்கில்பார்க்ககூடாது. அவற்றின் திறனை அவை வெளிப்படுத்தும் உயரிய கலை அம்சங்களை திறனாய்ந்து சொல்ல வேண்டும். அதனால் தான் திறனாய்வு திறனாய்வாளர்கள் என்ற சொற்கள் புதிதாக நடைமுறைக்கு வந்துள்ளன. திறனாய்வாளர்களுக்கு பெரும் தகுதிகள் இருக்கவேண்டும். விமர்சகர்களுக்கு எதுவும் கட்டாயம் இல்லை. மனத்தைரியம் இருந்தால் எவரையும் எந்த செய்கையையும் எந்த படைப்புக்களையும் விமர்சிக்க முடியும்.

சரி இனி விமர்சனத்திற்கேதிரும்புவோம். அதன் பிரதான பணி குற்றம் குறைகளை குணாகுணங்களைஅறிந்து சொல்லல்ஆகும். ஒரு வெண்பலகையில் கறுப்பு புள்ளி இருந்தால் விமர்சகர்களின் கண்ணுக்கு முதலில் புலப்படுவது அரசியல்வாதிகளின்மனத்தைரியத்தை பாராட்டாமல் இருக்க முடியாது. மாகாணசபை அங்கத்தவர்களில் இருந்து நாட்டின் பெரும் அரசியல் வாதிகள் வரை பெயர் குறிப்பிட்டு விமர்சித்து விடுவார்கள். பலருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தபோதும். அவர்கள் தாம் கருதியதை ஒரு போதும் எழுத தயங்கியதில்லை!

இனி சினிமா துறையை எடுத்தால் அது கலை உலகை சார்ந்தது. அதற்கென சினிமா விமர்சகர்கள் என்று ஒருகூட்டம் இருக்கின்றது. அவர்களது தொழில் சினிமா பார்ப்பது. அவர்களின் திறமை சினிமா பார்ப்பதனால் உண்டானதே! தமிழ் மொழிபடங்களை மட்டும் அவர்கள் பார்ப்பதில்லை. ஆங்கிலம் ,கன்னடம், மலையாளம் உட்பட பல மொழிப்படங்களையும் அவர்கள் தவறவிடுவதில்லை இனி எந்த மொழி படமாயினும் அதற்கு விருது கிடைத்துவிட்டால் அதை தேடிப்பார்ப்பார்கள். படத்தின் கதையோட்டம் பங்கு பற்றிய நடிகர் நடிகையர் , இயக்குனர் கதை , வசன கர்த்தா, இசையமைப்பாளர், என்று அனைவரையும் அறிந்து வைத்திருப்பர். பிற மொழி படங்களை தாய்மொழி படங்களுடன் ஒப்பிட்டு விமர்சிக்கும் ஆற்றல் அவர்களிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்திருக்கும். பல படங்கள் வசூலில் கொடிகட்டி பறப்பதற்கும் மற்றும் பல ஓரிரு வாரங்களில் காட்சிகளை நிறுத்திக் கொள்வதற்கும் காரணமாக இருப்பவர்கள் பெரும் சினிமா விமர்சகர்கள்தான்!

இப்படியே எந்த துறையை எடுத்தாலும். அவற்றை விமர்சிப்பதற்கு கட்டாயமாக ஒரு குழு இருக்கவே செய்யும். அவ்வத் துறை களின் வீழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணகர்த் தாக்களாக இருப்பவர்கள் விமர்சகர்களே. பத்திரிகைகளை எடுத்துப்பாருங்கள் பல சஞ்சிகைகளின் சிறப்புக்கள் பற்றி விதந் துரைக்கப்பட்டிருக்கும்.

அவையே முன்னோடி சஞ்சிகைகளாக இருக்கும். அதே போன்று பல படைப் பாளிகள் பற்றிய பேட்டிகள் மக்களுக்கு அவர் களை இனம் காண வைக்கும்.

இன்றைய சந்தர்ப்பவாத சூழ்நிலையை எடுத்தால் எந்ததுறையில் இருப்பவர்களும் சரி விமர்சனத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கவே செய்கின்றது. பெரும் அரசியல் வாதிகளும். சரி சினிமா தயாரிப் பாளர்களும். சரி விமர்சனத்துக்கு முகம் கொடுக்கவேண்டிய கட்டாயம் இருக்கவே செய்கின்றது. ஆனால் அவர்கள் விமர்சனத் துக்கு பயந்து அடிபணியாமல் தொடர்ந்து தமது முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப் பதனால்தான் என்றும் தமது துறைகளில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த நிலைப்பாட்டினை நாமும் கடைப்பிடிக்க வேண்டும்.

எம்மைப்பற்றிய எமது அபிப்பிராயம் தலையானது. பிறரது விமர்சனங்களுக்கு தலையாட்டினால் குட்டிச்வராகவேண்டி யதே.! பிறரது பாராட்டுக்களுக்காக ஆமோதிப்புக்களுக்காக புகழுக்காக காத்தி ருப்பது நாம் பிறரால் ஆட்டுவிக்கப்படு வதற்கு முதற்படி என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அர்த்தமில்லாத சொற்களும் கண் டனங்களும் நியாயம் தப்பிய அதிருப் தியும் கடும் சொற்களும் எம்மை வீழ்த்தி விடாதபடி நாம் அவதானமாக இருக்க வேண்டும். பிறர் எம்மைப்பற்றி விமர்சனம் செய்வது குற்றங்குறைகளை சுட்டிக் காட்டு கின்றார்களென்றால் நாம் அவற்றை திருத்திக் கொண்டு அடுத்த முன்னேற்ற படிக்கு தாவ வேண்டும்.

இனி அடுத்த வளமாக சிலர் சுயவிமர்சனம் செய்வதன் மூலம் தமது பெயரையும் புகழையும் வளர்த்துக்கொள்வதில் மிகுந்தசாதுர்யத்தைக் கையாள் கின்றார்கள் அவர்கள் தமது திற மையை வளர்க்காமலும் அதனை வெளிப்படுத்தாமலும் மற்றவர் களது அங்கீகாரத்திற்காகவும் ஆமோ திப்பிற்காகவும் விருதுகளுக்காகவும் ஏங்கு கின்றார்கள். அதனால் அவர்கள் தமக்கான தனிதன்மையை இழக்கின்றார்கள். சில் எழுத் தாளர்கள் ஓரளவு படைப்பாற்றல் கொண் டவர்களாயினும் அவர்களது கற்கை மட்டுப் படுத்தபட்டிருப்பதாலும் பரந்து பட்ட அறிவு இன்மையாலும் அவர்களால் ஒரு குறுகிய எல்லைக்குள் நின்றே இலக்கியம் செய்யக் கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலம் உள் ளிட்ட பிறமொழிகள் மீதான அறிவு சூன்ய மாக இருந்துவிட்டால் பிற மொழி இலக்கிய பரீட்சயம் அவர்ளுக்கு இருக்காது. ஆனால் அவர்கள் தம்மை பிரபல்யப்படுத்திக் கொள்வதற்காக சில சாதுர்யங்களை கடைப் பிடிக்கின்றார்கள். தமது எழுத்துக்கள் சில இஸம் களை அடிப்படையாக கொண்டவை என பிரபல்யப்படுத்துகின்றார்கள். அதைக் காட்டிலும் பிரதானமாக சுயவிமர்சனத்தை தந்திரமாக கையாள்கின்றார்கள்.

அதாவது எந்த கல்விமானின் படைப்புக் களாக இருந்தாலும் சரி பெரும் படைப்பாளி களின் ஆக்கங்களாயினும் சரி அவற்றை அவர்கள் துணிந்து நிராகரிப்பர். அகிலனின் எழுத்துக்களா? அவரும் ஒரு எழுத்தாளரா? என்று பரிகசிப்பர். ஜெயகாந்தனின் படைப் புக்களா?

அவர் எப்போது எழுத்தாளரானார்? என்று கேட்டு கர்ஜிப்பர்! அதனை கேட்டுக் கொண்டிருப்பவர்கள் அசந்து போய்விடு வார்கள். அகிலனும் ஜெயகாந்தனும் அவர் களுக்குதூசு என்றால் அவர்கள் எப்பேற்பட்ட எழுத்தாளராக இருக்கவேண்டும் என்று வியப் பில் ஆழ்ந்துவிடுவார்கள். வாய் வீச்சு மட்டும் வரலாறு படைக்காது என்பதை அவர்கள் என்று தான் புரிந்து கொள்வார்களோ தெரியாது! இனி தனிநபர் விமர்சனங்களுக்கு எமது சமூகத்தில் குறைவே இல்லை. தம்மை சூழ உள்ளவர்கள் பற்றி தாம் அறிந்தவர்கள் பற்றி வாய் மொழி விமர்ச னம் செய்வது எம்மவருக்கு கைவந்த கலை. பிற அலுவலர்களின் ஒத்துழைப்பு இன்றி தமது கடமைகள் எதனையும் நிறைவேற்ற இயலாதவர்கள் கூட மற்றவர்களை குறைத்தே விமர்சித்துவிடுவார்கள்.

தொடர்ச்சி 52 ஆம் பக்கத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மனைவி பிள்ளைகள் பற்றி பிறர் மத்தியில் பேச்சு எடுக்காதவர்கள் கூட மற்ற மற்ற பெண்களின் விவாகம் காதல் என்று பேச்சு வந்தால் கலியாணம் தடைப்படும் அளவுக்கு குறைத்து மதிப்பிட்டு விமர்சித்துவிட்டு போய்விடுவார்கள். கல்வியிலும் விளையாட்டிலும் சமூக சேவையிலும் ஒருமித்து திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு இளைஞன் அயல் வீட்டுக்காரனின் பார்வையில் ஊதாரி சோம்பேறி, படிப்பில் படு மோசம் , முத்தவர்களை மதிப்பதில்லை என்றே விமர்சி க்கப்படுவான். என்ன செய்வது எமது தலைவிதி அப்படித்தான் அமைந்திருக்கின்றது.

நாம் மட்டும் ஒன்றை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். குறை சொல்வது என்பது தன்னம்பிக்கை இல்லாதவர்களின் கடைசி அஸ்திரம். நாம் அதற்கு அடிபணியக்கூடாது. ஆபிரகாம் லிங்கன், மகாத்மாகாந்தி போன்ற பெரும் அரசியல்வாதிகளின் வாழ்கையை முன்னுதாரணமாகக் கொள்ளல் வேண்டும். தாம் நம்பியதை பிடிவாதமாக கொண்டு போராடியவர்களே எப்போதும் வெற்றிவாகை சூடியவர்களாவர். சில சமயம் பிறரது அபிப்பிராயங்களுக்கு எதிராக போரிட நேரிடலாம். அதற்கான மனோபலத்தை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். எவ்வகை விமர்ச னத்துக்கும் விமோசனம் உண்டு என்று நம்புங்கள்!

**சிரிக்க சிந்திக்க**



**இன்னிக்கு மதியம் போன்ல என் அக்கா..**

**கயல்.. என் பையன் சிக்கன் மட்டும்தான் விரும்பி**

**சாப்பிடுறான்.. வேற காய்கறி**

**எல்லாம் தொடவே மாட்டேங்குறான்... '' ன்னா.**

**அப்போ நான் ''அதனாலென்ன டெய்லி சிக்கனே வாங்கி குடு ன்னன்**

**அதுக்கு அவ ... உங்கிட்ட போயி சொன்னேன் பாரு... '' ன்னா**

**''சரி.. சரி.. இப்ப அதுல என்ன பிரச்னை உனக்கு..?! ''னு கேட்டனா,**

**''இப்டி சிக்கனே சாப்பிட்டுட்டு இருந்தா.. மத்த விட்டமின்ஸ், மினரல்ஸ் எல்லாம் எப்டி**

**கிடைக்கும்..?! ''ன்னு கேட்டா**

**''ம்ம்... நல்ல கேள்விதான், கொஞ்சம் பொறு.. யோசிக்கிறேன்... ''னு யோசிச்சன்**

**( ம்ம்ம.. ஒண்ணுமில்ல என் சைன்டிஸ்ட் மூளை வேலை செய்ய ஆரம்பிக்குது... )**

**அப்புறம் அக்காட்ட ''இப்ப நீ என்ன பண்றேன்னா... இந்த விட்டமின் A, B, C, D...**

**இதெல்லாம் எதுல இருக்குனு ஒரு லிஸ்ட் ரெடி பண்ணு ன்னன் சரி... '' ன்னா**

**அதையெல்லாம் உன் வீட்டு கோழிக்கு போடு.. அப்புறம் அந்த கோழிய குழம்பு வெச்சு**

**உன் பையனுக்கு போடு... இப்ப எல்லா விட்டமினும் கெடைச்சிடும்ல**

**??????????????????????**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிறைந்திருக்கும். பல படங்கள் வசூலில் கொடிகட்டி பறப்பதற்கும் மற்றும் பல ஓரிரு வாரங்களில் காட்சிகளை நிறுத்திக் கொள்வதற்கும் காரணமாக இருப்பவர்கள் பெரும் சினிமா விமர்சகர்கள்தான்!

இப்படியே எந்த துறையை எடுத்தாலும். அவற்றை விமர்சிப்பதற்கு கட்டாயமாக ஒரு குழு இருக்கவே செய்யும். அவ்வத் துறைகளின் வீழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் விமர்சகர்களே. பத்திரிகைகளை எடுத்துப்பாருங்கள் பல சஞ்சிகைகளின் சிறப்புக்கள் பற்றி விதந்துரைக்கப்பட்டிருக்கும்.

அவையே முன்னோடி சஞ்சிகைகளாக இருக்கும். அதே போன்று பல படைப்பாளிகள் பற்றிய பேட்டிகள் மக்களுக்கு அவர்களை இனம் காண வைக்கும்.

இன்றைய சந்தர்ப்பவாத சூழ்நிலையை எடுத்தால் எந்ததுறையில் இருப்பவர்களும் சரி விமர்சனத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கவே செய்கின்றது. பெரும் அரசியல் வாதிகளும். சரி சினிமா தயாரிப்பாளர்களும். சரி விமர்சனத்துக்கு முகம் கொடுக்கவேண்டிய கட்டாயம் இருக்கவே செய்கின்றது. ஆனால் அவர்கள் விமர்சனத்துக்கு பயந்து அடிபணியாமல் தொடர்ந்து தமது முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதனால்தான் என்றும் தமது துறைகளில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த நிலைப்பாட்டினை நாமும் கடைப்பிடிக்க வேண்டும்.

எம்மைப்பற்றிய எமது அபிப்பிராயம் தலையானது. பிறரது விமர்சனங்களுக்கு தலையாட்டினால் குட்டிச்வராகவேண்டியதே.! பிறரது பாராட்டுக்களுக்காக ஆமோதிப்புக்களுக்காக புகழுக்காக காத்திருப்பது நாம் பிறரால் ஆட்டுவிக்கப்படுவதற்கு முதற்படி என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அர்த்தமில்லாத சொற்களும் கண்டனங்களும் நியாயம் தப்பிய அதிருப்தியும் கடும் சொற்களும் எம்மை வீழ்த்தி விடாதபடி நாம் அவதானமாக இருக்க வேண்டும். பிறர் எம்மைப்பற்றி விமர்சனம் செய்வது குற்றங்குறைகளை சுட்டிக் காட்டுகின்றார்களென்றால் நாம் அவற்றை திருத்திக் கொண்டு அடுத்த முன்னேற்ற படிக்கு தாவ வேண்டும்.

இனி அடுத்த வளமாக சிலர் சுயவிமர்சனம் செய்வதன் மூலம் தமது பெயரையும் புகழையும் வளர்த்துக்கொள்வதில் மிகுந்தசாதுர்யத்தைக் கையாள்கின்றார்கள் அவர்கள் தமது திறமையை வளர்க்காமலும் அதனை வெளிப்படுத்தாமலும் மற்றவர்களது அங்கீகாரத்திற்காகவும் ஆமோதிப்பிற்காகவும் விருதுகளுக்காகவும் ஏங்குகின்றார்கள். அதனால் அவர்கள் தமக்கான தனிதன்மையை இழக்கின்றார்கள். சில் எழுத்தாளர்கள் ஓரளவு படைப்பாற்றல் கொண்டவர்களாயினும் அவர்களது கற்கை மட்டுப்படுத்தபட்டிருப்பதாலும் பரந்து பட்ட அறிவு இன்மையாலும் அவர்களால் ஒரு குறுகிய எல்லைக்குள் நின்றே இலக்கியம் செய்யக் கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகள் மீதான அறிவு சூன்யமாக இருந்துவிட்டால் பிற மொழி இலக்கிய பரீட்சயம் அவர்ளுக்கு இருக்காது. ஆனால் அவர்கள் தம்மை பிரபல்யப்படுத்திக் கொள்வதற்காக சில சாதுர்யங்களை கடைப்பிடிக்கின்றார்கள். தமது எழுத்துக்கள் சில இஸம் களை அடிப்படையாக கொண்டவை என பிரபல்யப்படுத்துகின்றார்கள். அதைக் காட்டிலும் பிரதானமாக சுயவிமர்சனத்தை தந்திரமாக கையாள்கின்றார்கள்.

அதாவது எந்த கல்விமானின் படைப்புக்களாக இருந்தாலும் சரி பெரும் படைப்பாளிகளின் ஆக்கங்களாயினும் சரி அவற்றை அவர்கள் துணிந்து நிராகரிப்பர். அகிலனின் எழுத்துக்களா? அவரும் ஒரு எழுத்தாளரா? என்று பரிகசிப்பர். ஜெயகாந்தனின் படைப்புக்களா?

அவர் எப்போது எழுத்தாளரானார்? என்று கேட்டு கர்ஜிப்பர்! அதனை கேட்டுக் கொண்டிருப்பவர்கள் அசந்து போய்விடுவார்கள். அகிலனும் ஜெயகாந்தனும் அவர்களுக்குதூசு என்றால் அவர்கள் எப்பேற்பட்ட எழுத்தாளராக இருக்கவேண்டும் என்று வியப்பில் ஆழ்ந்துவிடுவார்கள். வாய் வீச்சு மட்டும் வரலாறு படைக்காது என்பதை அவர்கள் என்று தான் புரிந்து கொள்வார்களோ தெரியாது! இனி தனிநபர் விமர்சனங்களுக்கு எமது சமூகத்தில் குறைவே இல்லை. தம்மை சூழ உள்ளவர்கள் பற்றி தாம் அறிந்தவர்கள் பற்றி வாய் மொழி விமர்சனம் செய்வது எம்மவருக்கு கைவந்த கலை. பிற அலுவலர்களின் ஒத்துழைப்பு இன்றி தமது கடமைகள் எதனையும் நிறைவேற்ற இயலாதவர்கள் கூட மற்றவர்களை குறைத்தே விமர்சித்துவிடுவார்கள்.

தொடர்ச்சி 52 ஆம் பக்கத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மனைவி பிள்ளைகள் பற்றி பிறர் மத்தியில் பேச்சு எடுக்காதவர்கள் கூட மற்ற மற்ற பெண்களின் விவாகம் காதல் என்று பேச்சு வந்தால் கலியாணம் தடைப்படும் அளவுக்கு குறைத்து மதிப்பிட்டு விமர்சித்துவிட்டு போய்விடுவார்கள். கல்வியிலும் விளையாட்டிலும் சமூக சேவையிலும் ஒருமித்து திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு இளைஞன் அயல் வீட்டுக்காரனின் பார்வையில் ஊதாரி சோம்பேறி, படிப்பில் படு மோசம் , முத்தவர்களை மதிப்பதில்லை என்றே விமர்சிக்கப்படுவான். என்ன செய்வது எமது தலைவிதி அப்படித்தான் அமைந்திருக்கின்றது.

நாம் மட்டும் ஒன்றை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். குறை சொல்வது என்பது தன்னம்பிக்கைஇல்லாதவர்களின்கடைசிஅஸ்திரம்.நாம்அதற்குஅடிபணியக்கூடாது.ஆபிரகாம் லிங்கன், மகாத்மாகாந்தி போன்ற பெரும் அரசியல்வாதிகளின் வாழ்கையை முன்னுதாரணமாகக் கொள்ளல் வேண்டும். தாம் நம்பியதை பிடிவாதமாக கொண்டு போராடியவர்களே எப்போதும் வெற்றிவாகை சூடியவர்களாவர். சில சமயம் பிறரது அபிப்பிராயங்களுக்கு எதிராக போரிட நேரிடலாம். அதற்கான மனோபலத்தை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். எவ்வகை விமர்சனத்துக்கும் விமோசனம் உண்டு என்று நம்புங்கள்!

## சிரிக்க சிந்திக்க



இன்னிக்கு மதியம் போன்ல என் அக்கா..

கயல்.. என் பையன் சிக்கன் மட்டும்தான் விரும்பி

சாப்பிடுறான்.. வேற காய்கறி

எல்லாம் தொடவே மாட்டேங்குறான்... '' ன்னா.

அப்போ நான் ''அதனாலென்ன டெய்லி சிக்கனே வாங்கி குடு ன்னன்

அதுக்கு அவ ... உங்கிட்ட போயி சொன்னேன் பாரு... '' ன்னா

''சரி.. சரி.. இப்ப அதுல என்ன பிரச்னை உனக்கு..?! ''னு கேட்டனா,

''இப்டி சிக்கனே சாப்பிட்டுட்டு இருந்தா.. மத்த விட்டமின்ஸ், மினரல்ஸ் எல்லாம் எப்டி கிடைக்கும்..?! ''ன்னு கேட்டா

''ம்ம்... நல்ல கேள்விதான், கொஞ்சம் பொறு.. யோசிக்கிறேன்... ''னு யோசிச்சன்

( ம்ம்ம.. ஒண்ணுமில்ல என் சைன்டிஸ்ட் மூளை வேலை செய்ய ஆரம்பிக்குது... )

அப்புறம் அக்காட்ட ''இப்ப நீ என்ன பண்றேன்னா... இந்த விட்டமின் A, B, C, D... இதெல்லாம் எதுல இருக்குனு ஒரு லிஸ்ட் ரெடி பண்ணு ன்னன் சரி... '' ன்னா

அதையெல்லாம் உன் வீட்டு கோழிக்கு போடு.. அப்புறம் அந்த கோழிய குழம்பு வெச்சு உன் பையனுக்கு போடு... இப்ப எல்லா விட்டமினும் கெடைச்சிடும்ல

??????????????????????



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெல்லிசையாய் வசமானாய்

ரோசி கஜன்

''சொல்லுங்கதம்பி!'' இவன் குரலை இனம்கண்டுகொண்டார் துர்காவின் அன்னை. எந்தவித பூச்சுமின்றி ஆரம்பித்தான் சயந்தன். ''ஆன்ட்டி உங்களோடு ஒரு முக்கியவிஷயம் கதைக்கவேணும். நேரில் வந்துகதைக்கத் தான் விருப்பம். இன்றைக்குநேரம் இருக்குமா? அங்கிள் வேலையால வந்ததும் எனக்கு ஒரு அரைமணித்தியாலம் தந்தாலேபோதும்.'' மூச்சு விடாது படபடத்தான்.

ஒருகணம் அமைதிகாத்த துர்காவின் தாயி னுள் இலேசானகுழப்பம். அப்படி என்ன கதைக்க இருக்கு? சட்டென்று இக்கேள்வி மனதில் எழுந்தாலும், ''அதுக்கென்ன தம்பி, இவர் ஏழுமணி வாக்கில வந்திருவார். நீங்க வாங்கோவன்.'' என்றவர், வீட்டுமுகவரியைச் சொல்லக் குறித்துக் கொண்டவன், முடிக்க வேண்டியவேலைகளைப் பரபரவென்று பார்க்கத் தொடங்கினான்.

மனம் மட்டும், துர்காவின் பெற்றோரிடம் எதை எப்படிக் கதைப்பதென்பதிலேயே நின்றது. எஞ்சியிருந்த வேலைகளை முடித்து விட்டு மணியைப் பார்த்தவன், இப்போ வெளிக்கிட்டால்அவர்கள் வீடு போய்ச்சேர எப்படியும்இரவுஎட்டுமணியும்ஆக லாமே!

அவ்வளவு நேரம் செல்லப்போவது சரியாகுமா? என, ஒருகணம் யோசித்தாலும், நேரில் சென்று மனதில்உள்ளதைக் கதைத்து விடவேண்டும் என்ற முடிவைமட்டும் மாற்ற விருப்பவில்லை.

துர்காவுக்கு இன்னொருக்கா எடுத்துப் பார்த்தால் என்ன? என்ற எண்ணத்தையும் ஒதுக்கித் தள்ளினான். இத்தனை தடவைகள் அழைக்க அழைக்க எடுக்கவில்லையே! சரி, ஏதாவது வேலையாக இருந்து என் அழைப்பு களை எடுக்கமுடியாதுபோயிருந்தாலும் தான் திருப்பி எடுத்துக் கதைத்திருக்கலாமே! அதை அவள்செயவில்லைஎன்றால் என்ன அர்த்தம்? என்மீது அவளுக்கு கோபமிருக்கு! இதற்குப் பிறகும்அவளோடுகதைப்பதில் பயனில்லை. பெரியவர்களோடு கதைத்துக்கொள்கிறேன். என்ற உறுதியோடு புறப்பட்டு வந்திருந் தாலும், அவர்கள் வீட்டுவாசலில் வந்து நிற்கையில், இரவு எட்டரை தாண்டியிருந் ததில் மிகுந்த தயக்கமாவே உணர்ந்தான்.

அதே தயக்கத்தோடு அழைப்பு மணியை அழுத்தியவனை மலர்வாக வரவேற்றார்கள் துர்காவின் பெற்றோர். வாங்கோ தம்பி, நல்ல குளிர் இல்லையா? என்று தாய்வரவேற்க, ''வாங்கோ! வாங்கோ! எதில் வந்தீங்க?'' கரம் பற்றிக்குலுக்கியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்கதை

வரவேற்றார் அவளின் தந்தை. ''ட்ரைனில்தான் அங்கிள். அதுதான் ஈசி!'' என்ற படி குளிர்க்கோர்ட்டைக் கழற்றி அங்கிருந்த கொக்கியில் கொழுவி விட்டு,காலணிகளைக் கழற்றி கதவோரமாக வைத்தவன், துர்காவின் தந்தையை பின்தொடர்ந்து, முன் வாயிலோடு இருந்த சிறு ஓடையைக் கடந்து வரவேற்பறையினுள் நுழைந்தான்.

சிறுவரவேற்பறை தான், அளவான பொருட்களோடு பளிச்சென்று சுத்தமாகக் காட்சிதந்தது.

அவன் பார்வை சுழன்றதைக் கண்டுவிட்டு, ''சின்ன வீடுதான்தம்பி! ஊரில் பெரியவளவு, வீடு என்று இருந்திட்டு இங்க இப்படிப்பார்க்க ஒரு மாதிரியாகத்தானிருக்கும்.''முறுவலோடு சொன்னார் துர்காவின் தாய்.

ச்சே! ச்சே! சின்னவீடு என்றாலும் அழகா சுத்தமா இருக்கு ஆன்ட்டி என, முறுவலித்தபடி அமர்ந்தவன் அருகில், தானும் அமர்ந்தார் துர்காவின் தந்தை.

நான் இவர்களை இங்க கூப்பிட முதல் வாங்கியது தம்பி. அப்போ என்னால இந்தளவு தான் முடிந்தது. எங்களுக்கு நல்ல அளவு. சின்னவள் கல்யாணம் கட்டிப்போய்ட்டாள். இப்போ துர்கா மட்டும் தானே? அவளும் கல்யாண மாகிச் சென்றுவிட்டால், நாங்க இரண்டு பேரும்தானே? மிச்சம் தம்பி.களைப் பாக முறுவலித்தார் அவளன் தந்தை. அந்த முறுவலுக்குப் பின் அவர் வெளிநாடு வந்த தில் இருந்து பட்டபாடுகள் பளிச்சிட்டது. குளிர், பனி, பிடித்தவேலை, பிடிக்காத வேலை, முடியும், முடியாது என்றெல்லாம் பார்க்காதல்லவா , உழைக்கவேண்டும்!

ஓமோம்! அதுவும் சரிதான். லோனைப் போட்டு பெரிய வீட்டை வாங்கீட்டு வட்டி கட்டத்தான் சரியாக இருக்கும். பிறகு எதை வைத்து வாழுறது? முறுவலித்தான் அவன்.

சரியாச் சொன்னீங்க தம்பி, உண்மையைச் சொன்னால் நேர்மையா உழைத்து வாழுறவன் அவ்வளவு பகட்டாவாழுறது என்பது குதிரைக் கொம்புதான். கைக்கும் வாய்க்கும் சரியாக இருக்கும். நல்லாப் படித்து நல்லவேலையில் இருந்தாலுமே ஓரளவுக்குத்தான் வசதியா வாழமுடியும். மிச்சம் எல்லாம் கடனும் அப் படியும் இப்படியும்தான். மெல்லச் சிரித்தார்.

புரிந்து கொண்டதற்கு அடையாள மாக அவன் உதடுகளிலும் புன்னகை! அதெல்லாம் நமக்குச் சரிபட்டு வராது தம்பி. இருக்கிற வரை நேர்மையா வாழ்ந்திட்டுப் போகவேணும். அப்படிக் கதைத்தவரில் மதிப்புத்தான் வந்தது அவனுக்கு!

அட..வருங்கால மாமனாராச்சே! அவர் பேச்சை நன்றாகத்தான் ரசிக்கிறாய்! சிலாகித் துக் கண்சிமிட்டிய மனதை செல்லமாக முறைத்தபடி, சாப்பிட்டிட்டீங்களா தம்பி? என்ற துர்காவின் தாய்க்கு சிறுமுறு வலைப்பதிலாகக் கொடுத்தவன் பதில் சொல்ல முதலே, நீங்க வரவிட்டுச் சாப்பிடலாம் என்று இவரும் சாப்பிட இல்லைத்தம்பி. வாங்கோ வன் சாப்பிடலாம். அன்போடு அழைத்தார் அவளின் அன்னை.

இல்ல இல்ல, வேண்டாம் ஆன்ட்டி நீங்க சாப்பிடுங்கோ அங்கிள்! முதலில் மறுத் தவன், மீண்டும் கேட்கவே எழுந்துவிட்டான்.

அளவளாவியபடியே உணவுண்டபோதும் வந்தகாரணத்தைச் சொல்லும் சந்தர்ப்பம்தான் அமையவில்லை. எப்போது அச்சந்தர்ப்பம் அமையுமென்று அவன் காத்திருப்பது போலவே, என்னவோ கதைக்க வேண்டும் என்றாரே! இப்போ பார்த்தால் வேறு கதைகள் கதைக்கிறார். என்ற எண்ணமே துர்காவின் பெற்றோர் உள்ளத்திலும்! உணவின் பின் மீண்டும் அதேயிடத்தில் வந்தமர்ந்தவர்களி டையே திடீர் மௌனம் திரைபோட்டுக் கொண்டது.

இனியும் அமைதியாக இருப்பது சரியில்லை என்ற முடிவோடு பெரியவர்களைப் பார்த் தான் சயந்தன்.

நான் இப்போ வந்தது ஒரு சந்தோசமான விஷயம் பேசத்தான். என்று ஆரம்பிக்க, பெரி யவர் இருவரும் தம்முள் பார்த்துக்கொண்ட வர்கள், சொல்லுங்கோ தம்பி! என்றனர்.

அதுவந்து... என்ன என்றால்...எனக்குத் துர்காவை பிடித்திருக்கு! நேரடியாகவே சொல்லிவிட்டான். செவிமடுத்த பெரியவர் களின் முகங்களில் உணர்வுகளின் பயணம்! நம்பமுடியாத தன்மையும் மகிழ்வும் சரி விகிதத்தில் கலந்துகிடந்தன.

என்னதம்பி சொல்றீங்க? துர்காவின் அன்னைதான் கேட்டார். உண்மைதான் ஆன்ட்டி, எனக்குத் துர்காவைப் பிடித் திருக்கு! உறுதியாகச் சொன்னவன், அவ் வளவு விருப்பமில்லாமல், தங்கச்சி வற் புறுத்தியதால் தான் நேற்று அந்தக் கல் யாணவீட்டுக்கு வந்தேன். ஆனால், இப்போ பார்த்தால், அங்க வந்ததால்தானே உங் களைக் காணக் கிடைத்தது? என்றான் முறுவ லோடு! அப்போ, இதுக்காகத்தான் அவளின் மொபைல் நம்பர் வாங் கினீங்களா? அவளோடு கதைத்தீங்களா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மீண்டும் அவள் தாயே கேட்டார். இல்ல இல்ல துர்காவோடு இன்னும் கதைக்க இல்ல. அவசரமாக மறுத்தவன், என்

விருப்பத்தை உங்களிடம் தான் முதலில் சொல்கிறேன். உங்களுக்கும் துர்காவுக்கும் சம்மதமென்றால் அம்மாஅப்பா விடம் சொல்லலாம். என்றவனை, துர்காவின் பெற்றோருக்குப் பிடிக்காதுபோக காரணமே இருக்கவில்லை. அவன் குடும்பத்தைப் பற்றியும் தெரியுமே! ஆனால் துர்கா? கணவனைப் பார்த்தார் அவளின் அன்னை. அவர் முகத்தில் யோசனையே!

துர்காவுக்குத்தான் முதலில் கல்யாணம் பேசினோம் தம்பி. பொருத்தமான இடங்களும் அமைந்தும் பிள்ளதான் மாட்டேன் என்றிட்டாள். ஒவ்வொரு முறையும் ஒவ்வொன்று சொல்லி பிடிக்கவில்லை என்று சொன்னால் என்னசெய்வது சொல்லுங்க பார்ப்போம்? அதனாலதான், சின்னவளுக்கு வந்த சம்பந்தத்தை செய்து வைத்து விட்டோம்.

பெரியவள் இருக்க சின்னவளுக்கா? என்ற கேள்வியை எத்தனை பேரிடமிருந்து எதிர் கொண்டோம். அதையெல்லாம் பிள்ளை காதிலும் போட்டுக்கொள்வதில்லை. அவள் என்ன எதிர்பார்க்கிறாள் என்றே புரியாத நிலை தான் எங்களோடது. என்ற, அவளின் தந்தையின் குரலில் வருத்தம் தான்.

மற்றும்படி தங்கமான பிள்ளை தம்பி. அவசரமாக இடையிட்டார் அவளின் அன்னை. கல்யாணம் செய்ய விருப்பம் என்று வந்த தம்பியிடம் போய் இவர் என்ன எல்லாம் சொல்கிறார். என்று, கணவனை ஒரு பார்வையும் பார்த்து வைத்தார் அவர்.

அதை அவதானித்தவன், துர்காவை என் தங்கச்சியின்நெருங்கிய தோழியாக எனக்குத் தெரியும் ஆன்ட்டி. அதனாலதானே விருப்பம் என்று கேட்டு வந்திருக்கிறேன். சிறுமுறுவலோடு இடையிட்டான்.

இப்படி நான் கேட்டுவந்தேன் என்று துர்காவிடம் சொல்லி அவவின் விருப்பத்தைக் கேளுங்க ஆன்ட்டி. விருப்பம் இல்லையென்று சொன்னால் யாரும் ஒன்றும் செய்யமுடியாது தான். என்றவன் முகத்தில் பதற்றமே! அப்படி அவள் வாயிலிருந்து வந்துவிடக்கூடாது. என்ற வேண்டுதலோடு தான் சொன்னான். அதோடு, இன்னொன்றையும் சொல்லியே கேளுங்கோ..

என்றவன், தான் கேட்கப்போகும் விஷயத்துக்கு துர்கா சம்மதிக்கிறாளோ இல்லையோ, துர்காவின் பெற்றோர் இந்த முடிவிற்குச் சம்மதம் சொல்வார்களா? என்ற குழப்பத்தோடு அவர்களை ஏறிட்டான்.

---

## school

Engilsh poem

*I love to go to school*

*and it is really cool*

*you go to school to study*

*at play time you get really muddy*

*there are teachers*


*we need find some rey featules*

*at school we read books*

*maype about famous famous cook*

*you learn*

*then you earn*



***Varsha Eelakesan***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசவழமைச் சட்டமும் வடமாகாணமும்

ச. நற்குணலிங்கம்
நெல்லியடி.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வாழும் நிரந்தர வதிவிட உரிமையையும் வதிவிட எண்ணத்தையும் கொண்டதமிழர்களுக்குஏற்புடையதான ஒரு சட்டம்தான், தேசவழமைச்சட்டம். எனவே இப்பகுதிவாழ் மக்கள் அனைவரும் தேசவழமைச்சட்டம் பற்றி அறிந்திருப்பது வாழ்வியலுக்குத் துணைபோகும் எனலாம். இன்றைய காலத்திற்கு இதன் அறிவு அவசியமாதொன்றாகும்.

தேசவழமைச்சட்டம் வடமாகாணத்திற்கு வெளியே வசிப்பவர்களுக்கு பொருத்தப்பாடுடையதாக அமையவில்லை. அவர்கள் இச்சட்டத்தை பிரயோகிக்கமுடியாது. இது நிலம் சார்ந்த சட்டமாக உள்ளது. வடமாகாணத்திலுள்ள அசையா ஆதனம் தேசவழமைச் சட்டத்தாலேயே நிர்வகிக்கப்படும். வடமாகாணத்திலுள்ள அசையா ஆதனம் மூன்று இனத்தவர்களில் யாருக்குச் சொந்தமாக இருப்பினும் இச்சட்டத்தினாலேயே நிர்வகிக்கப்படும்.

தேசவழமைச்சட்டத்திற்கே இத்தகைய சிறப்புரிமை உண்டு. வடமாகாணத்திற்கு வெளியே உள்ள ஒரு ஆதனம், தேசவழமைக்கு உட்பட்ட ஒருவருக்கு உரித்துடையதாக இருப்பின் அவர்களுக்கு தேசவழமைச்சட்டம் உரித்தானதாக இருக்கும். அவர்கள் அதனைப் பிரயோகித்து பயனடையமுடியும்.

யாழ்ப்பாண மாகாண தமிழர்களுக்கு ஏற்புடையதான ஒரு சட்டம் தேசவழமைச்சட்டம்.




இச்சட்டம் தமிழ் மக்களை அடையாளப்படுத்திக்காட்டும் ஒரு விசேட சட்டமாகும்.

இன்று அதிகமான குடும்பங்கள் மனமுறிவிற்கு உட்படுவதும் மணமுறிவிற்கு உட்படுவதுமாக உள்ளனர். இவ்விடயம் சீதனமாக கொடுக்கப்பட்ட ஆதனத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சீதனமாக கொடுக்கப்படும் ஆதனத்தில் தேசவழமைச் சட்டம் செலுத்தும் செல்வாக்கை அறிந்திருப்பது பெண்கள் அனைவருக்கும் பயனுடையதாக அமையும்.

தேசவழமைச்சட்டத்தால் ஆளப்படும் ஆணை மணமுடிக்கும் பெண்ணுக்கு தேசவழமைச்சட்டம் ஏற்புடையதானது.

உதாரணமாக யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரை சிங்கள அல்லது முஸ்லீம் பெண்ணொருவர் திருமணம் செய்தால், திருமணம் வலுவில் இருக்கும் காலம் வரை தேசவழமைச்சட்டம் ஏற்புடையதாகும்.

சீதனம் தொடர்பாக நோக்கின் தேசவழமைச்சட்டப்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதன ஆதனமானது கணவனுக்கோ அல்லது கணவனைச் சார்ந்தவர்களுக்கோ சேரமாட்டாது. அது பெண்ணுக்குத்தான் (மனைவி) உரித்துடையதாகும்.

அவர்கள்தான் அவ் ஆதனத்தை அனுபவிக்கமுடியும் கணவன் தலையிடமுடியாது. சில குடும்பங்களில் கணவனுக்கு மனைவி மீது வெறுப்பு ஏற்பட்டு சீதன ஆதனத்தை விற்க முனைகிறார்கள். முனைந்துள்ளார்கள்.

மனைவிக்கு தேசவழமைச் சட்டம் தொடர்பான அறிவு பூச்சியமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டும்தான் இவ்விடயம் நடந்தேறுகின்றது. எது எவ்வாறாயினும் பெண் பயம்கொள்ளத் தேவையில்லை.

உதாரணமாக : திருமணத்தின் போது சீதனமாக கொடுக்கப்படும் சீதன வீட்டை கணவன் தான் நினைத்தபடி யாருக்கும் நன்கொடையாக எழுதவோ கொடுக்கவோ அல்லது யாருக்கும் விற்கவோ தேசவழமைச்சட்டபடி முடியாது. அதனையும் மீறி கணவன் மனைவிக்கு தெரிந்தோ தெரியாமலோ இன்னொருவருக்கு உறுதி முடிப்பாராயின் தேசவழமைச்சட்டப்படி எழுதப்பட்டு பதியப்பட்ட உறுதிமூலம் அடுத்தவருக்கு உரிமை எந்த விதத்திலும் கிடைக்கப்போவதில்லை, அனுபவிக்க முடியாது.

திருமணம் நடந்தேறி மணமுறிவு சட்டரீதியாக கிடைத்தாலும் சீதன ஆதனம் பெண்ணுக்குத்தான் சொந்தம். பெண்தான் (மனைவி) உரித்துடையவள். இதில் கணவனுக்கு எவ்வித உரித்தும் கிடையாது. தேடிய தேட்டத்தில் மட்டும் கணவனுக்கும் மனைவிக்கும் பங்கு கிடைக்கும். அதில் மனைவி தடைவிதிக்கமுடியாது. அதாவது தேடிய சொத்தில் மட்டும் இருவரும் சொந்தம் கொண்டாடலாம். சில பெண்கள் தம்க்கு சரியில்லாத கணவன் வந்து வாய்த்தால் கணவனது உழைப்பை தான் வாழும்போதே செலவு செய்யப்பார்ப்பார்கள்.

இதுவும் ஒரு இரகசிய விளையாட்டுத்தான்.

தேசவழமைச்சட்டத்தை மனித முயற்சியுடனான மனித முயற்சியின்றிய மரங்களுடன் தொடர்புபடுத்தி நோக்கின், இன்று மரத்தால் பல்வேறுவகையான பிரச்சினைகள் மரங்களுக்கிடையே ஏற்பட்டு அவை நீதிமன்றம் வரை சென்றதும் உண்டு,

வாள் வெட்டுக்களில் முடிந்ததும் உண்டு. மரங்களுக் கிடையே முடிந்ததும் உண்டு. எனவே இதுபற்றி அறிந்திருப்பதும் நன்றே.

ஒருவர் தனது காணிக்குள் பயன்தரு மரத்தை நாட்டி வளர்த்து பயனைப்பெற அவருக்கு உரிமை உண்டு. அடுத்த காணிக்காரர் அதில் எவ்வித சொந்தமும் கொண்டாடமுடியாது.

இன்னொரு விடயம், இந்த பயன்தரு மரத்தின் கிளை ஒன்று அடுத்தவரின் காணிக்குள் சென்றால் அல்லது சென்ற கிளையில் பழங்கள் காணப்பட்டால் அது யாருக்குச்சொந்தம் என்ற பிரச்சினை எழலாம். அக்கிளையோ அல்லது பழமோ மரத்தை வைத்து வளர்த்தவருக்கே சொந்தம். ஆனால் மனித முயற்சியின்றி தாமாக வளரும் மரங்களைப் பொறுத்தவரை, விளைவுகள் வித்தியாசமாக அமையும். அந்த காணிக்காரர் அதில் சொந்தம் கொண்டாட முடியும்.

தேசவழமைச்சட்டம் பெண்களுக்கு எந்தளவுக்கு சாதகமாக உள்ளது. எது சாதகமாகவுள்ளது, எது ஆண்களுக்கு பாதகமாக உள்ளது, எவை இருவருக்கும் சாதகமாக அமைகின்றது, பயன்தரு மரங்கள், தாமாக

முளைக்கும் மரங்கள்என இவை அனைத்திற்கும் தேசவழமைச்சட்டம் தொடர்பாக அறிந்திருத்தல் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாதக் களம்

## விவாதிக்க ஒரு களமாக இப்பகுதி

உங்கள் கருத்துக்களால் அனுகூல, பிரதிகூலங்களை அலசி ஆராயும் கருத்துமேடை இது. பதிவு செய்யுங்கள் உங்கள் விவாதங்களை

**இன்றைய காலத்தில் மனங்களை உலுக்கும் பாரிய விடயமாக புலமைப்பரிசில் பரீட்சை உள்ளது. அது திறன் பரிசோதிக்கும் பரீட்சை என்பதைவிட பிஞ்சு மனங்களை அதிகமாக அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றது என்பது உண்மையே. இப் பரீட்சை தொடர்பான சாதக பாதகங்களை வெளிக்கொணரும் வகையில் இக்களம் வாய்ப்பை வழங்குகின்றது.**

தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை தேவையா இல்லையா என்ற சர்ச்சையான நிலையில் அதனைத் தவிர்க்க முடியாது தொடர்ச்சியாக அப்பரீட்சை நடைபெற்றவண்ணமே உள்ளது. இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சருக்கு கடந்த மாதம் தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பாக அனுப்பப்பட்ட மகஜரின் பிரதி இது.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களுக்கு

ஐயா !

**தரம் 05 புலமைப்பரிசில் சம்பந்தமாக**

மேற்படி எங்கள் அமைப்பினால் தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தரும் விடயம் யாதெனில் இலங்கையில் உள்ள அரச மற்றும் அரச அனுமதி பெற்ற அரச சார்பற்ற பாடசாலைகளில் தரம் 05 புலமைப்பரிசில் பரிட்சையை நடாத்தி அதன் மூலம் தெரிவாகும் மாணவர்களுக்கு ஒரு தொகை ஊக்குவிப்பு தொகையும் வழங் கப்பட்டுவருவது மகிழ்ச்சியே.

என்றாலும் 10 வயது மட்டுமே நிரம்பிய அந்த பாலகர்களால் இந்த சுமையை சுமக்க முடியாது உள்ளதை தாங்கள் அறிய வேண்டும். தரம் 03 இல் காலடி எடுத்து வைக்கும் முதல் நாள் முதல் புலமைப்பரிசில் எழுதி முடிக்கும் அந்த நிமிடம் வரை அந்த பச்சிளம் பாலகர்கள் படும் வேதனைகள் சொல்லில் வடிக்க முடியாதவை.

இந்ததரம்03,தரம்04,தரம்05,மாணவர்கள்தாய்,தந்தை,அதிபர்,ஆசிரியர்,பாடசாலை, அண்ணன், அக்கா, ஊரார், மாவட்ட மக்கள், மாகாண மக்கள், போன்றவர்கள் பெருமைப்பட வேண்டும் என்பதற்காகவும், புகழ் பெற வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காகவும் கசக்கி பிழிந்து சாறு எடுத்து சக்கைகள் போன்று ஆக்கப்படுகிறார்கள்.

காலை 5.00 க்கு ஒரு பயிற்சி வகுப்பு என்று ஆரம்பிக்கும் அன்றைய நாள், பாடசாலை நேரங்களிலும் புலமைப்பரிசில் பரிட்சைக்கான தயார்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டு பாடசாலை முடிந்த பின்னரும் சாப்பிட நேரமில்லாது, விளையாட முடியாது புலமைப்பரிசிலுக்கு தன்னை தயார் படுத்த ஓடி நிம்மதியாக தூங்க கூட முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

இதன் மூலம் ஒரு வகையான மன அழுத்தமும் அவர்களிடம் காணப்படுகிறது.

இப்படியாக சுமார் 2.5 தொடக்கம் 03 ஆண்டு போராட்டத்தின் பின்னர் அவர்கள் துரதிஷ்டமாக உரிய அங்கீகாரம் கிடைக்காமல் போனால் அவர்களின் நிலை என்ன ஆகிறது என்பதை தாங்கள் சிந்திக்க வேண்டும். அத்துடன் கடந்த காலங்களில் பெற்றோர்,பாதுகாவலர்களால் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளதை தாங்கள் நன்றாக அறிவீர்கள்.

**01. புலமைப்பரிசில் வென்ற மாணவர்களுக்கு பாடசாலை அல்லது பொது அமைப்புக்கள் பாராட்டு விழா நடத்தும் போது பரிட்சை எழுதிய ஏனைய மாணவர்களின் மனோ நிலை என்ன ?**

**02. புலமைப்பரிசில் வென்ற மாணவர்களின் புகைப்படங்களை பெரிதாக அச்சிட்டு பாடசாலை முன்றலில் காட்சி படுத்துவதன் மூலம் பரிட்சை எழுதிய ஏனைய மாணவர்களின் மனோ நிலை என்ன ?**

**03. புலமைப்பரிசில் வென்ற மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு இனிப்பு வகைகளை வழங்கி கொண்டாட்டத்தில் ஈடுபடும் போது பரிட்சை எழுதிய ஏனைய மாணவர்களின் மனோ நிலை என்ன ? போன்ற பல கேள்விகள் எழுகின்றன.**

வெற்றி,தோல்வியை சகிக்க முடியாத (தெரியாத) இந்த வயது மாணவர்களிடம் தமது பெற்றோரின்,ஆசிரியரின் ஆசை நிறைவேறாத காரணத்தால் உண்டான கோபத்தின் வெளிப்பாட்டால் வெற்றி பெற்ற தன் நண்பன் மீது வெறுப்பையும், பொறாமையையும் உண்டாக்க இந்த திட்டம் வழி வகுக்கும் என்பதை தாங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

கட்டாயம் இந்த திட்டம் இருக்க வேண்டும் என விரும்பினால் இந்த புலமைப்பரிசில் வழங்கும் பரிட்சையை தரம் 05 இல் இருந்து இல்லாமல் செய்து சற்று பக்குவப்பட்ட வயதை உடைய தரம் 09 இல் நடாத்த முடியும். (முடிந்தால் ஊக்குவிப்பு தொகையையும் கூட்டலாம்) எனும் எங்கள் ஆலோசனையை முன்வைக்கும் இந்த சந்தர்ப்பத்தில் மேலே எங்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை தாங்கள் கருத்தில் கொண்டு சிறந்த முடிவை விரைவில் அறிவிப்பதன் மூலம் சிறந்த மாணவ சமூகத்தையும், ஒழுக்கமான இலங்கை பிரஜைகளையும் உருவாக்க முடியும்.

வாசகர்களே இக்கடிதம் தொடர்பாக உங்கள் வாதப் பிரதிவாதங்களை அல்லது மறுதலிப்புக்களை எமக்கு அனுப்பினால் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கை

ஏதோவொன்றின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் அவசரமான இந்த உலகத்தில் மனிதர்கள் சந்திக்காத துயரங்களில்லை துயரங்கள் சந்திக்காத மனிதர்களும் இல்லை. அனைவரின் ஆசையுமே துயரங்களற்ற வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதுதான்.

வாழ்க்கை என்னும் நெடும்பயணத்தின் நடைபாதைக் காட்சிகளை மட்டுமே கண்டு களித்துவிட்டு அதுவே வாழ்க்கை என்று நிறுத்திக்கொள்ளும் பலருக்கு அதைத் தாண்டி மறைந்து கிடக்கும் மலைக்க வைக்கும் அற்புதக் காட்சிகள் தெரியப் போவதேயில்லை.

வாழ்க்கைத் தோட்டம் தரவிருக்கும் மலர்க் கொத்துகளை முட்கள் பற்றிய நினைப்பில் தவறவிடுபவர்களே இங்கு அதிகம். துரத்தும் துயர்கள் முட்களானால் துவண்டிடாமல் பயணிக்கத் தெரியாதிருத்தலே காரணமாகும்.

எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கின்றது என நினைத்துக் கவலைப்பட்டுக் கண்ணீர் சிந்துவதைத்தான் பெரும்பாலானவர்கள் செய்கின்றார்களே தவிர எனக்கு மட்டும் நடக்க என்ன காரணமென்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. எல்லாச் சிக்கல்களுக்கும் இரண்டு விதமான தீர்வுதான் உள்ளது. முதலாவது இப்படி ஆகிவிட்டதேயென்று எண்ணித் துயரக் கடலில் மூழ்கி அருகிருப்போரையும் உள்ளிழுத்துக்கொள்(ல்)தல். இரண்டாவது இப்படி ஆகிவிட்டதே இதைச்




சரி செய்வது எவ்வாறு என்று அதற்கான வழியைக் கண்டறிதல்.

பெரும்பாலானவர்களின் தேர்வு முதலாவதாக இருப்பதாலேயே அவர்களுக்குத் துயரப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றது. இரண்டாவதைத் தேர்வு செய்பவர்களுக்கு அந்தச் சிக்கலில் மறைந்து கிடக்கும் வாய்ப்புகள் கண்ணில் தெரிகின்றது. அதைப் பயன்படுத்தி அவர்கள் சிக்கல்களைக் கடந்துவிடுகின்றனர்.

நீங்கள் எதைத் தேர்வு செய்ய வேண்டுமெனத் தீர்மானிப்பது உங்களிடமே உள்ளது.

கவலைகள் உள்ளத்தை வருத்தும் வாழ்க்கை வலிகளை மட்டுமே தந்து வதைக்கும். அவைகளைக் கடப்பது அத்தனை சுலபமானதல்ல. உங்கள்துயரங்களைநீங்கள் ஒரேயடியாக ஒதுக்கிவிடவும் முடியாது ஆனால் நடந்த ஒரு சிக்கலையெண்ணி மீண்டும் மீண்டும் துயரடைவதால் என்ன நன்மை கிடைத்துவிடப் போகின்றது. எந்தத் துயரும் கவலைப்படுவதால் மாறப்போவதில்லை. யாரிடமாவது புலம்பினால் உள்ளம் சிறிது ஆறுதல் அடையாலாம். ஆனால் மீண்டும் அந்தத் துயரம் வருத்தும். நிம்மதி இழக்கப்படும். அதைச் சரி செய்ய வேண்டுமானால் அதைத் தீர்ப்பதற்கான வழியைக் கண்டறிய வேண்டும்.

நீங்கள் கவலையுடனிருக்கின்றீர்களா? அது எப்படியாவது சரியாகிவிட வேண்டுமென்று எண்ணுகின்றீர்களா? உங்கள் கவலைகளைப் பட்டியலிடுங்கள். அதற்காகக் கவலைப்படுவதால் அந்தச் சிக்கல் சரியாகிவிடுமா என்பதைக் குறித்துச் சிந்தியுங்கள். உங்கள் கவலைகளுக்கான தீர்வு எதுவென்பதைத் தீர்மானியுங்கள்.

அதை அடைவதற்கான வழிகளைக் கண்டறியுங்கள். அதை நோக்கிப் பயணியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிடம் மாற்றம் பிறக்கும். அந்த மாற்றம் உங்கள் துயரங்களை வாய்ப்புகளாக மாற்றி உங்களைச் சரியான திசையில் செல்ல வைக்கும்.

இந்த வாழ்க்கை துயரங்களைப் பரிசளிப்பதில் வல்லது. நாம் வல்லவர்களாக இருந்தால் மட்டுமே அவற்றை வெற்றி கொள்ள முடியும்.

துயரங்கள் மட்டுமே வாழ்க்கை என்று நினைப்பவர்களுக்கு வாழ்க்கையே துன்பமாகத் தெரியும். வாழ்க்கையில் துயரங்களும் இருக்கும் என எண்ணிக் கொண்டு சரியான அணுகுமுறையோடு கடந்து செல்லப் பழகிவிட்டால் வாழ்க்கை மகிழ்ச்சியானதாய் மாறும்.

துயரங்களற்ற மனிதர்கள் யாருமே இல்லையென்ற உண்மை நிலையை நம் உள்ளம் எப்போது ஏற்கத் தொடங்குகின்றதோ அப்போதுதான் துயரங்களைத் தாண்டிய தெளிவு பிறக்கும். அந்தத் தெளிவே நம்மை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தும். வாழ்க்கை இன்பங்களின் இருப்பிடம் அதைக் கண்டறிவதற்கான சாவிகளே துயரங்கள் என்பதை உணர்த்தும். இனிமேலாவது கவலைகளை விட்டொழிந்து மலர்க் கொத்துகளை நோக்கிப் பயணிப்போம்.

# கவலை ஒழித்தல் ! !! !!!

தவறான கணிப்பால் ஏற்படுகின்ற ஒரு மன நோய் தான் கவலை. நிகழ்ச்சிகளுடனோ அல்லது பொருள்களுடனோ எந்தத் தொடர்பும் இல்லாமல் மனதுடன் தொடர்பு கொண்டுள்ளது கவலை. மனம் பிரச்சினைகளை அறிந்து கொள்ளமுடியாமல் போனால், பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாவிட்டால் கவலையின் பிடியில் சிக்கிக் கொள்கின்றது. தேவைக்கும் இருப்புக்கும் இடையே இடைவெளி, எதிர்பார்ப்புக்கும் பெறுவதற்கும் இடையே உள்ள வித்தியாசம்.

தனக்கும் பிறர்க்கும் இடையே ஏற்படும் முரண்பாடு, ஆசைக்கும் திறமைக்கும் இடையே உள்ள வித்தியாசம் இவையாவும் கவலைக்கு வித்தாகின்றன. மனதைக் கடமையில் செலுத்தி இடையறாத முயற்சியுடன், முறையான திட்டத்துடன் செயல்பட்டால் இவை அனைத்தையும் சரி செய்ய முடியும்.

ஏதாவது ஒரு நேரத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஒவ்வொருவருக்கும் தோன்றும். அவை வந்து கொண்டும் போய்க் கொண்டும் தான் இருக்கும். பிரச்சினைகளைக் கண்டு பயந்துவிடக் கூடாது. வாழ்க்கையின் ஒரு பகுதி தான் பிரச்சினை. கடந்த காலத்தில் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், அவை எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டன என்பதை எண்ணிப் பாருங்கள். அதே போன்று தற்பொழுது தோன்றியுள்ள பிரச்சனையும் காலத்தில் அவ்வாறே தீர்க்கப்பட்டு விடும்.

பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டுத் தைரியமாக அவற்றைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். பிரச்சனைக்குத் தீர்வு உடனே கிடைக்காவிட்டால் இயற்கைக்கு விட்டு விடுங்கள். சிறிது காலம் பொறுத்திருங்கள். சரியான நேரத்தில் சரியான தீர்வு தானாகவே கிடைத்துவிடும். இங்கு இயற்கைச் சட்டத்தை நீங்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் தான் எந்த ஒரு பிரச்சினையும் பெரியதாகத் தோன்றும். அதற்குத் தீர்வு அதனுள் இருக்கிறது. அது தவறாமல் கிடைத்துவிடும். இதற்கென நாம் ஓர் வழிமுறையை ஏற்படுத்திக் கொண்டு சரியாக அதைக் கடைபிடித்து வந்தால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு பெற்று விடலாம். மனதின் சுமையும் நீங்கிவிடும்.

சோ.வினோஜ் குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்தமாத ஒளிஅரசியின் உதவும் கரங்கள் செயற்றிட்டத்தில் மன்னார் ஈச்சலவைக்காய் எனும் இடத்தில் வசிக்கும் மாற்று திறனாளி திரு அருள்ராஜன் குடும்பத்திற்கு விவசாய மேலாண்மைக்காக 40000 ரூபா பெறுமதியான ஒரு நீர் இறைக்கும் பம்பியும் அதற்கான இணைப்புக்களும் வழங்கிவைக்கப்பட்டது. இந்தஉதவியை புலம்பெயர் தேசத்தை சேர்ந்த நாகலிங்கம் மகேந்திரன் ஒளிஅரசி மூலம் வழங்கி இருந்தார்.
இதனை ஏற்பாடு செய்த எமது புலம் பெயர் எழுத்தாளர் து.திலக்கிற்கு எமது நன்றிகள்




காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்திற்கு ஒளிஅரசி சஞ்சிகையின் உதவும் கரம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலையின் பழைய மாணவனும் அமெரிக்காவில் வசிப்பவருமான திரு தர்மலிங்கம் விக்னேஸ்வரன் (சிவா) அவர்களின் நிதி அனுசரணையில் multimedia projector, screen என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் இவ்உதவியை ஏற்பாடு செய்த ஒளிஅரசியின் துணைஆசிரியர் திருமதி சூர்யா சிவரூபன் அவர்களுக்கும் ஒளிஅரசியின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



காரை/ யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க ,ஒளிஅரசி சஞ்சிகையின் உதவும் கரம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இப்பாடசாலையின் பழைய மாணவனும் அமெரிக்காவில் வசிப்பவருமான திரு. தர்மலிங்கம் விக்னேஸ்வரனின் (சிவா) அவர்களின் நிதி அனுசரணையில் நிழல்பிரதி இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ் உதவியை வழங்கிய விக்னேஸ்வரன் அவர்களுக்கும் ஏற்பாடுசெய்த துணைஆசிரியர் சூர்யா சிவறூபன் அவர்களுக்கும் ஒளிஅரசியின் குழுமத்தின் நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"காலம் நம்மிடம் எதையுமே நிரந்தரமாக
தருவதில்லை தற்காலிக வாழ்வென்பது
காலத்தின் ஒரு பகலிரவில் நமக்கு உணர்த்தப்படுகிறது."

-சாமானியன்

உறவுகளை தேடித்தான்
வளைந்து நெளிந்து
செல்கிறது அந்த
ஒற்றையடிப்பாதை....

வீ.கதிரவன்



நம்பிக்கை துரோகம் நம்பாத ஒருவரிடம்
இருந்து கிடைக்காது!!'
நம் அதிகமாக நம்பியவர்களிடம் இருந்து
மட்டுமே கிடைக்கிறது!!
மனசு ரணமாக்கும்.

உதயா நாச்சியார்



இந்த உலகத்தில் பணக்காரன்
கோடீஸ்வரன் என்று எவனுமே கிடையாது ஆண்டவன் கொடுத்த பணத்தை
பாதுகாக்குற வேலைக்காரன்தான் பணக்காரன்........!
உண்மையான உயிரான உறவுகளை
எவன் சம்பாதிக்கிறானோ அவனே பணக்காரன் இவ்வுலகில்...!!
திமிருள்ள ஏழை

அழகிய தமிழ் மகன் தினேஸ்

ஒரு நொடி தான் வாய்ப்பு
கொடுக்கப்படுகிறது ஆனால்
அதிலும் பிரகாசமாய்
ஜொலித்துவிடுகிறது மின்னல்.

நிலாரசிகன்



மழை வருவதற்கு முன் குடைபிடித்து
காத்திருப்பதும்...
பிரச்சனை வருவதற்கு முன்பு கவலை
படுவதும் ஒன்றுதான்

திலகா செல்லத்துரை

தொலைந்த ஒன்றைத் தேடுவதை விட
தொலைத்த ஒன்றைத் தேடுதல்
கடினமே...

ஆதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமும் அவசரமும்

# யாழ் சமூக செயற்பாட்டு மையத்தின் சமூகப்பணி



பெண்களின் அரசியல் பிரவேசம் என்பது இன்றைய காலத்தில் அவசியமானதும் அவசர மானதுமாகும். காலகாலமாக அரசியல் என்பது ஆணாதிக்க அரசியலாகவே கொண்டு நடத்தப்படுகின்றது. பெண்கள் சார்ந்த விடயங்களை விவாதிப்பதும் முன்னெடுப்பதும் பிரேரணைகளை இயற்றுவதும் கூட ஆண்களாகவே உள்ளனர். இது முரண்பட்ட எண்ணத்தோற்றங்களையே தருகின்றது. பெண்களின் பிரச்சினைகளை பெண்களாலேயே உணரவும் செயற்படுத்தவும் முடியும். இதனை ஆராயந்தறிந்தோ என்னவோ தற்போதைய ஆட்சியில் அரசியல் கட்சிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25வீதம் இருக்கவேண்டும்; என்னும் கட்டாய நிலைப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண்களின் பிரச்சி னைகளுக்கு தீர்வு கிட்டுமா என்பது ஒருபக்கம் இருக்க, பெண் அங்கத்தவர்களின் வார்த்தைகள் எடுபடுமா என்பது கேள்விக்குறியான ஒன்றே. பெண்களின் அரசியல் வெற்றிக்கான ஆயத்தப்படுத்தலாக அமைந்துள்ளதே யாழ் சமூக செயற்பாட்டு மையம்; முன்னெடுக்கும் இக்கருத்தரங்கு.

அரசியலில் பிரவேசிக்கும் எண்ணம் இருந்தாலும் அரசியல் பற்றிய தெளிவான அறிவு இல்லையெனின் அதில் வெற்றியடைவது என்பது சாத்தியமற்ற ஒன்றே ஆகும். பிரதேசசபை, மாகாணசபை, பாராளுமன்றம் என் வரிசையாக அரசியல் களத்தில் குதிக்கவிரும்பும் ஒவ்வொருவரும் சாதாரணமான ஒரு போராட்டமாக அதனைக் கணக்கிடல் கூடாது. அதன் ஆழஅகலம் பற்றி விரிவான அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும். அரசியல் பற்றிய தெளிவான எண்ணம், அதன் சூட்சுமங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து அறியும் திறன் என்பவையே சறுக்கலற்ற அரசியல் பாதையில் பிரவேசிக்க உதவுபவை ஆகும்.

வேட்பாளர்களாக தம்மை நிலைநிறுத்த விரும்புவோர், சமூகநோக்கும், ஒப்பற்ற மனிதநேயமும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். இத்தகைய சகல திறன்களையும் வளர்க்கும் பொருட்டே இந்நிறுவனமானது அரசியல் ஆர்வமும் ஆளுமையும் உள்ள பெண்களை இனங்கண்டு மாவட்டம் தோறும் இருபத்தைந்துபேர் வீதம் ஒன்றுதிரட்டி கருத்தரங்குச் செயற்பாடு ஒன்றை முன்னெடுத்து வருகின்றது. பெண்கள் சமூகத்தின் கண்கள் என்பதை நிச்சயிக்கும் முகமாகவே இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. இவர்களின் மகத்தான இப்பணிக்கு ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண் தேவதை

இன்றைய சமூகத்துக்கு தேவையான கருத்தை மையமாக வைத்து ஆண்தேவதை படத்தை உருவாக்கியிருக்கிறார் இயக்குனர் தாமிரா. தற்போதைய காலகட்டத்தில் கணவன், மனைவிக்குள் நடக்கும் சண்டையால் சிலர் தற்கொலை முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பாடமாக இந்த படம் இருக்கும். ஆடம்பரத்துக்குள் மாட்டிக்கொள்ளாமல் சாதாரண வாழ்க்கையையே மகிழ்ச்சியுடன் வாழுங்கள் என்று சொல்ல வருகிறார் இயக்குநர்.

திரைக்கதையில் எந்த புதுமையும் இல்லாததால் எளிதில் காட்சிகளை கணிக்க முடிவது பலவீனம். திரைக்கதை மெதுவாக நகர்கிறது. குடும்ப அமைப்பின் அவசியத்தை உணர்த்தியதற்காக ஆண் தேவதையைப் பாராட்டலாம். சமுத்திரக்கனி, ரம்யா பாண்டியனுக்கு திருமணமாகி இரு குழந்தைகள் உள்ளனர். ஆடம்பரமாக வாழ ஆசைப்படும் ரம்யா அதற்கான முயற்சி செய்து வருகிறார். இந்த நிலையில் ரம்யாவுக்கு ஐடி கம்பெனி ஒன்றில் நல்ல சம்பளத்திற்கு வேலை கிடைக்கிறது. சமுத்திரக்கனி மெடிக்கல் ரெப்பாக வேலை பார்க்கிறார். இருவரும் வேலைக்கு செல்வதால் குழந்தைகளை கவனிக்க முடியாமல் போகிறது.

இதையடுத்து சமுத்திரக்கனி தனது வேலையை விட்டு குடும்பத்தை பார்த்துக் கொள்ள ஆரம்பிக்கிறார். ரம்யா தனது பணியில் அடுத்தடுத்த கட்டத்திற்கு நகர்ந்து சொந்தமாக வீடுஇ கார் வாங்கும் அளவிற்கு உயர்கிறார். அடுத்தடுத்த கட்டத்திற்கு மேலே செல்ல செல்ல தனது நட்பு வட்டாரத்துடன் பார்ட்டிக்கு செல்ல தொடங்குகிறார்.

ஒருநாள் பார்ட்டிக்கு சென்று மது அருந்திவிட்டு வரும் ரம்யாவுக்கும் சமுத்திரக்கனிக்குமிடையே கடுமையாக சண்டை வருகிறது. இதனால் சமுத்திரக்கனி வீட்டை விட்டு வெளியேறி விடுதி ஒன்றில் தங்குகிறார். அவருடன் அவரது மகள் பேபி மோனிகாவும் உடன் செல்கிறாள்.

கடைசியில் சமுத்திரக்கனி ரம்யா பாண்டியன் இருவரும் இணைந்தார்களா? அவர்களது குடும்பம் என்ன ஆனது?

சமுத்திரக்கனிக்கு என்ன வேடம் கொடுத்தாலும் அந்த வேடமாகவே மாறிவிடுகிறார். மனைவியிடம் பொறுமை குழந்தைகளிடம் கனிவு என்று வழக்கம் போலவே பொறுப்பான நடிப்பால் தனது கதாபாத்திரத்துக்கு வலுசேர்க்கிறார். ரம்யா பாண்டியனுக்கு சற்று எதிர்மறையான வேடம். சராசரி பெண்களின் மனநிலையைப் பிரதிபலிக்கிறார்.

நாகரிக மோகத்தில் திழைத்துப் போயிருக்கும் இன்றைய கால நவீன பெண்களுக்கு அழகான ஒரு படிப்பினையைச் சொல்லிச்செல்கிறது ஆண்தேவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகோ அழகு

# பழமையிலும் புதுமை பேசும் மருதோன்றி

உமாச்சந்திரா பிரகாஷ்

**Lawsonia Inermis** என்ற தாவரவியல் பெயர் கொண்ட மருதோன்றிச் செடி மருத்துவ மூலிகைப்பயன்பாடுகொண்ட செடியாகக் கருதப்படுகின்றது. இளநரை மாற கண்கள் குளிர்ச்சி பெற மருதோன்றி இலை சிறப்பானது என பலராலும் நம்பப்படுகின்றது.

இந்திய மற்றும் தமிழ் கலாசாரத்தின் ஓர் அம்சமாக மருதோன்றிக்கு கிட்டத்தட்ட 5000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு உண்டு என்பது வரலாற்ற ஆசிரியர்களின் கருத்தாகும். உலகம் முழுவதும் உள்ள பல மில்லியன் மக்களின் தலைச்சாயமாக ஆங்கிலத்தில் ஏனுணச் என்றழைக்கப்படுகின்ற பழைமை வாய்ந்த மருதோன்றி பயன்படுத்தப்படுகின்றது.

பழைய காலத்தில் மருதோன்றியை அம்மியில்வைத்து அரைத்து தேசிக்காய் சாறு சேர்த்து கை மற்றும் கால் நகங்களில் பூசி வந்தார்கள். ஆனால் தற்போது கூடுதல் கலை நயத்துடன் ஹிந்தியில் mehendi என்ற சிறப்பு பெயரோடு அழைக்கப்படுகின்ற மருதாணி எம் வாழ்க்கையோடு இணைந்துள்ளது.

ஆசிய உபகண்டத்தில் வாழும் மக்களின் மிகப்பழமையானதும் தொன்மை மிக்கதுமான கலையாக மருதோன்றிக்கலை போற்றப்படுகின்றது. 12ம் நூற்றாண்டில் இந்தியாவில் மொகலாயர்களால் மருதோன்றி அறிமுகப்படுத்தப்பட்டதாக அறியக்கிடைக்கின்றது. ஆனாலும் இதன் ஆரம்பத்தோற்றம் புராதன எகிப்து என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். எது எப்படி என்றாலும் 5000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட மருதாணி நவீன நாகரீக உலகத்திலும் தனது செல்வாக்கைச் செலுத்துவதை எம்மால் அவதானிக்கமுடிகிறது.

தங்கள் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற வகையில் தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் பச்சை குத்திக்கொள்பவர்களின் எண்ணிக்கை இன்றைய நாகரீக உலகத்தில் அதிகரித்துள்ளது. இவ்வாறு பச்சை குத்திக்கொள்பவர்கள் மெகந்தியை அதிகம் விரும்புகிறார்கள்.

மருதோன்றிக்கு தற்காலத்திலும் ஒப்பனை அலங்காரத்தில் சிறப்பிடம் உள்ளது. இந்திய மற்றும் தமிழர் கலாசார நிகழ்வுகளில் மெகந்தி சிறப்பான இடத்தைப்பிடித்துள்ளது. இந்தியத் திருமணங்களில் மெகந்தி விழாவிற்கு சிறப்பிடம் உள்ளமை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். திருமணத்திற்கு முன்பு ஒருநாளில் மெகந்தி விழாவை நடத்துவார்கள். இவ் விழாவில் மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் கலந்து கொள்வார்கள்.

மருதோன்றி இலை பச்சை நிறமாக இருந்தாலும் கலவை செம்மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்தினைக் கொடுக்கின்றது. அத்தகைய இயற்கையுடன் சேர்ந்த நிறம் பலருக்குப் பிடித்தமாக உள்ளது. இதன் நுனி இலை மெகந்திக்கு சிறப்பானதாக கருதப்படுவதாலும் நல்ல பலனைக்கொடுப்பதாலும் நுனி இலையையே மெகந்திக்கு அதிகம் பயன்படுத்துகின்றார்கள்.

மருதோன்றி இலைக்கு குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய தன்மை இருப்பதாலும் தலைமுடி மற்றும் தோல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக விளங்குவதனாலும் மருத்துவ பயன்பாடுகொண்ட செடியாக கருதப்படுகின்றது. வயது என்ற கொடிய வில்லனுக்கு முகம் கொடுக்கக்கூடிய சக்தி இருப்பதனாலும் பூ, இலை, விதை, பட்டை மற்றும் அதன் அனைத்துப் பாகங்களும் மருத்துவ குணம் கொண்டதனாலும் மருதோன்றிச் செடியை மருத்துவத்தின் சக்தி என சிறப்பாக அழைப்பார்கள்.

மாற்றம் என்ற சொல்லைத் தவிர உலகிலே மாற்றம் அடையாதது எதுவுமே இருக்க முடியாது எனக்கூறும் வழக்கம் உள்ளது. தற்காலத்தில் மக்களின் வாழ்க்கைமுறை கலாசார விழுமியங்களின் வழித்தடத்தில் இருந்து மெல்ல மெல்ல விலகிச் செல்கின்றது. ஆனாலும் மருதோன்றி பல வடிவங்களில் இன்றைய இளைய சமுதாயத்தோடு கைகோர்த்துள்ளது என்பதை யாருமே மறுக்கமுடியாது.

மருதோன்றி போடும்போது கைகளில் மருதோன்றிக்கலவை பூசிய பின்னர் அது காய்ந்து உதிராமல் இருக்க தேசிக்காய் சாற்றை கொஞ்சம் கொஞ்சமாக அதன்மேல் சேர்க்கலாம். தேசிக்காய்சாறு கலந்த தண்ணீரில் கைகளை நனைத்து எடுத்தாலும் நல்ல சிகப்புநிறம் கிடைக்கும். மருதோன்றிக்கலவை பூசி குறைந்தது 2 மணிநேரம் கலைக்காமல் வைத்திருந்தால் நல்ல பலன் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒக்ரோபர் மாத இதழில் வெளியான பேசும் படத்திற்கான கவிதைகள்

Oli Arazi in பேசும் படம்



1ம் இடம் பிரபாஅன்பு சாவகச்சேரி

2ம் இடம் கயூரிபுவிராசா நெல்லியடி

3ம் இடம் ஆர். அர்கப்அகமட் அக்கரைப்பற்று

தாய்மையின் மகத்துவத்திற்கு
இதைவிடச் சான்றுண்டோ
பேராபத்தின் விளிம்பில்
அவள் கற்பித்தல்
பாலோடு நீ ஊட்டிய கல்வி போதுமம்மா
நாம் பாரினில் வாழ..

கயூரி புவிராசா
கரவெட்டி.

காலங்கள் கனிந்து
கதவுகள் திறந்து
கனவுகள் பலித்து
பாதைகள் விரிந்து
பாக்கியம் காண
ஆக்கிய உன் கரிசனை
அகிலத்தை ஆளும்.

ஆர். ஹன்சிப்
அக்கரைப்பற்று.

போதுமானதை
பொறுமையாய் ஏற்று
போதிக்கும் அன்னையே
சாதிக்கும் வல்லமை
ஆக்கமல்லவா?
தரணியுன்னைப்போற்ற

ஆர். அர்ஹப் அகமட்
அக்கரைப்பற்று.

அறிவே ஆழப்போகிறது
இந்த அகிலத்தை.
இடம் பொருள் ஏவல் எதற்கு?
கல்லில் கற்றேனும்
கடப்போம் வறுமையை.
நாளைய உலகம்
நமக்காக விடியும் என்ற
நம்பிக்கையோடு .

- பிரபா அன்பு

அகிலத்தை நானறிய
அம்மா நீ துணை நின்றாய் .
அகரத்தோடு அகிலத்தை
அழகாகக் கற்பித்தாய்.
வீதியில் இருந்தேனும்
விரும்பியே நீ விளக்க
விதையான இக்கல்வி
வீணாகிப்போகாதே.

விஜயதீபா
கைதடி

எழுத்தறிவித்தவன் இறைவனாம்
யார் சொன்னது
தண்டவாளக் கரையோரம்
எந்நேரமும் உயிர் போகும் நிலையிலும்
தன் மூன்று குஞ்சுகளிற்கும்
உயிராய் மெய் கற்பிக்கின்றாளே
இறையை விட மேலானவள் அம்மா நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் புங்குடுதீவினைச் சேர்ந்தவரும் இலண்டனில் வசிப்பவருமாகிய இளைய படைப்பாளர் கவிஞர் யாழ் அகத்தியன் எழுதி வள்ளுவர்புரம் 'செல்லமுத்து வெளியீட்டகம்' வெளியீடாக, செல்லாத நாணயம், இன்னொரு கண், நாளைகளின் நறுமணம், என் நதியில் உன் பரிசல், என் நகல் நீ ஆகிய ஐந்து நூல்களின் வெளியீட்டு விழாவானது யாழ் பொதுசன நூலகத்தில் 02.09.2018 அன்று இடம்பெற்றது.

நிகழ்வுக்கு யாழ் மாநகரசபை ஆணையாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன் அவர்கள் தலைமை வகித்தார். பிரதம அதிதி யாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் பங்கேற்றார். இவ்வெளியீட்டு நிகழ்விற்கு 'ஒளி அரசி' சஞ்சிகை ஊடக அனுசரணை வழங்கியதோடு, 'ரியூப்தமிழ்' நிறுவனம் நிகழ்வு ஏற்பாட்டு அனுசரணை வழங்கியது.

இவரது இலக்கியப் பயணம் தொடர ஒளிஅரசியின் வாழ்த்துக்களையும் தெரிவித் துக்கொள்கின்றோம்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# WORLD OF METROPLITAN
## STATE - OF - THE - ART SOLUTIONS

Version II

Canon
Delighting You Always
acer
PRINTRONIX
CASIO.
PRAMAC
GROUP
MITSUBISHI
HEAVY INDUSTRIES, LTD.
YORK
BY JOHNSON CONTROLS
Johnson Controls
Globodox
elecon
HDL
THORN
LIGHTING PEOPLE
CREE
Spectra




metropolitan
*Powered by the best*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org